இரண்டாம் பதிப்பு

விலை: 20
பக்கங்கள்: 28 + 2

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32
கதிர் 250
ஆடி 18 ஆம் நாள்
வியாழக்கிழமை
03 ஓகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048


# படைவிட்டோடிகள் தெற்கில் செய்வதைப் போன்றே ஆயுத பயிற்சிபெற்றோர் இங்கு குற்றமிழைக்கலாம்

## இப்படி ஆருடம் சொல்கிறார் வடக்கு முதலமைச்சர்



யாழ்ப்பாணம், ஓக. 3
இராணுவத்திலிருந்து ஓடிப் போனவர்கள் தெற்கிலே எவ்வாறு பெரிய குற்றங் களைப் புரிந்தார்களோ அதே போல் போர்ப் பயிற்சி பெற்றவர்கள் வடக்கிலும் அவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபட வாய்ப்பிருக்கின்றது. இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட ஆயுதப்பயிற்சிபெற்ற முன்னாள் போராளிகள் சமூகத்தில் இணைக்கப் பட்டுள்ள நிலையில் முதலமைச்சர் இப்படிச் சொல்லியிருப்பது பலத்த சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.
"இந்தச் சமூகத்திற்காக ஏன் போராடினோம் என்று இப்போதுதான் வருத்தப்படுகின்றோம்" என்று முன்னாள் போராளிகள் சிலர் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணத்தில் >> 24

### வல்லைப் படுகொலை நினைவு கூரப்படவில்லை

இந்திய இராணுவத்தால், அமைதியைக் காக்க வந்து ஆக்கிரமிப்புப் படையாக மாறிய அவர்களால். >> 25

### வாள்வெட்டு: இருவருக்கு விளக்கமறியல்

பொலிஸாரை வாளால் வெட்டிக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள இரு இளைஞர்களையும் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தமாறும் யாழ். நீதிவான் எஸ். சதீஸ்தரன் >> 25

### 45 பவுண் திருட்டு



கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகிலுள்ள ஆசிரியரின் வீட்டில் பட்டப் பகலில் புகுந்த திருடர்கள் 45 பவுண் நகைகளைக் களவாடிச் சென்றுள்ளதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
பூபாலசிங்கம் வரதராயா என்பவரது >> 24

# இணக்க முயற்சியை குலைக்கவே வடக்கில் வன்முறை கட்டவிழ்ப்பு

## குற்றஞ்சாட்டுகிறது அரசு

கொழும்பு, ஓகஸ்ட் 3
"அரசால் கட்டியெழுப்பட்டுவரும் நல்லிணக்கத்தையும் அதற்கான முயற்சிகளையும் சீர்குலைக்கவே வடக்கில் ஆவா குழு மூலம் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன" என்று அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.
கூட்டு அரசின் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்றுக் காலை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அமைச்சரவை இணைப் பேச்சாளரும் விளையாட்டுத்துறை அமைச்சருமான தயாசிறி ஜயசேகர கேள்விகளுக்குப் பதிலளித்தார்.
வடக்கில் அதிகரித் >> 25

### வடக்கு சபைக்குப் புதிய உறுப்பினர்



வடக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நியமன ஆசனத்திற்காக யாழ். வணிகர் சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேரன் நேற்றுப் பதவியேற்றுக்கொண்டார். தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவும் நிகழ்வில் கலந்துகொண்டார்.

## பொறுமை இழக்கக்கூடாது சாணக்கியம் அவசியம்

### மாவை எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஓக. 3
அரசியல் தீர்வினை பெறுகின்ற வரைக்கும் உழைக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது. நாம் பொறுமை இழக்கக்கூடாது. இன்னும் எமக்குத் தீர்வு கிடைக்கவில்லை என்று மக்கள் பொறுமை இழந்தாலும் நாம் >> 25

## இக்கட்டான காலத்தில் பதவியேற்பு

யாழ்ப்பாணம், ஓக. 3
மாகாண சபை மீது மக்கள் கடும் விமர்சனங்களைத் தெரிவித்துவரும் ஒரு இக்கட் >> 25

## மகிந்தவினது காலத்திலேயே உருவாக்கப்பட்டது ஆவா குழு

### அன்றும் இன்றும் இயக்குபவர்கள் ஒருவரே என்கிறார் அமைச்சர் ராஜித

"முன்னாள் அரசின் (மகிந்த அரசு) காலத்திலேயே ஆவாக் குழு உருவாக்கப்பட்டது. அதன் பின்புலத்தில் அன்று பணம் கொடுத்து இயக்கியவர்களே இன்றும் அதனை இயக்குகின்றனர்."
இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
கூட்டு அரசின் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்றுக் காலை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அங்கு அவர் இது குறித்துத் தெரிவித்ததாவது:
தற்போது வடக்கில் இடம்பெற்றுவரும் >> 24

see more news in
newuthayan.com

## புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எவ் இணைந்து செயற்படத் தீர்மானம்

>> 25

# மனைவியும் மகளுமே வீட்டை வாங்கினர் எனக்கு எதுவுமே தெரியாது; நான் அப்பாவி

## அமைச்சர் ரவி கருணாநாயக்க விசாரணை ஆணைக் குழு முன் சாட்சியம்

கொழும்பு, ஓக. 3
சர்சைக்குரிய பிணைமுறிக் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய அர்ஜுன் அலோசியஸின் நிறுவனம் எனது வீட்டுக்கான கொடுப்பனவைச் செலுத்தியது எனக்குத் தெரியவே தெரியாது. மனைவியும், மகளுமே வீட்டை வாடகைக்கு எடுத்தனர்.
இவ்வாறு முன்னாள் நிதி அமைச்சரும், அயலுறவுத் துறை அமைச்சருமான ரவி கருணாநாயக்காக அரச தலைவர் ஆணைக்குழு முன் சாட்சியமளித்துள்ளார்.
பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்தும் அரசதலைவர் ஆணைக் குழு நேற்றைய >> 24





உங்களது சேமிப்பு வட்டிக்கு 60% வரை
போனஸ் வட்டியுடன் இலவச ஆயுட் காப்புறுதி!

0114 711 411 www.nationstrust.com
Nations Trust Bank Nations MaxBonus


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவி வித்தியா படுகொலை:
# சுவிஸ்குமாருக்கு எதிராக வலுவான சான்றுகள் உள்ளன

## சி.ஐ.டி அதிகாரி நேற்றுச் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஒக. 3
வித்தியா படுகொலை வழக்கின் ஒன்பதாவது எதிரி சுவிஸ்குமாருக்கு எதிராக வலுவான சாட்சியங்கள், சான்றுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொலிஸ்பரிசோதகர் நிசாந்த சில்வா தீர்ப்பாயம் முன்னிலையில் நேற்றுச் சாட்சியமளித்தார்.

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின் கோரமாகக் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொடூரச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 3 மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் இடம்பெற்று வருகிறது.

மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயம் நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றவளாகத்தின் 2ஆவது மாடியிலுள்ள திறந்த மன்றில் கூடியது.

வழக்குத் தொடுனர் சார்பில் பிரதி மன்றாடியார் அதிபதி பி. குமாரரட்ணம் தலைமையில் அரச சட்டவாதிகள் நாகரத்தினம் நிஷாந்த், மாதினி விக்னேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

9 எதிரிகளான பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார், மகாலிங்கம் சசிதரன், தில்லைநாதன் சந்திரகாசன், சிவதேவன் துஷாந்த், பழனி ரூபசிங்கம் குகநாதன், ஜெயதரன் கோகிலன், மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகியோர் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

புங்குடுதீவு மாணவி கொலைவழக்கின் முதன்மை விசாரணை அதிகாரியான குற்றபுலனாய்வு திணைக்கள பொலிஸ் பரிசோதகர் ஏ.கே. நிஷாந்த சில்வா சாட்சியமளித்தார். அவர் கடந்த 24ஆம் திகதி தீர்ப்பாயத்திடம் சாட்சிமளித்திருந்தார். அதன்போது நேரம்போதாமையால், முதன்மை விசாரணை நேற்றுவரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சாட்சியாளரிடம் தொடர் விசாரணை இடம்பெற்றது. வவுனியா சிறைச்சாலையில், சந்தேகநபர்களுடைய வாக்குமூலத்தைப் பதிவு செய்யும் நோக்குடன் 2015ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம், 27ஆம் மற்றும் 28ஆம் திகதிகளில் சென்றிருந்தோம். அதன் போது அங்கு பிறிதொரு வழக்கின் சந்தேகநபரான முஹம்மட் இப்ராஹீம் என்பவரை எதேச்சையாகச் சந்தித்தேன். அவர் நிதி மோசடி தொடர்பான வழக்கின் சந்தேகநபராவார். அவருக்கு கணினி அறிவு உண்டு என்பது எனக்கு ஏற்கனவே தெரியும். அவருடைய வழக்கையும் நான்தான் விசாரணை செய்திருந்தேன். அந்த நிலையில் ஒரு நாள் அவரிடம் விசாரணைக்கு சென்று இருந்த போது, எனது அலைபேசியும், என்னுடன் வந்திருந்த சார்ஜென்ட் தர உத்தியோகத்தரின் அலைபேசியும் மேசை மீது இருந்தது.

அப்போது சந்தேகநபரான முஹம்மட் இப்ராஹீம் தனது மடிக்கணணி மூலம் எனது அலைபேசியில் இருந்து சார்ஜென்ட் தர உத்தியோகத்தரின் அலைபேசிக்குக் குறுந்தகவல் அனுப்பினார். அது எவ்வாறு? என அவரிடம் வினாவிய போது, அதற்கு தான் ஒரு மென்பொருளை பாவிப்பதாகக் கூறினார்.

இந்தச்சம்பவத்தின் பின்னர் அவருக்கு கணினி மற்றும் மென்பொருள் தொடர்பிலான அறிவு உண்டு என்பதனை அறிந்து கொண்டேன். அதன் அடிப்படையில் வவுனியா சிறைச்சாலையில் நான் அவரை கண்ட போது, அலைபேசியில் எடுத்த காணொலிகளை அழித்தால் மீள எடுக்க முடியுமா? என வினாவினேன். அதற்கு அவர் ஆம் எனக் கூறினார்.

பின்னர் முஹம்மட் இப்ராஹீம்க்கு புதுக்கடை நீதிமன்ற வழக்குத் தவணைக்கு வந்த போது குற்றப்புலனாய்வு திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரிடம் என்னை சந்திக்க வேண்டும் என தகவல் அனுப்பி இருந்தார். அதனை அறிந்து நான் அவரைச் சந்தித்தேன்.

நான் அன்றைய தினம் வவுனியாவில் தன்னைச் சந்தித்து கதைத்துவிட்டு சென்ற பின்னர் இந்த வழக்கின் ஒன்பதாவது எதிரியான சுவிஸ் குமார் தன்னுடன் கதைத்ததாகவும் 'படுகொலை செய்யப்பட்ட மாணவியை வன்புணர்வுக்கு உட்படுத்திப் படுகொலை செய்ததை காணொலியாக அலைபேசியில் எடுத்தார்கள் என்றும், அதனை தற்போது அழித்துவிட்டோம். அதனை மீள எடுக்க முடியுமா ?' என தன்னிடம் கேட்டார்கள் எனவும், தற்போது தானும் தன்னுடைய தம்பியான மகாலிங்கம் சசிதரனும் அரச சாட்சியாக மாற விரும்புவதாகவும், அதற்காக எனக்கு 2 கோடி ரூபா பணம் கொடுக்கத் தயார் எனவும் தன்னிடம் சுவிஸ் குமார் கூறியதாக முஹம்மட் இப்ராஹீம் என்னிடம் தெரிவித்தார்.

அதனை அடுத்து இது தொடர்பில் முஹம்மட் இப்ராஹீமிடம் வாக்குமூலம் பெற ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் அனுமதி பெற்று 24.08.2016ஆம் திகதி கொழும்பு சிறைச்சாலையில் வைத்து முஹம்மட் இப்ராஹீமிடம் வாக்குமூலம் பெற்றோம்.

குற்றச்செயல் நடந்த இடம் மக்கள் நடமாட்டம் இல்லாத இடமாக இருந்தாலும், எதேச்சையான மக்கள் நடமாட்டம் இருக்கும் என்பதனை எனது தனிப்பட்ட உளவாளிகள் மூலம் அறிந்துகொண்டேன். அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டேன்.

அதன்போது அலைபேசிகள் தொடர்பிலான விசாரணைகளையும் மேற்கொண்டேன். சந்தேகநபர்களிடம் இருந்து மீட்கப்பட்ட அலைபேசிகள் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொண்டேன். அத்துடன் குற்றச் சம்பவம் நடைபெற்ற காலப் பகுதியான 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி காலை முதல் 14ஆம் திகதி மதியம் வரையான காலப் பகுதியில் குற்றச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் உள்ள தொலைத்தொடர்புக் கோபுரங்களுக்கு ஊடாக அலைபேசிகளுக்கு உள்வந்த அழைப்புக்கள் மற்றும் வெளிச்சென்ற அழைப்புக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டேன்.

அந்த பகுதியில் காணப்பட்ட நான்கு தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு சொந்தமான நான்கு தொலைத்தொடர்பு நிறுவனங்களிடம் தகவல்களைப் பெற்றுக்கொண்டேன். அதன் அடிப்படையில் 10 பேர் தொடர்பில் விசாரணை செய்யத் தீர்மானித்தோம். அவர்களை ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்துக்கு 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25ஆம் மற்றும் 26ஆம் திகதிகளில் விசாரணைக்கு வருமாறு அழைத்தோம்.

அதில் மாப்பிள்ளை என அழைக்கப்படும் நடராஜா புவனேஸ்வரன் என்பவர் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தோம். அவருக்கு இந்த வழக்கின் 5ஆம் எதிரியான தில்லைநாதன் சந்திரஹாசன் மற்றும் 6ஆம் எதிரியான சிவதேவன் துஷாந்த் ஆகிய இருவரின் அலைபேசியில் இருந்து மாப்பிள்ளை என்பவருக்கு குற்றச்சம்பவம் நடைபெறுவதற்கு முதல் நாளான 12ஆம் திகதி மற்றும் குற்றச் சம்பவம் நடைபெற்ற தினமான 13ஆம் திகதி அழைப்புக்கள் சென்றுள்ளன.

அது தொடர்பில் மாப்பிள்ளையிடம் கேட்ட போது, "தான் கள்ளு விற்பனை செய்வதனால் தன்னிடம், கள்ளு வேண்டும் என கோரி அவர்கள் அழைப்பு எடுத்து இருந்தனர் எனக் கூறினார்.

குற்றச் சம்பவம் நடைபெறுவதற்கு முதல்நாள் 12ஆம் திகதி மதியம் 12.25 மணிக்கும் இரவு 9.56 மணிக்கும் இடையில் சந்திரஹாசன் மற்றும் துஷாந்த் ஆகிய இருவரது அலைபேசியில் இருந்து அழைப்புக்கள் சென்றுள்ளன.

குற்றச்சம்பவம் நடைபெற்ற 13ஆம் திகதி மாலை 3.50 மணிக்கு பிறகு மாப்பிள்ளையின் அலைபேசிக்கு எந்த அழைப்புக்களும் வரவில்லை. இது தொடர்பில் அவரிடம் விசாரணை செய்த போது, அன்றைய தினம் (13ஆம் திகதி) தனது அலைபேசியை நி[illegible] கூறியதனால்தான் [illegible]க் கூறினார்.

அதில் இருந்து இந்தக் குற்றச் சம்பவத்துக்கும் மாப்பிள்ளை என்று அழைக்கப்படும் நடராஜா புவனேஸ்வரனுக்கும் தொடர்பு இருக்கின்றது என்பதனை அறிந்து கொண்டோம்.

அதன் பின்னர்தான் நீதிவான் முன்னிலையில் வாக்குமூலம் அளிக்க விரும்புவதாக நடராஜா புவனேஸ்வரன் தெரிவித்தார். அத்துடன் இந்த வழக்கின் இரண்டாம் எதிரியான பூபாலசிங்கம் ஜெயக்குமார், மூன்றாம் எதிரியான பூபாலசிங்கம் தவக்குமார் ஐந்தாம் எதிரியான தில்லைநாதன் சந்திரஹாசன் ஆறாம் எதிரியான சிவதேவன் துஷாந்த் மற்றும் உதயசூரியன் சுரேஷ்கரன் ஆகியோர் குற்றச் சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று மாணவி பாடசாலை செல்லும் பாதையில் காலை 7 மணியளவில் சின்னஆலடி எனும் இடத்தில் நின்று இருந்தார்கள். அவர்கள் ஏதோ காதல் விடயம் பேச போவதாகவே நான் எண்ணி இருந்தேன். ஆனால் திடீரென அவ்வாறு செயற்பட்டார்கள் என என்னிடம் விசாரணையின் போது மாப்பிள்ளை கூறினார். அதனால் அவர் அந்த இடத்துக்கு எதிர்பாராத விதமாக சென்று இருந்தார் என்பதனை அறிந்து கொண்டேன். அதனால் அவரைக் கைது செய்யவில்லை. அவர் கேட்டதற்கு இணங்க ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் அவர் வாக்குமூலமளிக்க நீதிவானிடம் அனுமதி பெற்று ஏற்பாடு செய்தேன்.

அதேவேளை மாப்பிள்ளையிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது இந்தக் குற்றச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு நபராக உதயசூரியன் சுரேஷ்கரன் என்பவர் உள்ளார் எனும் தகவலை அறிந்தேன். அதன் பிரகாரம் சுரேஷ்கரனை அரியாலையில் வைத்துக் கைது செய்தேன்.

சுரேஷ்கரனிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் மாணவியின் சடலம் மீட்கப்பட்ட இடத்தில் மாணவி வன்புணர்வுக்கு உட்படுத்தப்படவில்லை எனவும், சடலம் மீட்கப்பட்ட இடத்தில் இருந்து சுமார் 200 மீற்றர் தூரத்திலுள்ள கைவிடப்பட்ட வீடொன்றினுள் வைத்தே மாணவி கூட்டுவன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என அறிந்து கொண்டோம். அதன் அடிப்படையில் மாணவி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாக சுரேஷ்கரன் கூறிய இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டோம். அதன்போது எம்மால் மேலதிக சான்றுப்பொருள்களைப் பெற முடியவில்லை.

இந்த வழக்குடன் தொடர்புடையவர் எனும் குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறை பொலிஸாரால் பத்தாவது சந்தேகநபராக ஜெயவர்த்தன ராஜ்குமார் என்பவர் கைது செய்யப்பட்டார். அதேவேளை குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் உதயசூரியன் சுரேஷ்கரன் 11ஆவது சந்தேகநபராகவும் தர்மலிங்கம் ரவீந்திரன் 12ஆவது சந்தேகநபராகவும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மாணவியை வன்புணர்வுக்கு உட்படுத்தி கொலை செய்வதனை காணொலியாகப் பதிவு செய்திருந்தனர் என்பதனை அறிந்துகொண்டு ஆறாவது சந்தேகநபரான சிவதேவன் துஷாந்த் என்பவரின் மடிக்கணணி மற்றும் ரப் ஆகியவற்றை கைப்பற்றினோம். அவற்றை ஆய்வுக்காக ஊர்காவற்றுறை நீதிவானின் உத்தரவுக்கு அமைய மொறட்டுவப் பல்கலைகழகத்துக்கும் சேர்ட் எனும் நிறுவனத்துக்கும் அனுப்பி வைத்தோம். அதன் அறிக்கைகள் எமக்கு கிடைக்கப் பெறவில்லை.

அதேவேளை எமது விசாரணைகளின் போது, குற்றச் செயல் இடம்பெற்ற கால பகுதியில் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் 4ஆம் எதிரியான மகாலிங்கம் சசிதரன், 7ஆம் எதிரியான பழனி ரூபசிங்கம் குகநாதன், 8ஆம் எதிரியான ஜெயதரன் கோகிலன், மற்றும் 9ஆம் எதிரியான சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகியோர் கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் உள்ள தனியார் தங்குமிடத்தில் தங்கி இருந்[illegible] அறிந்து கொண்டேன். அது [illegible] அவர்கள் தங்கி இருந்த தங்குமிட உரிமையாளரிடம் விசாரணைகளை மேற்கொண்டேன்.

இந்த வழக்கு தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் ஒன்றரை வருடங்கள் விசாரணைகளை முன்னெடுத்திருந்தது. விசாரணைகள் முடிவடைந்ததும் விசாரணைக் கோவைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டன.

அதன் பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தால் இந்த வழக்கின் 10ஆவது சந்தேகநபரான ஜெயவர்த்தன ராஜ்குமார் மற்றும் 12ஆம் எதிரியான தர்மலிங்கம் ரவீந்திரன் ஆகியோர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர். அதேவேளை 11ஆவது சந்தேகநபரான உதயசூரியன் சுரேஷ்கரன் அரச தரப்புச் சாட்சியாக மாற்றப்பட்டார் என்று அவர் சாட்சியமளித்தார். 4ஆம் 5ஆம் மற்றும் 9ஆம் எதிரிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சின்னராசா கேதீஸ்வரன் சாட்சியிடம் குறுக்கு விசாரணை செய்தார்.

தனது தரப்பு எதிரிகளான மகாலிங்கம் சசிதரன், பழனி ரூபசிங்கம் குகநாதன் மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் (சுவிஸ்குமார்) ஆகியோருக்கு எதிராக எந்தவொரு சாட்சியங்களோ ஆதாரங்களோ முன்வைக்கப்படவில்லை என்று சாட்சியிடம் கேள்வியெழுப்பினார்.

அதனை அடியோடு மறுத்த குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நிசாந்த் சில்வா, "அந்த மூவருக்கும் எதிராக வலுவான சாட்சியங்கள் தீர்ப்பாயத்தில் முற்படுத்தப்பட்டன. அவர்களால் வழங்கப்பட்ட சாட்சியங்களை நான் அவதானிக்கவில்லை. நீதிபதிகள் அவற்றை சீர்தூக்கிப் பார்ப்பார்கள்" என்றார்.

"சுவிஸ்குமார் உள்ளிட்ட எனது தரப்பு எதிரிகள் மூவரும் மாணவி கொலை இடம்பெற்ற மே 13ஆம் திகதியும் அதற்கு முன்னரான நாள்களிலும் கொழும்பில் தங்கியிருந்தார். அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தீரா? அதற்கான ஆதாரங்கள் உள்ளனவா?" என்று சட்டத்தரணி கேள்வியெழுப்பினார்.

"எதிரிகள் சுவிஸ்குமார், சசிதரன் மற்றும் குகநாதன் ஆகியோர் மே மாதம் 8ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை கொழும்பு, வெள்ளவத்தையிலுள்ள விடுதியில் தங்கியிருந்தார்கள் என்று ஆவணப் பதிவு உள்ளது. ஆனால் அவர்கள் மூவரும் மே 13ஆம் திகதி கொழும்பில் இருந்தார்கள் என்று மட்டுமே விசாரணைகளில் தெரிய வந்தன" என்று சாட்சி தெரிவித்தார்.

"சுவிஸ்குமார், தன்னை அரச சாட்சியாக மாற்றினால் உமக்கு 2 கோடி ரூபா பணம் கையூட்டு வழங்குவதாக இந்த வழக்கில் சாட்சியாக கொண்டுவரப்பட்ட முஹமட் இப்ரான் சாட்சியமளித்திருந்தார். அதனை நீர் ஏற்றுக்கொள்வீரா? அப்படி ஒரு முயற்சி இடம்பெற்றதா?" என்று எதிரி தரப்புச் சட்டத்தரணி கேள்வி எழுப்பினார்.

"அவ்வாறான முயற்சி இடம்பெற்றமையை நான் நம்பியதால்தான் அது தொடர்பில் நீதிவானின் அனுமதியுடன் விசாரணைகளை மேற்கொண்டேன்" என்று சாட்சி தெரிவித்தார்.

சுவிஸ்குமாரின் சார்பில் சொல்கின்றேன், அவரிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சட்டத்தரணி கேட்டார்.

"சுவிஸ்குமார் 27 ஆண்டுகளுக்கு மேலாக சுவிஸில் வசித்துவந்துள்ளார். அங்கு ஹோட்டல் ஒன்றில் முதன்மை சமையல்காரராக அவர் பணியாற்றியுள்ளார். மாதாந்தம் இலங்கை மதிப்பில் 7 இலட்சம் ரூபாவுக்கு மேல் அவர் சம்பளம் பெற்றுள்ளார் ஆகிய விடயங்கள் அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் தெரிய வந்தது" என்று சாட்சி பதிலளித்தார்.

**சிஐடி அதிகாரி 11 மணிநேரம் சாட்சியம்**

வித்தியா படுகொலை வழக்கின் முதன்மை பொலிஸ் அதிகாரியான குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வாவிடம் கடந்த 24ஆம் திகதி சாட்சியப் பதிவுகள் ஆரம்பமானது. அன்று அவர் சுமார் 3 மணி நேரம் சாட்சியமளித்திருந்தார். நேற்று அவரிடம் தொடர் விளக்கம் இடம்பெற்றது. காலை 9 மணிக்கு ஆரம்பமான அவரது சாட்சியம் மாலை 5 மணி வரை இடம்பெற்றது. சுமார் 11 மணிநேரம் நீண்ட சாட்சியத்தை அவர் தீர்ப்பாயத்திடம் வழங்கினார்.

பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வாவின் சாட்சியத்தையடுத்து அவருக்குக் கீழ் பணியாற்றிய உப பொலிஸ் பரிசோதகர் மூவர் சாட்சிகளாக அழைக்கப்பட்டனர். அவர்களை சாட்சியிலிருந்து விடுக்க வழக்கு தொடுனர் சார்பில் பிரதி மன்றாடியார் அதிபதி பி. குமாரரட்ணம் தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் செய்தார். அதற்கு தீர்ப்பாயம் அனுமதியளித்தது.

இந்த நிலையில் சிவில் சாட்சி ஒருவர் இந்தியா சென்றிருந்த நிலையில் அவரது சாட்சியம் தீர்ப்பாயத்தால் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அந்த சாட்சியை இன்று தீர்ப்பாயத்தில் முன்னிலையாகுமாறு கட்டளையிடப்பட்டது. வழக்கு விசாரணை இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது. (வ-37)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி வெட்டு; எதிர்த்து மக்கள் போராட்டம்



யாழ்ப்பாணம், ஒக.3
சமுர்த்திப் பயனாளிகள் மீளாய்வின்போது புறக்கணிக்க ப்பட்டுள்ளோம் என்று தெரிவித்து நேற்று இரு இடங்களில் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். காரைநகர் பிரதேச செயலகம் முன்பாகவும், பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாகவும் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப் பட்டன.

**காரைநகர்**

காரைநகர் பிரதேச செயலகம் முன்பாக பிரதேச செயலகத்தின் கதவை மூடி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
"கடந்த 10 ஆண்டுகளாக சமுர்த்தி நிவாரணம் வழங்கப்பட்டது. 3 மாதங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட மீளாய்வில் நாங்கள் புறக்கணி க்கப் பட்டுள்ளோம். எமக்கு சமுர்த்தி நிவாரணம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்" என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.
மக்களின் போராட்டத்தால் பிரதேச செயலரும், பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் பிரதேச செயலகத்துக்குள் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது.
சம்பவ இடத்துக்கு இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் சென்றார். ஆர்ப்பாட்டத்தில் ஈட்ட மக்களுடன் கலந்துரையாடினார். இந்தக் கலந்துரையாடல் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவுடன் இது தொடர்பில் பேசுகின்றேன் என்று இராஜாங்க அமைச்சர் கூறினார்.
உரிய தீர்வு பெற்றுத் தரப்படும் என்று உறுதிமொழி வழங்கப்பட்டதை அடுத்து ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள் கலைந்து சென்றனர்.

**பருத்தித்துறை**

பருத்தித்துறை, கெருடாவில் மற்றும் தொண்டைமானாறு பிரதேச சமுர்த்திப் பயனாளிகள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். பிரதேச செயலகத்துக்கு முன்பாகக் கூடிய மக்கள் "சமுர்த்தி மீளாய்வின் போது நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். எம்மை மீளவும் சமுர்த்தியில் இணைக்க வேண்டும். பிரதேச செயலர் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்." கோரிக்கை விடுத்தனர்.
(ற-ஜ-26, 250)

## யானையின் தாக்குதலில் விவசாயி உயிரிழப்பு

கொழும்பு,ஒக. 3
அம்பாறை மாவட்டம், அலிக்கம்பை வயல் பிரதேசத்தில் யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. விவசாயி வழமை போன்று நேற்று அதிகாலை வயல் பகுதியில் காவல் கடமையில் இருந்தபோது யானை விவசாயியைத் தாக்கியது என்று தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த விவசாயி அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிசிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. ஆலையடிவேம்பு, கோளாவில் பகுதியைச் சேர்ந்த வைரமுத்து நடராசா (வயது 63) என்பவரே உயிரிழந்துள்ளார். (ற-ஜ)

## கிழக்கு கல்வியில் முன்னேற்றம்

மட்டக்களப்பு. ஒக.3
கிழக்கு மாகாணம் கடந்த காலங்களைவிட தற்போது கல்வியில் முன்னேற்றம் அடைந்து வருகிறது என்று கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. நிஸாம் தெரிவித்தார். கிழக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி மற்றும் பௌதீக வள அபிவிருத்திகள் தொடர்பாக நேற்று கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலைமை பின்தங்கியிருந்தது. அதை அபிவிருத்தி செய்வதற்காகப் பல திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டன. கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக கூடுதல் நிதியைச் செலவிட்டு கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டன. இதன் பிரதிபலனாக கிழக்கு மாகாணத்தில் கல்வி அபிவிருத்தி அடைவு மட்டம் உயர்ந்துள்ளது." - என்றார். (ற-ஜ)



## மன்னாரின் எழுச்சிக்காக கையெழுத்துச் சேகரிப்பு

மன்னார், ஒக.3
'மன்னாரின் எழுச்சி அதுவே எங்களின் முயற்சி' எனும் கருப்பொருளில் மன்னாரில் நேற்று கையெழுத்து சேகரிப்பு நடைபெற்றது.
"மன்னார் மாவட்டத்துக்கு வரவேற்புக் கோபுரம் அமைக்கப்பட வேண்டும், மணிக்கூண்டுக் கோபுரம் அமைக்கப்பட வேண்டும், மின் சமிக்ஞை விளக்குகள் பொருத்த வேண்டும், மன்னார் பொது நூலகத்தைச் சிறப்பாக உருவாக்குவதோடு, கிராமப் புறங்களில் உள்ள நூலகங்களைத் தரமுயர்த்த வேண்டும், மாவட்டத்தில் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்க வேண்டும்" போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தக் கையெழுத்துச் சேகரிப்பு நடைபெற்றது. கையெழுத்துச் சேகரிப்பு நிகழ்வை சர்வ மதத் தலைவர்கள் இணைந்து வைபவ ரீதியாக ஆரம்பித்தனர். தொடர்ந்து மக்கள், சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் எனப் பலர் தமது கையெழுத்துக்களை வழங்கினர்.
இந்தக் கோரிக்கைகள் அடங்கிய மனு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் இணைத் தலைவர்கள், மாவட்டச் செயலர், மன்னார் நகர சபைச் செயலர் ஆகியோருக்கு வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
மாவட்ட தமிழமுது நண்பர்கள் வட்டம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. (ற-56)

## 5 மாதங்களைக் கடந்து தொடர்கிறது போராட்டம்

முல்லைத்தீவு, ஒக.3
இராணுவம் கையகப்படுத்தியுள்ள தமது பூர்வீக நிலங்களை விடுவிக்க வலியுறுத்திக் கேப்பாபிலவு மக்கள் நடத்திவரும் தொடர் போராட்டம் 5 மாதங்களைக் கடந்த நிலையில் தொடர்கின்றது. தமது நிலங்களை விடுவிக்கக் கோரி இந்த மக்கள் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி போராட்டத்தை ஆரம்பித்தனர். இன்றுவரை அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படாத நிலையில் வீதியில் இருந்து தமது போராட்டத்தைத் தொடர்கின்றனர்.
கடந்த எட்டு வருடங்களாகக் கவனயீர்ப்புப் போராட்டங்களை நடத்தினோம். போலி வாக்குறுதிகள் வழங்கப்பட்டு அவை தடுத்து நிறுத்தப்பட்டன. இப்போது நாம் சொந்த நிலத்தில் கால் பதிக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.



நயினாதீவு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், மண்டைதீவு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா உதவித் திட்டங்கள் வழங்கினார். இந்த நிகழ்வு நேற்று வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் அவர் இவற்றை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## இரண்டாம் தவணை பரீட்சையில் வினாத்தாளுடன் விடைத்தாளும்!

கிளிநொச்சி, ஒக.3
கிளிநொச்சி கல்வி வலயத்தில் நேற்று நடந்த தரம் 11க்கான சமய பாடப் பரீட்சை வினாத்தாளுடன், விடைத்தாளும் வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனிடம் கேட்டபோது கிளிநொச்சி வலயத்தில் மட்டும் அவ்வாறு நடந்துள்ளது என்று தெரிவித்தார்.
கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் தற்போது இரண்டாம் தவணைப் பரீட்சைகள் நடைபெறுகின்றன. நேற்று சைவ சமயப் பரீட்சை நடைபெற்றது. பரீட்சை வினாத்தாள்களை மாணவர்களுக்கு வழங்குவதற்காகப் பொதிகளைப் பிரித்தபோது வினாத்தாள்களுடன் விடைத்தாளும் காணப்பட்டுள்ளது. உடனடியாக அனைத்து வினாத்தாள்களில் இருந்தும் விடைத்தாள்கள் பிரித்து எடுக்கப்பட்டுப் பின்னர் பரீட்சை நடத்தப்பட்டது.
இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாகாணக் கல்வி அமைச்சர். "கிளிநொச்சி வலயத்தில் மட்டும் இந்தத் தவறு நடந்துள்ளது. விடைத்தாள்கள் உடனடியாக மீளப் பெறப்பட்டுப் பரீட்சை நடத்தப்பட்டது" என்று குறிப்பிட்டார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிகாட்டுவான் - நயினாதீவு படகுச் சேவைகள் முடக்கம்

## படகு உரிமையாளர்களின் போராட்டத்தால்

யாழ்ப்பாணம், ஓக.3

குறிகாட்டுவான் - நயினாதீவு இடையே படகுச்சேவையில் ஈடுபடும் படகு உரிமையாளர்கள் நேற்றுத் தமது சேவைகளை நிறுத்தினர். அவர்களின் சேவைப் புறக்கணிப்புப் போராட்டம் இன்றும் தொடரும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தென்னிலங்கையைச் சேர்ந்த சிலர் திடீரென இங்கு படகுச் சேவையில் ஈடுபடுகின்றனர். அதனால் எமது வாழ்வாதாரம் பாதிப்படைகின்றது. இது தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியே அவர்கள் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

"சேவைப் புறக்கணிப்புத் தொடர்பில் முன்னரே அறிவிக்கப்பட்டதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்ளவில்லை. தீவுக்குச் செல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் கடற்பாதைப் படகின் மூலம் பயணித்தனர்.

எங்கள் கோரிக்கைகள் தொடர்பில் உரிய பதில் கிடைக்கவில்லை.

கோரிக்கை நிறைவேற்றப்படும். படகுச் சேவையை நடத்துங்கள் என்று எம்மிடம் கோரப்பட்டது. நாங்கள் எழுத்து மூலமான பதில் வழங்கப்பட வேண்டும் என்று கோரினோம். இன்று (நேற்று) எமக்கு வேலணைப் பிரதேச செயலகத்தில் இருந்து கடிதம் ஒன்று வழங்கப்பட்டது. எதிர்வரும் 9 ஆம் திகதி கூட்டம் ஒன்று நடக்கவிருக்கின்றது. அதில் கலந்துகொள்ளுமாறு அதில் கோரப்பட்டிருந்தது. எமது கோரிக்கைகள் தொடர்பாக எதுவும் குறிப்பிடவில்லை. அதனால் எமது போராட்டத்தைத் தொடர்வதற்குத் தீர்மானித்திருக்கின்றோம். நாளை (இன்று) வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடக்கவிருக்கின்றது. அதில் இது தொடர்பாகப் பேசவுள்ளோம். அதன் பின்னரே மேலதிக நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வோம்." என்று நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அதேவேளை, குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவு நோக்கி படகு சேவையில் ஈடுபட எவருக்கும் அண்மையில் அனுமதிகள் வழங்கவில்லை. அது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம் என்று பிரதேச செயலக அதிகாரிகள் குறிப்பிட்டனர். (ற-ஜ)






யாழ்ப்பாணம் புனித ஹென்றியரசர் கல்லூரியின் புதிய கட்டத்துக்கான அடிக்கல் நடும் கத்தோலிக்க சம்பிரதாயபூர்வ நிகழ்வு நேற்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்திய அரசின் உதவியுடன் இந்தக் கட்டடம் அமைக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-37)

## குளவிகள் கொட்டி 38 பேருக்கு பாதிப்பு

கொழும்பு, ஓக.3

பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் தோட்டத்தில் தேயிலைக் கொழுந்து பறித்து கொண்டிருந்த 38 பேர் குளவி கொட்டுக்கு இலக்காகினர். அவர்கள் பொகவந்தலாவ பிரேதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்த சம்பவம் நேற்று பிற்பகல் நடந்தது. குளவி கொட்டுக்கு இலக்கான 38 பேரில் 8 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். ஏனையவர்கள் மருத்துவனை விடுதியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ற-ஜ)

# மகிந்த யுகத்தின் இருள் இன்னும் அகலவில்லை

### அமைச்சர் மங்கள கூறுகிறார்

கொழும்பு, ஓக 3

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் பல ஊடகங்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டன. அந்த இருளின் நிழல்கள் இன்றும் நாட்டுக்குள் உள்ளன என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கை பத்திரிகைச் சபையின் வழிகாட்டலில் கீழ் நடத்தப்படும் "ஊடகக்கல்வி மற்றும் பத்திரிகைத்துறை" தொடர்பான டிப்ளோமா பாடநெறியை பயின்ற 5 ஆவது அணியினருக்குச் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த காலத்தில் 13 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டனர். ஒருவர் காணாமற்போனார். மேலும் 87 ஊடகவியலாளர்கள் பல்வேறு தாக்குதல்களுக்கு உள்ளாகினர்.

இந்த நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரசின் கீழ் ஊடகங்களுக்கு அதீத சுதந்திரம் கிடைத்துள்ளது. அரசின் குறைகளை வெளிப்படுத்தும் அதேவேளை எதிர்கால இருப்புக்கும் நாட்டின் எதிர்காலப் பயணத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடிய ஊடகக் கலாசாரத்தை உருவாக்க இயலுமை கிடைக்கட்டும் - என்றார். (த)



## மாணவிகள் 25 பேருக்கு கற்றல் உபகரணங்கள்

சாவகச்சேரி, ஓக.3

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகள் 25 பேருக்கு நேற்று கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. பன்னாட்டு நிறுவனமொன்றின் அனுசரணையுடன் கொள்வனவு செய்யப்பட்ட கற்றல் உபகரணங்களைச் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மாணவிகளிடம் கையளித்தனர்.

கல்லூரி அதிபர் திருமதி ல. முகுந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் லயன்ஸ் கழகப் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர். (ற-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் தொடர்கிறது கைது வேட்டை

## நேற்றும் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 3
துன்னாலையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் ஏற்கனவே 14பேர்கைதுசெய்யப்பட்டிருந்தநிலையில்நேற்றும்மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், இரவிரவாக 3 பொலிஸ் குழுக்கள் துன்னாலையில் நேற்றும் தேடுதல் நடத்தியுள்ளன.

பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் கடந்த மாதம் 9ஆம் திகதி இளைஞன் உயிரிழந்த சம்பவத்தையடுத்து வடமராட்சிப் பகுதியில்பொலிஸார்மற்றும்கடலோரக்காவற்படையினர் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை பொலிஸார் கடந்த சில வாரங்களாகத் தேடி வந்தனர்.

ஒரு வாரத்துக்கு முன்னர் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். சில தினங்களுக்கு முன்னர் 12 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த நிலையில் நேற்று மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில்இருவர், பருத்தித்துறைநீதிமன்றில்வழக்குக்கு வந்தபோது கைது செய்யப்பட்டுள்ளதுடன் மற்றையவர் வீட்டில்வைத்துக்கைதுசெய்யப்பட்டார்என்றுபொலிஸார் தெரிவித்தனர். (வ-5-26)

---

### வித்தியாபடுகொலைவழக்கு

# எதிரிகளின்பாதுகாப்பில் சிறப்புக் கவனம் தேவை

## யாழ். சிறைச்சாலைக்கு தீர்ப்பாயம் அறிவுறுத்து

வித்தியா படுகொலை வழக்கின் 9 எதிரிகளுக்குமான பாதுகாப்பில்சிறப்புக்கவனம்செலுத்துமாறுயாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற தீர்ப்பாயம் அறிவுறுத்தியது.

வித்தியா படுகொலை வழக்கு விசாரணைகள் 3 மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் முன்னிலையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் இடம்பெற்று வருகிறது. வழக்குத்தொடுனர்தரப்புச்சாட்சியங்கள்இறுதிக்கட்டத்துக்கு வந்துள்ள நிலையில் வழக்கின் எதிரிகளுக்குமான பாதுகாப்பில் சிறப்புக் கவனம் செலுத்துமாறு தீர்ப்பாயம் நேற்றுப் பணித்தது.

"எதிரிகளுக்கான குடிதண்ணீர், உணவு உள்ளிட்டவை சிறைச்சாலையால் மட்டுமே வழங்கப்பட வேண்டும். நீதிமன்ற வளாகத்துக்குள் எதிரிகளை எந்தவொரு நபரும் சந்திக்க அனுமதிக்கக் கூடாது. எதிரிகளை அவர்களது உறவினர்கள் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் மட்டுமே சந்திக்க முடியும்" என யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு தீர்ப்பாயம் அறிவுறுத்தியது. (வ)

---

# 5ஆம் திகதி ஆரம்பமாகின்றது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் மற்றும் யாழ். பல்கலைக் கழகம் இணைந்து 13ஆவது உலக தமிழா ராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் 5ஆம், 6ஆம் திகதிகளில் நடத்தவுள்ளது. இந்த மாநாட்டில் இந்தியா, இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளை சேர்ந்த 200 பேராளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறும் மாநாட்டில் துணைவேந்தர் பேராசிரியர் ரத்னம் விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், ஆளுநர் றெஜினோல்ட் கூரே, தமிழ்தேசிய கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். அமர்வில் பன்னாட்டு மலர் வெளியீட்டு சிறப்புரையை சிறுவர் மற்றும் மகளீர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆற்றவுள்ளார்.

2ஆவது நாள் மாநாடு யாழ். நகரில் உள்ள விடுதியில் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவரும், இலங்கை எதிர்கட்சி தலைவருமான இரா. சம்பந்தன் கலந்து கொள்வார். மதிப்புறு விருந்தி னர்களாக யாழ். இந்தியத் துணைத்தூதரக கொன்சியூலர் எ. நடராஜனும், சிறப்பு விருந்தினர்களாக அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் வடமாகாண சபை அவை தலைவர் சீ.வி.கே. சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற)

---

# உயிருடன் உள்ளபோது அரவணைக்காத உறவுகள் இறுதிச் சடங்குக்கும்வேண்டாம்

## கைதடி இல்லத்திலுள்ள முதியோர்கள் உருக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 3
உயிருடன் இருக்கும்போது எம்மை வந்து பார்த்து ஆறுதல் கூறாத எமது உறவுகள் நாம் இறந்த பின்னர் இறப்புச் சடங்குகளில் ஏன் கலந்து கொள்கின்றார்கள்?

இவ்வாறு கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியவர்கள் மனவேதனையுடன் கேட்கின்றனர்.

முதியோர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் முதியோர்களுக்கான இணக்க சபை அங்குராற்பண நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதியவர்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படையாக கவலையுடன் இல்ல அத்தியட்சகர் முன்னிலையில் தெரிவித்தனர்.

இந்த முதியோர் இல்லத்தில் நாங்கள் பல ஆண்டுகாலமாக நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்திருக்கின்றோம் . ஒரு நாள் நாங்கள் இறக்கத்தான் போகிறோம்.

நாங்கள் இறந்தால் எமது உறவுகளுக்கு அறிவிக்காதீர்கள். எமது உடலை அரச செலவில் தகனம் செய்யுங்கள். நாங்கள் உயிருடன் தற்போது இருக்கும் போதுஎமது உறவுகள் எம்மை வந்து பார்க்கிறார்களா? ஆறுதல் கூறுகிறார்களா? அவர்கள் இந்தப் பக்கம் வருவதில்லை. நாங்கள் உயிருடன் இருக்கிறோமா இல்லையா என்பது பற்றி அவர்களுக்கு தெரியாது. இறந்தன் பின்னர் இறப்புச் சடங்குகளில் கலந்து கொண்டு கண்ணீர் விடுவதில் எவ்வித பயனும் இல்லை என்று முதியவர்கள் சிலர் உறவுகளை தேடி மன உளைச்சலுடன் தெரிவித்தனர்.

முதியவர்களின் இந்த ஆதங்கத்தை கேட்டறிந்த இல்ல அத்தியட்சகர் த. கிருபாகரன் முதியவர்களின் இப்படியான மன உளைச்சலுக்கு உரிய ஆறுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (4-17)

---

# மகளிடம் கொள்ளை; தாய்க்கு வாள்வெட்டு

## முகமூடிக் கொள்ளையர் கைவரிசை

யாழ்ப்பாணம், ஓக. 3
வவுனியாவில் பெண்ணிடம் சங்கிலி கொள்ளையடித்த கொள்ளையர்குழு அதனைத் தடுக்க முற்பட்ட தாயாரை வாளால் வெட்டி விட்டுத் தப்பிச் சென்றிருக்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் ஏ-9கண்டி சாலையில் வவுனியா மூன்றுமுறிப்பில் நேற்றுமுன்தினம் இரவு 10.30 அளவில் இடம்பெற்றது. வீட்டில் தொலைக்காட்சி பார்த்து கொண்டிருந்தபோது வீட்டு வாசலில் நின்று குறித்த குழு அழைத்துள்ளது.

வாசலுக்குக் பெண் சென்ற சென்றபோது அவரது கழுத்திலிருந்து தங்கச் சங்கிலியை அறுத்துள்ளனர். பெண்ணின் கூக்குரல் கேட்டு வாசலுக்குச் சென்ற பெண்ணின் தாயாரை கொள்ளையர் குழு வாளால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

பரமசிவம் ஸ்கந்தலோஜினி (வயது 60) என்பவரே கையில் வெட்டுக் காயங்களுடன் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெறுகிறார்.

ஒரு பவுண் நிறையுடைய தங்க சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டது. (4)

---

# சிங்கள இணையத்தளத்துக்கு எதிராக யாழ். ஊடகவியலாளர் முறைப்பாடு

சிங்கள இணையத்தளம் ஒன்றால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் ஒருவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

டுபாயிலுள்ள பாதுகாப்பு நிறுவனம் ஒன்றில் இடம்பெற்ற 11 இலட்சத்து 98 ஆயிரம் டுபாய் டினார் மோசடியில் இலங்கையைச் சேர்ந்த 6 பேர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. அந்தச்செய்தியைவெளியிட்டசிங்கள இணையத்தளம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் மூவரின் ஒளிப்படங்களை வெளியிட்டுள்ளது. அது தொடர்பில் அந்த ஊடகவியலாளர்களால் பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

"சிங்கள இணையத்தளத்தின் இந்தச் செயற்பாட்டால்எனக்குஅச்சுறுத்தல்ஏற்பட்டுள்ளது. அதுதொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்" என்று பாதிக்கப்பட்ட சுயாதீன ஊடகவியலாளரான சிறிராமச்சந்திரன் மயூரதன் நேற்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த முறைப்பாட்டைசட்டத்தரணிவி. திருக்குமரனுடன் சென்று அவர் வழங்கினார். (வ)

---

### கொழும்பில் தமிழர்கள் கடத்தல்:

# சந்தேகநபர்கள் அனைவரையும் விரைந்து கைது செய்ய உத்தரவு

தலைநகர் கொழும்பில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்குடன் தொடர்புடைய அனைவரையும் தராதரம் பாராமல் கைது செய்யுமாறு கொழும்புநீதிவான் மன்றம் நேற்று உத்தரவிட்டது.

கடற்படை அதிகாரி டி.கே.பி. தசநாயக்க உள்ளிட்ட 6 சந்தேகநபர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 10ஆம் திகதி வரை நீதிமன்று நீடித்தது.

2008ஆம் ஆண்டு வெள்ளை வானில் கொழும்பு உள்ளிட்ட சில பகுதிகளில் கடத்தப்பட்டு பின்னர் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கு கொழும்பு கோட்டைநீதிவான்லங்காஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கின் 7ஆவது சந்தேகநபரான கடற்படை கொமடோர் டி.கே.பி. தசநாயக்க வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைபெறுவதால்அவர்நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவில்லை.

"வழக்குடன் தொடர்புடைய அனைத்து சந்தேகநபர்களையும் தகுதி, தராதரம் பாராமல் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட வேண்டும். விசாரணை கள் விரைவாகமேற்கொள்ளப்படவேண்டும்" என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு நீதிவான் கட்டளையிட்டார்.

சந்தேகநபர் லெப்டினன்ட் கொமாண்டர் பிரசாத் ஹெட்டியாராச்சியைக் கைது செய்ய நீதிமன்று நேற்று மீண்டும் பிடியாணை பிறப்பித்தது. (வ-5)

---

# புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஓக. 3
இராம கிருஷ்ண மிசன் வெளியீடுகளின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை வரை தினமும் மாலை 4 மணிக்கும், தேர், தீர்த்த நாள்களில் காலை 7 மணிமுதல் இரவு 8மணி வரை மூத்ததம்பி அன்னதான மடம் நல்லூர் ஆலயப் பின்வீதியில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டது. (4)

---

# காப்பு வழுங்கல்

யாழ்ப்பாணம், ஓக. 02
பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் வரலக்சுமி விரத விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு மகாலக்குமிக்கு அபிசேக பூஜைகள் நடைபெற்று தொடர்ந்து வரலக்சுமி காப்பு வழங் கலும் இடம்பெறவுள்ளது. (4)

---

# 'வண்ணக்கோலங்கள் கலைநிகழ்வு இன்று'

யாழ்ப்பாணம், ஓக. 3
திருமறைக் கலாமன்றமும் சுனேரா நிறுவனமும் இணைந்து வழங்கும் 'வண்ணக் கோலங்கள்' என்னும் கலைநிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இல 286, முதன்மைச் சாலை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளன. உடுவில் ஆர்க் இல் உள்ள மாற்று ஆற்றல் பிள்ளைகள் வழங்கும் பல்வேறு கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

முதன்மை விருந்தினராக பிராந்திய சுகாதர சேவைகள் திணைக்களத்தின் கணக்காளர் திரு ஆர். சந்திரதாஸ், சிறப்பு விருந்தினராக பாசையூர் திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த அருட்சகோதரி யோலண்ட் மத்தாயஸ் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் ஒருவர் சாவு


கொழும்பு,ஓக.3
சவுதி அரேபியாவில் தொழில் புரிந்து நாடு திரும்பியவர் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் உயிரிழந்தார். மாரடைப்பின் காரணமாக அவர் உயிரிழந்திருக்கலாம் என்று கட்டுநாயக்க வானூர்தி நிலைய சுகாதாரப்பிரிவு தெரிவித்தது.
அவர் பயணித்த வானூர்தி நேற்று அதிகாலை 4 மணியளவில் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தை வந்தடைந்தது. வானூர்தி நிலையத்தில் இருந்து இறக்கிச் சென்றவர் தீடிரென கீழே விழுந்து உயிரிழந்தார்.
தெல்தெனியா பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார். கட்டுநாயக்க வானூர்தி நிலையப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற-ஐ)

## விபத்தில் மூதாட்டி உயிரிழப்பு

கிளிநொச்சி,ஓக.3
கிளிநொச்சிகனகபுரம்வீதிசேவியர் கடைச் சந்தியில் நடந்த வாகன விபத்தில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து நேற்றுநடந்தது. இரு முச்சக்கர வண்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கு ள்ளாகியுள்ளன. விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த 77 வயதுடைய மூதாட்டி உயிரிழந்தார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார்ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
(ற-ஐ-6)

## மாட்டுடன் மோதி விபத்து: இளைஞன் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஓக.3
மட்டக்களப்பு பிள்ளையாரடிப் பகுதியில் இடம்பெற்றவிபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். இந்த விபத்து நேற்றுநடந்தது. இளைஞர் பிள்ளையாரடிவீதியூடாகமோட்டார்சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது குறுக்கே வந்த மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானார்என்றுதெரிவிக்கப்பட்டது. அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.
வாழைச்சேனை, மாணிக்கபுரம் எனும் இடத்தை சேர்ந்த சிறிதரன்நிஷாந்தன்(வயது28) எனும் இளைஞனே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார்ஆரம்பித்துள்ளனர். (ற-ஐ)



# 2020 வரை நிலைக்கும் கூட்டு அரசு

## ரணில் திட்டவட்டம்

கொழும்பு, ஓக.3
அரசு 2020ஆம் ஆண்டு வரை செயற்பட்டு அதன் இலக்கை அடைந்தேதீரும். கடன்தொல்லைகள் இல்லாத சுதந்திர தேசம் ஒன்றை உருவாக்குவதே எமது இலக்கு.
இவ்வாறுதெரிவித்தார்தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. மொறட்டுவ, பிரின்ஸ்ஒப்வேல்ஸ் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட நீச்சல் தடாகத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
நாட்டைப்பெரும்கடன்தொல்லையில் இருந்து மீட்டு சுபீட்சமான நாடொன்றைஉருவாக்கவேகட்சி ரீதியில் பிளவுபடாமல் ஒன்றிணைந்துள்ளோம்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூட்டரசு ஒன்றை உருவாக்கி செயற்படுகின்றோம். அதை கண்டு எதிர் அணியினர் கூச்சலிடுகின்றனர். அரசு 2020ஆம் ஆண்டு வரை செயற்பட்டு அதன் இலக்கை அடைந்தே தீரும்.
அரசுபுதுயுகத்தைநோக்கிசென்று கொண்டுள்ளது. உலகம் முன்னேற்றம் அடைவதை போல் நாடும் முன்னேற்றம் காண வேண்டும். கடன் தொல்லையை நீக்கிய பின் நாடு முன்னேற்றம் காண்பதற்காக புதிய தொழில் துறைகளை உருவாக்க வேண்டும். ஹொரண, இங்கிரியவில் 2ஆயிரம் ஏக்கர் காணியில் தொழில் பேட்டை ஒன்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
அம்பாந்தோட்டைநகரில்10 ஆயிரம் ஏக்கர் காணியில் தொழிற்சாலைகள் உருவாக்க திட்டமிட்டுள்ளது. நாட்டின் உல்லாசத்துறை நல்லமுன்னேற்றம்கண்டுள்ளது. என்றார். (ற)

## அரசியல் கைதிகளின் உறவினர்கள் முதலமைச்சருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஓக.3
தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்து நேற்றுக் கலந்துரையாடினர். சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவினர்களை விடுவிக்க முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.



யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த அரசியல் கைதிகளின் உறவினர்கள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.சிவயோகம் தலைமையில்சந்திப்பில்கலந்துகொண்டனர்.
"என்னைச்சந்தித்ததமிழ்அரசியல்கைதிகளின்உறவினர்கள்சிலர்சிறையில் உள்ளவர்கள் தொடர்பான போதிய விவரங்களை என்னிடம் வழங்கவில்லை.
அந்த விவரங்களை அவர்களுடைய சட்டத்தரணி களுடன் தொடர்பு கொண்டுபெறுவதற்குதீர்மானித்திருக்கின்றோம். சிறையில் வழக்குகள் தாக்கல் செய்யப்படாமல் நீண்டகால மாக தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பாக மிக விரைவில் சட்டமா அதிபருடன் பேசுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தில் அதிககவனத்தை தொடர்ந்தும் செலுத்துவோம்." என்று வடக்கு முதலமைச்சர் தெரிவித்தார். (ற)

## சைட்டத்துக்கு எதிர்ப்பு



கொழும்பு,ஓக. 3
சைட்டம்தனியார்மருத்துவக்கல்லூரிக்குஎதிர்ப்புத்தெரிவித்துமலையகத்தில்மருத்துவர்கள்கறுப்புபட்டிகளைஅணிந்துநேற்றுக்கடமையில்ஈடுபட்டனர். சைட்டம்தனியார்மருத்துவகல்லூரியைமூடுமாறு கோரிநாடளாவியரீதியில்எதிர்ப்புபோராட்டங்கள்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்குஆதரவுதெரிவிக்கும்வகையில்மருத்துவர்கள் கைகளில்கறுப்புப் பட்டிகளை அணிந்திருந்தனர்
டிக்கோயா, நுவரெலியா, லிந்துலை, கொட்டகலை, மஸ்கெலியா நானுஓயாமாவட்டமருத்துவமனைகளின்மருத்துவர்கள் இவ்வாறு எதிர்ப்புத் தெரிவித்தனர்.
அதேவேளை, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டியில்ஆரம்பித்தபேரணிநேற்றுமுன்தினம்கேகாலை-நெலும்தெனிய நகரை வந்தடைந்தது. பேரணி நாளை வெள்ளிக்கிழமை கொழும்பைவந்தடையும். அங்குமாபெரும்போராட்டம்இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ)




கிளிநொச்சி, ஓக.3
சைட்டம்மருத்துவக்கல்லூரிக்குஎதிர்ப்புத்தெரிவித்துகிளிநொச்சியில் நேற்றுகவனவீர்ப்புஆர்ப்பாட்டம்நடத்தப்பட்டது. அதில்மருத்துவர்கள், மருத்துவப் பிரிவு மாணவர்கள், கிளிநொச்சி வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர். நண்பகல் 12 மணி முதல் 2 மணி வரை இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கிளிநொச்சிமருத்துவமனையில்இருந்துகவனஈர்ப்பு பேரணிவைத்தியசாலைபிரதானசாலைவரைமுன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்து ஏ-9 வீதியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (ற-ஐ-35)



சைட்டம் மருத்துவ கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கையெழுத்துச் சேகரிப்பு ஹற்றன் மணிகூட்டு கோபுரத்துக்கு முன்பாக நேற்று இடம் பெற்றது. "இலவச கல்வியை இல்லாதொழிப்பது, நோயாளர்களை ஆபத்தில் தள்ளும்" எனும் தொனிப்பொருளில் இந்தக் கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்பட்டது. (ற-ஐ)



சைட்டத்துக்கு எதிரான தேசிய எதிர்ப்புதினத்தை முன்னிட்டுதிருகோணமலை பேருந்துத் தரிப்பிடத்துக்கு முன்பாக கருப்பு பட்டிகளை அணிந்துபோராட்டம்நடத்தப்பட்டது. இதில்திருகோணமலைபொது வைத்தியசாலை மருத்துவர்கள்கலந்துகொண்டனர். (ஐ)

+94 77 316 5555
உதயன் DIGITAL newuthayan.com
newuthayan.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுகெலும்பு இருந்தால் தமிழ் அரசுக் கட்சியை தூக்கி எறிந்து பாருங்கள்

## அப்பொழுது தெரியும் அதன் அருமை: இப்படிக்கூறுகிறார்தமிழ்விருட்சம்செயலாளர்

யாழ்ப்பாணம், ஒக. 3
உங்களால் முடியும் என்றால்-உங்களுக்கு முதுகெழும்பு இருக்கும் என்றால் -உங்களால் சரியாக நிமிர்ந்து நிற்க முடியும் என்றால் தமிழ் அரசுக் கட்சியைத் தூக்கி எறியுங்கள். அப்பொழுது தெரியும் அதன் அருமை. அந்தத் துணிவு இல்லாவிட்டால்என்னமண்ணாங் கட்டிக்குஇங்குவந்துகூட்டம்நடத்துகிறீர்கள்? மாற்று அணியப்பற்றி கதைக்க வேண்டிய அவசியம் இல்லை.

இவ்வாறுகாரசாரமாகத் தெரிவித்திருக்கிறார்வவுனியாதமிழ்விருட்சம் அமைப்பின்செயலாளரும்கலைஞனுமான மாணிக்கம் ஜெகன்.

"தமிழ் மக்களைப் பொறுப்பேற்பது யார்" என்ற தொனிப்பொருளிலான கருத்தமர்வு வவுனியாநகரில்வாடி வீடுபகுதிமண்டபத்தில்கடந்தசனிக் கிழமை இடம்பெற்றது. அதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்க நாதன், எம்.தியாகராசா, மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ்.சிவகரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். அதில் உரையாற்றுகையில் ஜெகன் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கைவிடத்தான்மாற்றுஅணிபற்றிக் கதைக்கிறீர்களா? மாற்றுஅணி பற்றிக் கதைப்பதற்கு நீங்கள் யார்? மாற்று அணி யாருக்கு வேணும்? மாற்று அணி வேண்டும் என்றால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புஎன்ன மண்ணாங்கட்டிக்கு? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை யாருக்கும் எழுதிக் கொடுக்கப்படவில்லையே. தமிழ் மக்களைப் பொறுத்தளவில் மாற்று அணி தேவையில்லை. தமிழ்த்தேசியக்கூட்டமைப்புத்தான் தேவை. இதனைக் காப்பாற்ற முடியும் என்றால் இப்படியான கூட்டங்களைநடத்துங்கள். இல்லாவிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டுநீங்களே வெளியேறுங்கள். மாற்றுஅணியைப்பற்றிக்கதைக்க வேண்டிய அவசியம் இல்லை. மாற்றுத் தலைமையைப் பற்றியும் கதைக்கத்தேவையில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் தமிழ் மக்களின் தீர்வாக இருக்க வேண்டும். தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தரக்கூடிய தமிழ் மக்களுடைய அரசியல்அபிலாசைகளைத்தீர்க்கக் கூடிய ஒரே ஒரு கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான்.

இந்தக் கட்சியை வளர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று ஆராயுங்கள். அதுதான் தேவை. மற்றும்படி மாற்றுத் தலைமையும் தேவையில்லை. மாற்று அணியும் எங்களுக்குத் தேவையில்லை. யாரையும் நம்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப் படவில்லை.

ஆகவே தமிழ் மக்களின் விடுதலைக்குத்தீர்வாகதமிழ்மக்களிடம் எதிர்கால அரசியலில் ஒரு ஆரோக்கியமான இலட்சியத்தை நீங்கள் கதைக்க வேண்டும் -செயல்படுத்த வேண்டும் என்றால், நிச்சயமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முதன்மைப்படுத்திஎதுவும்செய்யுங்கள். அப்பொழுதுதான்தமிழ்மக்கள் உங்களோடு இருப்பார்கள். நிறையக்கதைக்கலாம். நிறைய ஆய்வுகளைச் செய்யலாம். நிறைய அரசியல்கருத்துக்களைவிதைக்கலாம். ஆனால் தமிழ் மக்களோடு ஊறிப் போயிருக்கிற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வேற எதையும் நீங்கள்தெரிவுசெய்ய உங்களுக்கு உரிமை இல்லை - என்றார். (4, 21)

# கால்நடை புல் வளர்ப்புக்கு பயிற்சி, உதவியை பெறலாம்

## மாகாணப் பணிப்பாளர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 3
வடக்கு மாகாணத்தில் உள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் தங்களது வீடுகளில் புல் வளர்ப்பை மேற்கொள்ளவிரும்பினால்தேவையான அனைத்து உதவிகளையும் மாகாண கால்நடை கூட்டுறவு திணைக்களம் செய்துதரும்.

இவ்வாறு வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்திகள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:



கோப்புப் படம்

வடக்கு மாகாணத்தில் உள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடை வளர்ப்பைவிருத்திசெய்யவும் பால் உற்பத்தியை அதிகரிக்கவும் ஏதுவாக அவர்களுக்கு எமது திணைக்களம் பல உதவித் திட்டங்களை வழங்குகின்றன.

கால்நடை வளர்ப்பாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் அவர்களது வீடுகளில் புல் வளர்ப்பு செய்கையில் ஈடுபடுவதற்கு எமது திணைக்களம் அவர்களுக்கு புல் விதைகளை வழங்குகிறது. எமது திணைக்களத்தின் ஊடாகப் புல் வளர்ப்பில் ஈடுபடுபவர்களுக்குப் புல் வளர்ப்புத் தொடர்பில் பயிற்சி நெறிகளும் வழங்கப்படுகின்றன. புல் வளர்ந்தால்அவற்றைவெட்டுவதற்கு இயந்திரங்கள்வழங்கப்படுகின்றன.

இந்தஉதவித்திட்டங்கள் ஊடாகக் கால்நடை வளர்ப்பை ஊக்குவிப்பதுடன் பால் உற்பத்தியையும் அதிகரிக்க முடியும்.

வீடுகளில் பசுமாடுகளில் இருந்து பெறப்படும் சாணத்தில் இருந்து இயற்கை உரத்தைத் தயாரித்து பொதிகளில் இட்டு வியாபார ரீதியாக விற்பனை செய்வதற்கான உதவிகளை விவசாயத் திணைக்களம் வழங்கி வருகின்றது.

நடப்பாண்டுக்கானஉதவித்திட்டங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுத்தற்போதுவழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. விண்ணப்பங்களைப் புதிதாகப்பெறவிரும்புவோர்தமதுபிரதேசங்களில் உள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் பதிவுசெய்வதன்மூலமாக[illegible] பாதீட்டில் அவர்களுக்கான உதவிகளைவழங்கமுடியும்என்றார். (4-8)

# வெளிவாரி மாணவர்களுக்கு நேரடிக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக. 3
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைமுதற் தேர்வு (வெளிவாரி) அரையாண்டு அடிப்படை முதலாம் அரையாண்டு மாணவர்களுக்கான நேரடிக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை முதல் அடுத்தமாதம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இது இடம்பெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட விரிவுரை மண்டபத்தில் கலந்துரையாடல் இடம்பெற ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய [illegible] தெரிவித்தார். (4)




### குறை தீர்க்கும் குமரா

முருகன் என்று அழைத்து
என் துன்பங்கள் தீர
துணை நிற்கும் தெய்வமே
உன் திருவடியதனில்
என் நெஞ்சம் உருகுது
வேலவனே!
உன்னைத் துதிப்போர்க்கு-
எந்நாளும் வரம் தரும்
நல்லூரானே!
உன் ஆலயம் தேடி நாம்
தொழுவதற்கு
என்ன பயன்
செய்தோமே வேலவனே!

*சுபானுஜன், தெல்லிப்பழை.*

### தூங்கமாட்டோம்

கந்தனின் வீதியிலே
காலனின் தோல்வி
கறுப்பு சீருடைக்குள்
கர்ச்சனை சிங்கம்
பைந்தமிழ், பண்பாட்டின்
பக்கவேர், பக்கம் சாராத
பட்டை கழன்ற வைரம்
வெட்டி சரிக்கப்பட்ட
இனத்தின்நீதியின்
விருட்ச வேர்களில்
துளிர்ந்த தளிர் இளம்செழியர்
நீ நீதிக்கான நெருப்பின்
அவதாரம். இன்றும் என்றும்
சத்திய நெறிக்கு
சாட்சியமானவன்
உள்ளத்தின் கருணையால்
உலகத்தை நனைத்தவன்
பதவியின் வரையறை
கதிரைகள் கடந்து
ஒருபடி உயர்ந்த உத்தமன்
உன் பின்னால் குந்திய
பினாமிகள் யார்
உனக்கா தெரியாது
வித்தியா உன் நீதியின்
தீர்ப்புக்கு இங்கு
எத்தனை எத்தனை
இதயங்கள்
ஏங்கியபடி
சதம் பெறாதவர்
ஆட்சியால்
சாகுமா நிதி
பிள்ளையை கிள்ளி
தொட்டிலை ஆட்டும்
சிவப்பு சால்வைகள்
சிரித்தபடி
நிமல்ராஜ் நீ வீரன்
விருதுக்குரியவன்
மெய் காவலின்
கடமையில்
ஆவியை இழந்த
அருமைத் தோழன்
மதங்களும் இனங்களும்
மனிதனுக்கு என்ன வேலியா
மாண்பினால் உயர்ந்தவன்
மாமனிதன்
தீர்க்கப்படாத
கணியத்துக்கு
தீர்ப்பு வரும் வரை
தீராத எங்கள் தாகங்கள்
ஆதியான எம்
இனத்தின்
பெருமைக்கு
இழிவை தந்தவர்க்கு
தூக்கு வரும் வரை
தூங்க மாட்டோம்

*வேலணையூர்
க.விஜயன்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பகிரங்க விவாதத்துக்கு அமைச்சர் ரிசாத் தயாரா?

## முல்லை அபிவிருத்தி தொடர்பில் சாள்ஸ் எம்.பி. சவால்விடுக்கிறார்

யாழ்ப்பாணம், ஓக.3

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு எந்த அரசியல்வாதிகள் சேவை மேற்கொண்டனர் என்று அந்த மாவட்டத்தில் பகிரங்க விவாதம் மேற்கொள்ள அமைச்சர் ரிசாட் பதியுதீன் தயாரா?

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ. சாள்ஸ் நிர்மலநாதன் சவால் விடுத்தார்.

முல்லைத்தீவு, முள்ளியவளை நீராவிப்பிட்டியில் மீள்குடியேற்றச் சிறப்புச் செயலணி ஊடாக வீடமைப்புக்கான நிதி உதவிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. அதில் முதன்மை அதிதியாக் கலந்துகொண்ட அமைச்சர் றிஷாட் பதியுதீன், முல்லைத்தீவு மாவட்டத்தில், தானே அதிகளவில் உதவிகளைச் செய்திருக்கிறேன் என்பது உட்பட பல விடயங்களைக் கூறியிருந்தார். அது தொடர்பில் சாள்ஸ் நிர்மலநாதன் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து போரால் வெளியேறிய சகோதர மக்களை மீள் குடியமரச் செய்வதற்கு இன்றுவரை எந்த தமிழ் அரசியல்வாதியும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. மாறாக மீள் குடியமர்வு என்னும் பெயரில் ஒரு இனத்துக்கு மட்டும் நிலமும் சலுகையும் வழங்குவதனையே கேள்விக்கு உட்படுத்துகின்றனர்.

"இந்தப் பிரதேசத்தில் உடைந்து போய்க் கிடந்த, அழிந்து போயிருந்த அத்தனை கட்டடங்களையும் மீளக்கட்டியெழுப்பித் தமிழ் மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி நிம்மதியாக வாழ வேண்டுமென்பதில் முழுமூச்சுடன் உழைத்தேன்" என்று அமைச்சர் வாய்ச் சவாடல் விட்டுள்ளார்.

இந்த மாவட்டத்தின் தொழிற்சாலையாக இருந்த பேராறு தும்புத் தொழிற்சாலை கூழாமுறிப்பு ஓட்டுத் தொழிற்சாலை, கரிப்பட்டமுறிப்பு நெற்களஞ்சியம் உட்பட எந்த தொழில் மையமும் இன்றுவரை இந்தமாவட்டத்தில் மீள மைக்கப்படவில்லை.

மீள்குடியேற்ற அமைச்சராகவிருந்த காலத்தில் கேப்பாபிலவு மக்களையும் மீள்குடியமர்வு செய்கின்றோம் என்ற போர்வையில் நடுக்காட்டில் இறக்கி விட்டதுதான் மீள்குடியமர்வா?

அன்றைய காலத்தில் வடக்கின் 5 மாவட்டத்திலும் மீள் குடியமர்ந்த மக்களுக்கு அரசின் 25 ஆயிரம் ரூபா பணம் வழங்கியதாக அரச தரப்பினரும் அமைச்சரும் கூறுகின்றனர். ஆனால் வடக்கில் மட்டும் இன்னமும் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இந்தப் பணம் இன்றுவரையில் வழங்கப்படவே இல்லை.

பணம் வழங்கப்படாதமைக்கு மாவட்டச் செயலர்களே சாட்சியாக உள்ளனர். அவ்வாறிருக்க எவர் பொய்கூறுகின்றனர் என்பதே மக்களின் கேள்வியாகவுள்ளது. ஒரு இனத்துக்கு மட்டும் பணி புரிபவர் அல்ல அமைச்சர் . முல்லைத்தீவில் வெறும் 78 தென்னிலங்கையர்களுக்கு மட்டுமே மீன்பிடி அனுமதி உள்ளதாக கொழும்பு அரசே கூறிய பின்பும், இன்று 500 பேருக்கும் அதிகமாகத் தொழில்புரியும் நிலையில் இந்த அமைச்சர் வாய்திறக்கவே இல்லை.

மகாவலி அபிவிருத்தி என்னும் போர்வையில் தமிழ் மக்களின் 2 ஆயிரத்து 524 ஏக்கர் நிலம் முதல் கட்டமாகவும் தற்போது 850 ஏக்கரும் பறிபோவது தொடர்பில் எந்த அக்கறையும் கொள்ளவில்லை. இதே மாவட்டத்தில் 2 ஆயிரம் தமிழ்மக்களுக்குக்காணி இல்லாதமைக்கு அமைச்சரால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. மாறாக தனது இனம் சார்ந்து 925 குடும்பங்களுக்காக புலிகளால் நடப்பட்ட காட்டை அழிக்கத் துடிக்கின்றார்.

இதே மாவட்டத்தில் தற்போது 15 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு வீடுகள் தேவையாகவுள்ளன. அதில் ஒரு இனத்துக்கு மட்டும் 2 ஆயிரம் வீடுகளை அமைக்கவுள்ளனர். அப்படியிருக்க செயலணி மீது எவ்வாறு நம்பிக்கை கொள்ள முடியும்?

தமிழர்கள் ஒன்றும் அரசோடு மட்டும் ஒட்டிநின்று பிழைப்பு நடத்திவிட்டு வந்து இன்று அதியுச்ச அதிகாரம் வேண்டுமெனக் கோரவோ அல்லது சமஷ்டிதான் தீர்வு என்று வலியுறுத்தி வடக்கும் கிழக்கும் இணைய வேண்டுமென விடாப்பிடியாகவோ நிற்கவில்லை.

அல்லது பத்திரமாக அனுப்பி இன்னுமோர் இடத்தில் காத்திருந்துவிட்டு வந்து உரிமையை கோரி நிற்கவில்லை. அல்லது அடுத்தவன் உயிரை கொடுத்து போராடும்போது தப்பி நின்று தீர்வு எட்ட முயற்சிக்கும் சந்தர்ப்பத்தில் அதேபங்கினையும் கோரிநிற்கவில்லை. தமிழ்மக்கள் இன்றைய நிலையில்கூட 50 ஆயிரம் போராளிகளதும் 2 லட்சம் அப்பாவிகளினது உயிரையும் விலையாகக் கொடுத்து 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அங்கவீனர்களாகவும் 80 ஆயிரம் பேர் விதவைகளாக்கப்பட்டும் பல ஆயிரம் கோடி ரூபா சொத்துக்களுக்கு என்ன நடந்தது எனத் தெரியாத நிலையிலேயே இவற்றை கோரி நிற்கின்றனர். அதனைப் புரிந்து கொள்ள வேண்டும்- என்றார். (4,101)

# பொய்யான தகவல் வழங்கினார் என்று பணிப்பாளர் மீது ஆசிரியர் குற்றஞ்சாட்டு

## தகவல் அறியும் உரிமைச் சட்ட ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு

யாழ்ப்பாணம், ஓக.3

தனது நியமனம் முறைகேடாக இடம்பெற்றுள்ளது என்று ஆசிரியர் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார். அது தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகத் தகவல் கோரப்பட்டபோதும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் பொய்யான தகவல்களை வழங்கியுள்ளார் என்றும் குறித்த ஆசிரியர் குற்றஞ்சாட்டுகிறார். அது தொடர்பில் தகவல் அறியும் ஆணைக்குழுவின் தலைவருக்கு குறித்த ஆசிரியர் மேன் முறையீடு செய்துள்ளார்.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்தது. இது தொடர்பில் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் அதிபர் போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்த தரம்3 அதிபர்களுக்கு பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது. நியமனம் வழங்கப்பட்ட அதிபர்களைச் சுயவிருப்ப இடமாற்றம் போன்று அச்சுறுத்தி அவர்களிடமிருந்து கடிதம்பெற்று வேறுபாடசாலைகளுக்குப் புதிய அதிபர்களை இடமாற்றி அதிபர் வெற்றிடம் ஏற்படுத்தப்பட்டது. அதே பாடசாலைகளுக்கு விண்ணப்பம் எதுவும் கோரப்படாமல் ஆசிரியர் சேவையில் உள்ளவர்களுக்கு முறைகேடாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

1998/23 கல்வியமைச்சின் சுற்று நிருபத்தின் அடிப்படையில் அதிபர் வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் விண்ணப்பம் கோரி .நேர்முகத்தேர்வின் அடிப்படையிலேயே வெற்றிடம் நிரப்பப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு வடக்கு மாகாண கல்வித்திணைக்களம் இதுவரை மேற்கொள்ளவில்லை.

கடந்த26 ஆம் திகதி இவை தொடர்பான தகவல் கோரி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் குறித்த ஆசிரியர் வடக்கு மாகாண கல்வித்திணைக்கள தகவல் அறியும் உத்தியோகத்தரிடம் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. அதில் "போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த அதிபர்களுக்குப் பாடசாலைகள் வழங்கப்பட்டு அவர்கள் அந்தந்தப் பாடசாலையிலிருந்து நீக்கப்பட்டு ஆசிரியர் சேவையிலுள்ளவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவ்வாறு நியமிக்கப்பட்ட பாடசாலைகளின் விபரம் மற்றும் எந்த சுற்றுநிருபத்துக்கமைய நியமனம் வழங்கப்பட்டது? , அவ்வாறு நியமிக்கும் அதிகாரம் வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளருக்கு உள்ளதா?" போன்ற கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன. அதன் பதிவிலக்கமாக RTI/01/06 என வழங்கப்பட்டது. இதற்கானபதில் 14 நாள்களுக்குள் வழங்கப்படவேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் 21 நாள்களின் பின்னரே பதில் வழங்கப்பட்டது. அதில் குறித்த ஆசிரியரால் கோரப்பட்டிருந்த தகவல்களுக்கு பதில்வழங்காமல்

"பரீட்சையில் சித்தியடைந்த அதிபர்களுக்குக் குறித்த வலயக் கல்விப் பணிப்பாளர்களின் சிபார்சின் அடிப்படையில் பாடசாலைகள் வழங்கப்பட்டன. அவ்வாறு நிலை நிறுத்தப்பட்ட ஆசிரியர்களில் சிலர் சுயவிருப்பின் பேரில் சேவை நிலைய மாற்றம் பெற்றுக்கொண்டனர் என்பதை தங்களுக்கு தெரிவிக்கின்றேன்" என்று கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது. இதனால் குறித்த ஆசிரியர் தன்னை ஏமாற்றும் விதமாகவே தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து

வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தில் கோரிய விடயத்துக்கானபொருத்தமான தகவல்களைப் பெற துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார். குறித்த ஆசிரியர் கொழும்பு 7 இல் அமைந்துள்ள தகவல் அறியும் ஆணைக்குழுவின் தலைவருக்கு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது - என்றுள்ளது. (4)

## நவீன தொழில்நுட்ப உதவிகளுடன்

# காளான் வளர்ப்பு மாதிரிக் கிராமங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## மாகாண விவசாயப் பணிப்பாளர் கோரிக்கை

அச்சுவேலி, ஓக.3

வடக்கு மாகாணத்தில் காளான் செய்கையை அபிவிருத்தி செய்து மேல்நிலைப்படுத்தப்படவுள்ளது. அதற்கு ஏதுவாக மார்க்கத்துறை பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமும் கொரிய நாட்டு கோபியா நிறுவனமும் இணைந்து தொழில்நுட்ப உதவி மற்றும் நிதி அனுசரணையுடன் கூடிய காளான் வளர்ப்பு மாதிரிக் கிராமங்களை நிறுவ முன்வரவேண்டும் என்று வடக்கு மாகாண விவசாயத் திணைக்கள பணிப்பாளர் எஸ்.சிவகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண காளான் செய்கையாளர்களுக்கு வட்டக்கச்சி விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற பயிற்சிக் கருத்தரங்கில் வடக்குமாகாண விவசாயப் பணிப்பாளர் கோரிக்கையை நேரில் விடுத்திருப்பதுடன் கோரிக்கை தொடர்பான கடிதங்களையும் கோபியா நிறுவன பணிப்பாளருக்கு மார்க்கத்துறை [illegible] காளான்செய்கை மாதிரிக் கிராமம் தொடர்பாக வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் மேலும் தகவல் தெரிவிக்கையில்.

வடக்கு மாகாணத்தில் உள்ள கிளிநொச்சி முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஐந்து மாவட்டங்களிலும் 150 மேற்பட்டவர்க்ள காளான் செய்கையில் ஈடுபட்டுள்ள போதிலும் வடக்கு மாகாணத்தில் காளான் செய்கை எதிர்பார்த்த அளவுக்கு அபிவிருத்தி அடையவில்லை. மேல்நிலை பெறவில்லை. வடக்கு மாகாணத்தில் காணப்படும் வறட்சியான காலநிலையும் சூழ்நிலை முரண்பாடுகளும் காளான் செய்கையை பாதிப்படையச் செய்து வருகின்றன.

வடக்கு மாகாணத்தின் வரண்ட காலநிலை காளான் செய்கையில் எதிர்பாராத பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றது. இதனால் காளான் செய்கையில் ஈடுபடுபவர்கள் வருமான இழப்புக்கு உள்ளாவதுடன் மனச் சோர்வுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

[illegible]யில் காளான் உணவுப் பயன்பாடு அதிகரித்து வருகின்றது. ஆனால் உற்பத்தி அளவு போதுமானதாக இல்லை. எனவே வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் காளான் செய்கை அபிவிருத்தி செய்யப்படவேண்டும். மேல்நிலை பெறவேண்டும். வறட்சியை எதிர்கொள்ளத்தக்க புதிய தொழில்நுட்பங்கள் காளான் செய்கையில் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். வட பகுதிக்கு ஏற்புடைய வறட்சிக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய புதிய இனங்கள் கண்டறியப்பட வேண்டும். வடபகுதியில் காளான் செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு ஏதுவாக காளான் செய்கை மாதிரிக் கிராமங்கள் உருவாக்கப்பட வேண்டும். காளான் செய்கை மாதிரிக் கிராமங்களை மர்க்கத்துறை பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமும் கொரிய நாட்டு கோபியா நிறுவனமும் இணைந்த நிலையில் உருவாக்க முன்வர வேண்டும். காளான் செய்கை மாதிரிக் கிராமங்களுக்கு தொழில்நுட்ப உதவி மற்றும் நிதி அனுசரணை வழங்கவேண்டும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பணிப்பாளர்களிடமும் நேரில் வலியுறுத்தி இருப்பதுடன் கடிதங்களையும் அனுப்பியுள்ளேன் எனத் தெரிவித்தார். (4,11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி அரசு கூறுவதெல்லாம் பச்சைப் பொய்

## கண்மூடித்தனமான செலவுகளைச் சமாளிக்கவே அம்பாந்தோட்டை தாரை வார்ப்பு என்கிறார் மகிந்த

கொழும்பு, ஒக 3
தேசிய அரசு செய்துவரும் கண்மூடித்தனமான செலவுகளைச் சமாளிப்பதற்காகவே அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனது அரசு வாங்கிய கடனை அடைப்பதற்காக அது விற்கப்படுவதாகக் கூறுவது பச்சைப் பொய்.
இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அம்பாந்தோட்டை ஒப்பந்தம் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்
அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
ஏற்கனவே இந்தத் துறைமுகத்தைத் தனியார்மயப்படுத்திய தன் மூலம் பெற்றுக் கொண்ட 1.12 பில்லியன் டொலர்கள் போன இடம் தெரியவில்லை. அவ்வாறே இப்போது கிடைக்கவுள்ள 13.7 பில்லியன் டொலர்களும் விரைவில் காணாமற் போய்விடும்.
எனக்கு அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவுக்கு விற்கும் எண்ணம் அப்போதே இருந்ததாக இந்த அரசு சோடித்துவரும் செய்திகள் அப்பட்டமான பொய்.
பெரும் கடனின் மூலம் அமைக்கப்பட்ட இந்தத் துறைமுகத்தை விற்கும் அவசியம் எனக்கு இருக்கவில்லை.
அந்தத் துறைமுகம் சரியாக நிர்வகிக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக இலாபம் ஈட்டியிருக்கும். தங்களது கையாலாகாத்தனத்தை மூடிமறைப்பதற்காக நான் வாங்கிய கடனை அடைப்பதற்காகவே துறைமுகத்தைக் குத்தகைக்கு விட்டிருப்பதாக அரசு கூறிவருகின்றது.
அது பச்சைப் பொய்.
தனது கண்மூடித்தனமான செலவுகளைச் சமாளிக்க முடியாமல் அரசு விழி பிதுங்கி நிற்கின்றது. திறைசேரி கிட்டத்தட்ட வங்குரோத்து நிலைமைக்கு வந்துவிட்டது.
அடுத்த மூன்று வருடங்களுக்கு இந்தத் தேசிய அரசை அசைக்கமுடியாது என அரச தலைவர் மைத்திரி மார்தட்டி வருகின்றார். அரசைக் கவிழ்ப்பதற்கு நாங்கள் சூழ்ச்சிகள் செய்துவருவதாகக் கூறி மக்களை ஏமாற்றப் பார்க்கின்றார்.
அவரது இந்தப் பொய் வேடம் நீண்ட நாள்களுக்கு நிலைக்கப் போவதில்லை- என்றார். (த)

# மழை தொடர்வதால் உக்கிரமாகும் டெங்கு

## சுத்திகரிப்புப் பணிகளைத் தீவிரமாக்குமாறு அதிகாரிகளுக்கு சுகாதார அமைச்சர் பணிப்பு

கொழும்பு, ஒக. 3
நாட்டின் பல பாகங்களில் இடைக்கிடையே பெய்துவரும் மழையால் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் அதிகரித்திருப்பதால் நாடெங்கும் மேற்கொள்ளப்பட்டுவரும் சுத்திகரிப்புப் பணிகளைத் தொடர்ந்து நடத்துமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தனது அமைச்சு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.
அதன்படி இன்று ஆரம்பமாகும் டெங்கு ஒழிப்புப் பணிகள் நாளையும், நாளை மறுதினமும் நாடெங்கும் தொடர்ந்து நடைபெறும். பாடசாலைகள், வீடுகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.
கொழும்பு, கம்பகா, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், காலி, மாத்தறை, கண்டி ஆகிய மாவட்டங்களில் தீவிர கவனம் செலுத்தப்படும். இந்தப் பணிகளுக்குச் சுகாதார ஊழியர்கள், முப்படையினர் உட்பட்ட 2 ஆயிரம் குழுக்கள் ஈடுபடுத்தப்படவுள்ளன எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
இந்த வருடம் சுகாதார அமைச்சு மேற்கொண்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளின்போது நாடெங்கும் 14 இலட்சத்து 63 ஆயிரத்து 33 இடங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றுள் 34 ஆயிரம் இடங்களில் டெங்கு நுளம்புக் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டன. 23 ஆயிரத்து 519 பேருக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு கூறியுள்ளது. (த)

# இலத்திரனியல் கடவுச்சீட்டு விரைவில்

இலங்கைக் குடிமக்களுக்கு இலத்திரனியல் கடவுச்சீட்டு ஒன்றை அறிமுகம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
ஒருவரது அனைத்து வகையான தகவல்களையும் கொண்ட 'சிம்' அட்டையை உள்ளடக்கி இலத்திரனியல் மாதிரி ஒன்று வெளியிடப்படவுள்ளது.
இதனடிப்படையில் இலத்திரனியல் கடவுச்சீட்டை அறிமுகப்படுத்தல் மற்றும் வெளியிடல் வேலைத்திட்டத்தை முறையான ஆய்வின் பின்னர் செயற்படுத்துவது குறித்து யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.
உள்நாட்டலுவல்கள் அமைச்சர் எஸ்.பி. நாவின்ன மற்றும் தொலைத்தொடர்பு, டிஜிற்றல் உட்கட்டமைப்பு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் இணைந்து அமைச்சரவையில் குறித்த யோசனையை முன்வைத்தனர். இதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. (த)

# மாலி செல்லும் படை குறித்துஆராய்வதற்கு வந்தது ஐ.நா. குழு

அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடுவ தற்காக மாலி செல்லவுள்ள இலங்கை இராணுவத்துக்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய நியூயோர்க் மற்றும் மாலிக்கான ஐ.நாவின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கை வந்துள்ளது.
லெப்டினன்ட் கேணல் கோர்லொஸ் வாஸ் தலைமையிலான குறித்த குழுவில், உயர் மட்ட அதிகாரிகள் அடங்கியுள்ளனர்.
அந்தக் குழு, இராணுவத் தளபதி மகேஸ் சேனாநாயக்கவை நேற்று முன் தினம் சந்தித்து குறித்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளது.
இதன்போது மாலி செல்லும் இலங்கை இராணுவத்தினருக்கான ஏற்பாடுகள் குறித்து இராணுவத் தளபதி, அவர்களுக்கு விளக்கமளித்தார் என இராணுவத் தக வல்கள் தெரிவித்தன. (த)


## நன்றி நவிலல்

தென்மராட்சி பிரதேச மாநாட்டு மண்டபத்தில் 28.07.2017 அன்று நடைபெற்ற எனது படைப்புக்களின் தொகுப்பான " ரஞ்சன மஞ்சரி " நூல் வெளியீட்டு நிகழ்வு சிறப்புற நடைபெற ஆதரவு நல்கிய தலைவர், விருந்தினர்கள், இறைவணக்கம், வரவேற்புரை, வெளியீட்டுரை நயப்புரை, நூலிற்கான அணிந்துரை, நூலாசிரி யர் குறிப்பு வழங்கியோர், முதற்பிரதி, சிறப்புப் பிரதிகள் மற்றும் ஏனைய பிரதிகள் பெற்று என்னை ஊக்கப்படுத்திய அன்புள்ளங்கள், நூற் பதிப்பிலிருந்து வெளியீட்டு நிகழ்வு வரை சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கலாசாரப் பேரவை உறுப்பினர் கள் என் அழைப்பை ஏற்று வருகை தந்த நண்பர்கள், பெரியவர்கள் அனைவருக்கும் எனது பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி ரஞ்சனா நவரத்தினம்

## 15 ஆம் ஆண்டு நினைந்துருகல்

நயினை மண்ணில் 03 ✣ 09 ✣ 1936



அம்பாளின் பாதத்தில் 19 ✣ 07 ✣ 2002

நயினை அமரர்
### இராமநாதன் கோபாலபிள்ளை

திதி: ஆடி பூர்வபட்ச ஏகாதி (03.08.2017)

அறிவோடு அன்பை அமுதோடு
ஊட்டி எம்மை வளர்த்தெடுத்த ஐயா!
தெளிவோடு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்துள் புகுந்த எம் ஐயாவை
பதினைந்தாம் ஆண்டு நினைவில் இன்று கைகூப்பி
வணங்கி நிற்கின்றோம்.

2/1, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
077 194 7183

[illegible]
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராஜலட்சுமி கந்தசாமி



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், சுதுமலை வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜலட்சுமி கந்தசாமி 30.07.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னத்தங்கம் தம்பதிகளின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி (ஓய்வுபெற்ற லிகிதர் - இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும், கந்தராஜி (பிரான்ஸ்), கந்தராஜ் (Avery), ரூபராஜ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வாசஸ்பதி (பிரான்ஸ்), சிவசொர்ணகௌரி (ஆசிரியை - யாழ். இந்துக்கல்லூரி), சுனிதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், மனோசாந் (பிரான்ஸ்), நிரோசாந் (பிரான்ஸ்), ஆரபி (பிரான்ஸ்), பிரணவி (பிரான்ஸ்), சுரபினி (மாணவி - வேம்படி மகளிர் கல்லூரி), ஆருதி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2017) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் வீதி,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

தகவல்:-
க.கந்தராஜ் (மகன்)
077 670 1568

### திருமதி வசந்தி பூபாலசிங்கம்



இணுவில்கிழக்கு, கொக்கன் வளவைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தி பூபாலசிங்கம் (29.07.2017) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசுந்தரம் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - கணேசமணி தம்பதியரின் மருமகளும் பூபாலசிங்கத்தின் அன்புமனைவியும் பிரியந்தி, அபிராமி, கபிலன் ஆகியோரின் அன்புத்தாயும் மகேஸ்வரன், ராணிமலர், வத்சலா, மகேந்திரன், சுதாகரன் ஆகியோரின் சகோதரியும் நாகேஸ்வரி, நாகேந்திரம், சந்திரசேகரம், புஸ்பராணி, ஜோதிமலர் காலஞ்சென்ற சுவர்னா மற்றும் சாந்தரூபி, ஜெகதீசன், இராஜரூபன், நாகவேல் நாயகி, பதுமநிதி, சிவகௌரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2017) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்கன்வளவு,
இணுவில் கிழக்கு.
077 752 1081

தகவல்:
கணவர் மற்றும் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் தம்பிமுத்து சுந்தரேஸ்வரன் (இராசா)

மண்ணில் 06.07.1942 — விண்ணில் 17.08.2013

திதி: ஏகாதசி (03.08.2017)

சீர் பெருக வாழ்ந்தீர்
சிறப்புடன் எமை வாழவைத்தீர்
மானுட வாழ்வில்
மறு பிறவி உண்மையெனில்
மறுபடியும் பிறந்திடுங்கள் எங்கள் உறவாய்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா இறைவன் திருவடிகளில் சாந்திபெற அருளுமாறு வேண்டி சிவபூதநாதேஸ்வரர் பாதம் பணிகின்றோம்.

கரந்தன் வீதி,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

# 7 ஆம் வருட நினைவஞ்சலி



மண்ணில் 15 . 12 . 1952 — விண்ணில் 21 . 07 . 2010

## அமரர் வல்லிபுரம் கணேசலிங்கம்

(முன்னாள் உரிமையாளர் -
எரிக்கணேஸ் பல் மூக்குக் கண்ணாடியகம்)

திதி: ஆடி மாதம் வளர்பிறை ஏகாதசி (03.08.2017)

அப்பா என்றழைத்த எம் தெய்வமே!
ஆண்டுகள் ஏழு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம் - அப்பா
உங்கள் மெய்யைவிட்டு உயிர் பிரிந்து
இன்று ஏழு ஆண்டுகள் ஆனதப்பா - நாங்கள்
கண்கலங்கி வாடுகின்றோம் அப்பா
எங்கள் நெஞ்சினில் உங்கள் நினைவுகள்
நிதம் நிதம் வந்து எங்கள் வாழ்வை வழிநடத்துகிறது
உங்களுடன் வாழ்ந்தகால நினைவுகள்
என்றும் எங்கள் கண்களில் கண்ணீரை சொரிய வைக்கிறது
உங்கள் பொன் மொழியும் புன்சிரிப்பும்
குறுங்கதையும் கண்முன் நிழலாடுதப்பா!
நாங்கள் கதிகலங்கித் தேடுகின்றோம் அப்பா!
உங்கள் ஆசியுடன் உங்களை நினைத்து
நித்தம் எம் பணியைத் தொடருகின்றோம்
என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழ்கின்றோம் அப்பா!

பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

# 2 ஆம் தவணை விடுமுறை நாளை ஆரம்பம்

அரச பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணை விடுமுறை நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை இரண்டாம் தவணை விடுமுறைக்காக மூடப்படவுள்ளன. மீண்டும் பாடசாலைகள் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி மூன்றாம் தவணைக்காகத் திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# துயருறுகின்றோம்

## திருமதி சரஸ்வதிதேவி நடராஜா கணேஸ்வரன் (B.Sc)



தாவடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதிதேவி நடராஜா கணேஸ்வரன் அவர்கள் 31.07.2017 திங்கட்கிழமை கனடாவில் காலமான செய்திகேட்டு பெருந்துயரடைகின்றோம்.

சரஸ்வதிதேவி நடராஜா கணேஸ்வரன் அவர்கள் தாவடியில் தனது நிலத்தை நன்கொடையாக வழங்கி குருமூர்த்திகளுக்காக ஸ்ரீ இராமகிஸ்ண ஆச்சிரமம் அமைத்து பூசை வழிபாடுகள் நடைபெற வேண்டும் என விரும்பிய அவரது விருப்பம் நிறைவெய்தியது அவருக்கு இச்செயல் பெருமையை சேர்த்துள்ளது.

அன்னாரின் ஆத்மா சாந்திபெற இதயம் கசிந்து விழி ததும்பும் துளிகளைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

**காந்தி கலைவளர்ச்சி மன்றம் சனசமூக நிலையம்**
**ஸ்ரீ இராமகிருஷ்ண விவேகானந்த சேவாச்சிரமம்**
**தாவடி வடக்கு, கொக்குவில்.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்கள்

## சபாரத்தினம் பாலசுந்தரம் (ஆசாரி)



பிறப்பு 10.03.1942 — இறப்பு 01.08.2017

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் பாலசுந்தரம் 01.08.2017 செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - இலட்சுமி தம்தியரின் மூத்த மருமகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், மதனராஜ் (பிரான்ஸ்), மதனியா (லண்டன்) மர்ஷிஜா, மதனறூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துவாரகா (பிரான்ஸ்), சிவராமலிங்கம் (லண்டன்), முருகானந்தன் (ஆசிரியர் தொழில் நுட்பக் கல்லூரி வட்டுக்கோட்டை) ஆகியோரின் மாமனும், காருண்யன், காருன்யா, அகிஷன், அகிலாஷ், அசிந், கஜானிகா, கஜானன் ஆகியோரின் அன்புப் பேரனும், இராசதுரை, சண்முகலிங்கம், மனோன்மணி, அன்னலட்சுமி, அருந்தவமணி, சிவகுருநாதன், குணபாலசிங்கம், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.*

குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

0776176582

## வடிவேலு ஜெகநாதன்

(யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலை முன்னாள் ஊழியர்)



பிறப்பு 19.03.1960 — இறப்பு 31.07.2017

யாழ். கொட்டடியைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்து Den Haag ஐ வதிவிடமாகவும் கொண்ட வடிவேலு ஜெகநாதன் அவர்கள் 31.07.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வடிவேலு காலஞ்சென்ற பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தியாகராசா - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜீவறஞ்சினி(ராசாத்தி) இன் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மாலதியின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஸ்ரீமோகன் மற்றும் நிறஞ்சன் (சுவிஸ்), றகுநாதன் (சுவிஸ்), சசிகரன் (சுவிஸ்), ராசலட்சுமி (ஜேர்மனி), சத்தியபாமினி (நெதர்லாந்து), காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் கருணாகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற தனபாலசிங்கம் (ஜேர்மனி), குணபாலசிங்கம் (கனடா), கிரிபாமூர்த்தி (லண்டன்), ஜெயமனோகரன் (ஜேர்மனி), ஆரியன் (நெதர்லாந்து), ஜீவறாணி (ஜேர்மனி), ஜீவமஞ்சுளா (ஜேர்மனி), ஜெயஸ்ரீ (கனடா), நளாயினி (சுவிஸ்), சுகன்யா (சுவிஸ்), யசித்தா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கம்பதாஸ்(ஜேர்மனி), நவக்குமார்(கனடா), பாரதா (ஜேர்மனி), உமாராணி (கனடா), சண்முகப்பிரியா (லண்டன்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், நிதர்சன், பிரவீன், ஆதவன், காத்தனா, சௌமியா, பவிசனா ஆகியோரின் மாமாவும், ஆழியன், அகரன், லவின், றபிஷன், சாருஜா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் சந்தோஸ், நிரோஸ் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2017) வியாழக்கிழமை பி.ப 5.00 மணியளவில் பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு Crematorium Ockenburgh den Haag, Ockenburghstraat, 2553 AA Den Haag, Netherlands தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
வடிவேலு குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 47 பொருள்கள் விலை குறைப்பு

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் 47 அத்தியாவசியப்பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

வாழ்க்கைச் செலவுக்கான அமைச்சரவை உப குழுவின் வாராந்த சந்திப்பு நேற்று முன்தினம் நிதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் அரிசி, கோதுமை மா, மீன், சீனி, கிழங்கு பெரியவெங்காயம், சோளம் உள்ளிட்ட 47 அத்தியாவசிப் பொருள்களின் விலைகளை அரசு குறைத்துள்ளது.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான அமைச்சரவை உபகுழு அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தது. இந்த சிறப்பு விலைக்குறைப்புகள் எதிர்வரும் மூன்று முதல் ஆறு மாதங்களுக்குத் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்குமென அரசு கூறியுள்ளது. இதற்கமைய இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசிக்காக இதுவரை அறவிடப்பட்டு வந்த 5 ரூபா சிறப்பு அறவீட்டு பண்ட வரி உடனடியாக 25 சதமாக குறைக்கப்பட்டுள்ளது. (த)

# பௌர்ணமி தினங்களில் தனியார் வகுப்புக்குத் தடை

கொழும்பு, ஓக 3

ஞாயிற்றுக்கிழமை மற்றும் பௌர்ணமி தினங்களில் தனியார் வகுப்புக்களை நடத்தத் தடை விதிக்கும் சட்டவரைவை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஸ தெரிவித்தார்.

மஹரகம இளைஞர் சேவை மன்றத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஞாயிற்றுக்கிழமை மற்றும் பௌர்ணமி தினங்களில் பிற்பகல் 2 மணிவரை தனியார் வகுப்புக்களை நடத்துவதற்குத் தடை விதிக்கும் வகையில் இந்தச் சட்டவரைவு கொண்டுவரப்படவுள்ளது.

இதன் மூலம் ஞாயிறு சமய வகுப்புக்களுக்குப் பிள்ளைகளை அனுப்ப முடியும். இது தொடர்பில் மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன - என்றார். (த)


## பணியாளர் தேவை

1. அல்பம் கட்டுனர்
2. கிரபிக் டிசைனர் (Corel Draw)
3. வரவேற்பாளர்கள் (அனுபவம் உள்ளவர்களும் பழகி வேலை செய்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்)
4. இரவு நேரப்பணியாளர்கள் (மூர்த்தி கெஸ்ற் கவுஸ்)

மூர்த்தி டிஜிற்றல்
யாழ்ப்பாணம். 077 224 7428

## விற்பனைக்குண்டு

பதிவு செய்யப்பட்ட திஸ்ஸ கச்சான் விற்பனைக்கு உண்டு.

077 444 9242

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 ரேவதி செவ்வாயில்லை. அரச தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

076 707 4576
Viber - 076 702 1622

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள உணவகம் ஒன்றுக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை. (ஆண்.பெண்).

* சமையல் உதவியாளர்.
* Assistant Chef (2 ஆவது சமையலாள்)
* விற்பனை உதவியாளர்.
* உணவக மேற்பார்வையாளர்.

தொடர்பு:
077 713 1594,021 222 9420



## யாழ் மாநகரில் முதன் முறையாக சினிமா பாடல்களுடன்




பிரபல தென்னிந்திய பாடகர்
கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
மற்றும் பாடகி
உத்ரா உன்னிகிருஸ்ணன்
இணைந்து வழங்கும் மாபெரும் திரை இசை நிகழ்ச்சி

இடம் : யாழ்/ஸ்ரான்லி வீதி வெலிங்டன் தியேட்டர் மைதானம்
காலம் : இம்மாதம் 12 ஆம் திகதி (12.08.2017)
மாலை 6.00 மணிக்கு

300/=, 500/=, 1000/= டிக்கெட்

500/=, 1000/= டிக்கெட் கொள்வனவு செய்பவர்களுக்கு ஆசன வசதி செய்து கொடுக்கப்படும்.

தூர இருந்து வருவோருக்கு போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு
077 550 4910

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்
K.T. பிரசாத்
Ceylon Art Creation


## கேள்வி அறிவித்தல்
## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
## மீள்குடியேற்ற அமைச்சுக்காக

1. தலைவர், மாவட்ட செயலக பெறுகைக்குழு, சார்பில் மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம், கண்டி வீதி, யாழ்ப்பாணத்திற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.
2. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. கேள்வியாளர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA/ICTAD**) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும். அத்துடன் 30.09.2016ம் திகதிய பொது நிதி சுற்றறிக்கை இல: 04/2016(i) இன் பிரகாரம் கேள்வியாளர்களினது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை பதிவு மற்றும் வியாபார அல்லது நிறுவனப் பதிவு வடமாகாணத்திற்கு உட்பட்டதாகவிருத்தல் வேண்டுமென இக்கேள்விகள் வரையறை செய்யப்பட்டுள்ளது.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section IV) இலும், மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) / கேள்வி தரவுகள் மற்றும் ஒப்பந்த தரவுகள் இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது..
5. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய கேள்வியாளர்கள் கீழ்வரும் முகவரியில் மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், இம் முகவரியில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.

   மீள்குடியேற்ற பிரிவு,
   மாவட்ட செயலகம்
   கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
   **Tel: 021-2212631 / 021-2224029**

6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 04.08.2017 முதல் 24.08.2017 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான** காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையினை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கட்டணமாகச் (பணமாகச்) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் 25.08.2017 ஆம் திகதியன்று 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், மாவட்ட செயலக பெறுகைக்குழு, மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைக்குமான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்வி கோரல் முடிவுற்ற உடனேயே கேள்விகள் திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் **மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்** எனும் **முகவரியில் 18.08.2017** அன்று **10.00** மணிக்கு நடைபெறும்.
9. கேள்வி விலைமனுவின் இறுதிநாளிலிருந்து அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நாட்கள் வரை செல்லுபடியுடையதாக இருத்தல் வேண்டும்.
10. சகல கேள்விகளுக்கும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. ஒவ்வொரு கேள்விகளும் தனித்தனியே பகுப்பாய்வு செய்யப்பட்டு ஏற்புத்தன்மையுடைய குறைந்த பகுப்பாய்வு செய்யப்பட்ட கேள்வியுடைய ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படுவார்.

| கேள்வி அடையாள இல | வேலை விவரம் | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) | மதிப் பீட்டுத் தொகை (மில்லியன்) | கேள்வி செல்லுபடியாகும் காலம் (நாள்கள்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணை விவரம். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | தொகை | தேவைப் படும் காலம். |
| DS/JF/RESETTLE/2017-14 | யா/புனித அந்தோனியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தின் திறந்தவெளி அரங்கு கட்டடம் புனரமைத்தல். | 2000.00 | 4.25 | 90 | 120 நாள்கள் | C8 அல்லது C7 (கட்டடங்கள்) | 43,000.00 | 25.11.2017 வரை |
| DS/JF/RESETTLE/2017-15 | யா/கதீஜா மகா வித்தியாலயம் வாயிற் கதவுடன் கூடிய மதில் அமைத்தல் | 2000.00 | 2.09 | 90 | 90 நாள்கள் | C8 அல்லது C7 (கட்டடங்கள்) | 21,000.00 | 25.11.2017 வரை |

நா.வேதநாயகன்
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்,

## இதய அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் **லிங்கேஸ்வரி லதீனன்** அவர்களின் மாமியார்

**ரதிதேவி சத்தியலிங்கம்**

அவர்கள் 30.07.2017 இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

## யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

### விசேட பொதுக்கூட்டம் - 2017

**காலம்**
05.08.2017 சனிக்கிழமை காலை 9.00 மணி

**இடம்**
சங்கக்காரியாலயம், கோண்டாவில் கிழக்கு

**தலைமை**
திரு.செ.ஜெயக்குமார் அவர்கள்
(சங்கத்தலைவர்)

அனைத்து அங்கத்தவர்களையும் குறித்த நேரத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இருபாலை வீதி,**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

**செயலாளர்**
**க.செல்வச்சந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசகரை கொழும்புக்கு அனுப்பினார் அல் ஹுசைன்

## சொன்னதைச் செய்கிறதா இலங்கை என ஆராய்வதற்கு



கொழும்பு, ஒக 3
ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் மூத்த ஆலோசகர் ஒருவர் கொழும்புக்கு வந்துள்ளார்.
ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் மூத்த மனித உரிமைகள் ஆலோசகரான ஜுவான் பெர்னாண்டஸ் என்ற அதிகாரியே வந்துள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பது குறித்தும், இராணுவ மறுசீரமைப்புத் தொடர்பான பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தல்கள் குறித்தும் ஆராய்வதே அவரது இலங்கைப் பயணத்தின் நோக்கம் என்று கூறப்படுகிறது.
ஜுவான் பெர்னாண்டஸ் தனது இலங்கைப் பயணத்தின் ஒரு கட்டமாக நேற்றுமுன்தினம் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.
ஐ.நா. அமைதிப்படைக்கு இலங்கைப் படையினரை அனுப்பும்போது கடைப்பிடிக்கப்படும் ஆய்வு முறை உள்ளிட்ட இராணுவ மறுசீரமைப்பு தொடர்பான பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தல்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
பெர்னான்டஸ் இங்கு பல தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் எனவும் கூறப்பட்டது. (கு)

# மைத்திரிக்கு அதிகார மமதை

## கண்டிக்கிறார் பீரிஸ்



கொழும்பு, ஒக 3
ஆட்சியைக் கைப்பற்ற எவர் எத்தனித்தாலும், அதற்குத் தனது விருப்பத்தையும் ஆசீர்வாதத்தையும் பெறவேண்டுமென மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்தானது நிறைவேற்று அதிகாரத்தை விடவும் அதிகமான பலத்தை உபயோகிப்பதற்குச் சமமான செயல்.
இவ்வாறு முன்னாள் அயலுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொள்ளையர்களையும், ஊழல்வாதிகளையும் பாதுகாப்பதற்குச் சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களும், உறுப்பினர்களும் தொடர்ந்து துணைபோவார்களா என்பது கேள்விக்குறியே.
அது தொடர்பில் அரச தலைவர் புதுமையான கருத்து ஒன்றை முன்வைத்தார். அதாவது அவரது ஆசீர்வாதம் இல்லாமல் 113 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருந்தாலும் ஆட்சியமைக்க முடியாது என அவர் குறிப்பிட்டார்.
சரியான கொள்கையுடன் செயற்படும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினரால் அந்த இடத்தில் இருக்க முடியாது. இது அரசியலைக் கொண்டு நடத்துவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினை. அதனாலேயே அவர்கள் அங்கிருந்து வெளியேறத் தீர்மானித்துள்ளனர். நிறைவேற்று அதிகாரமுடைய அரச தலைவர் முறைமையின் ஏகாதிபத்திய உருவத்தை இல்லாது செய்யவதாக ஆரம்பத்திலேயே மைத்திரிபால சிறிசேன கூறினார். நாடாளுமன்றத்தை அதிகாரமுள்ள சபையாக மாற்றுவதாகக் கூறினார். நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையைக் கொண்டுவந்த ஜே.ஆர்.ஜெயவர்தனகூட வெளியிடாத கருத்தைத் தற்போதைய அரச தலைவர் கூறியுள்ளார். மைத்திரி வெளியிட்டுள்ள இந்தக் கருத்து அரசமைப்புக்கு முரணானது. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அவர் மறந்து பேசுகின்றார். இந்த நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி தொடர்பில் பொது வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்- என்றார். (கு)

# அமைச்சரவை முன்பாக வந்தது வெட்டு அறிக்கை

கொழும்பு, ஒக 3
கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸார் மீது கொக்குவில் பகுதியில் நடத்தப்பட்ட வாள்வெட்டுக் குறித்த சிறப்பு விசாரணை அறிக்கை நேற்றுமுன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் கொக்குவில் பகுதியில் வைத்து இரண்டு பொலிஸார் இனந்தெரியாத குழுவினரால் துரத்தித் துரத்தி வாளால் வெட்டப்பட்டனர். படுகாயங்களுக்கு இலக்கான இவர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவினால் அறிக்கையிடப்பட்டது.
பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகள் மற்றும் கண்டறிவுகளின் அடிப்படையில் இந்த அறிக்கை முன்வைக்கப்பட்டது. (கு)

# தேரர் கைது

கொழும்பு, ஒக 3
ஜாதிக பலசேனா அமைப்பின் செயலாளர் வட்டரக விஜித தேரர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டார்.
அரச தலைவர் செயலகப் பணியாளர்களுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் கலகம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே அவர் கைதாகினர் எனப் பொலிஸார் கூறினர்.
கைதான அவர் உடல்நலக் குறைவு காரணமாகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனக் கூறப்பட்டது. (கு)

# புலிகளால் இந்தியாவுக்கு ஆபத்து

## தடையை நீக்க காங்கிரஸ் எதிர்ப்பு

புதுடில்லி, ஒக 3
விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்தியாவும் நீக்கவேண்டும் என்று தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்வைத்த கோரிக்கைக்கு எதிர்க்காங்கிரஸ் போர்க்கொடி தூக்கியுள்ளது.
இது குறித்து காங்கிரஸ் மாநிலச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ். அழகிரி இந்திய ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
விடுதலைப் புலிகளால் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு அவ்வளவாகப் பாதிப்பில்லை. ஆனால், இந்தியாவுக்குப் பாதிப்பு அதிகம்.
காஸ்மீரில் செயற்படும் தீவிரவாதிகளைக் காஸ்மீர் மக்களின் நலனோடு ஒப்பிடக்கூடாது. அதேபோல விடுதலைப் புலிகளை இலங்கைத் தமிழர்களின் நலனோடு இணைக்கக்கூடாது.
தீவிரவாதிகள் எப்போதும் மக்கள் நலனுக்கு எதிரானவர்கள் என்பது. "வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்" என்று அறிவித்த தி.மு.க வுக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை.
இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசின் நிலையே தி.மு.கவின் நிலை எனக் கருணாநிதி தெளிவாகக் கூறியுள்ளார். எனவே, தி.மு.க வின் நிலையில் மாற்றம் வரும் என நான் நினைக்கவில்லை. ஒரு காலத்தில் கருணாநிதியையே அப்புறப்படுத்திவிட்டு, அந்த இடத்தில் வேறு ஒருவரை அமரவைக்க விடுதலைப் புலிகள் முயற்சித்தனர் என கருணாநிதியே அறிவித்திருக்கிறார்.
அதனால், தி.மு.கவே பிளவுபட்டது ஸ்டாலினுக்குத் தெரியாதா? இலங்கைத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்காகப் போராடத் தாய்த் தமிழகம் தயாராக உள்ளது. அதுவும் ஜனநாய வழியில். அதனால் விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்தியா நீக்கக்கூடாது - என்றார்.
விடுதலைப் புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் கடந்த வாரம் நீக்கியிருந்தது.
இந்த நிலையில், இந்தியாவில் பல அரசியல் கட்சிகள் இதற்கு வரவேற்புத் தெரிவித்திருந்ததுடன், இந்தியாவும் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தன.
இந்த நிலையில் காங்கிரஸ் இதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# மலையகப் பெண்களுக்கு வயிற்றுப் புற்றுநோய்

கொழும்பு, ஒக 3
மலையகத் தோட்டங்களில் உள்ள புற்றுநோயாளிகளில் பெரும்பாலானவர்கள் வயிற்றுப் புற்றுநோயாளிகள் என வைத்தியசாலைத் தரவுகளை ஆய்வு செய்ததில் தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகிறது.
சிறுநீரக நோய் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ள ராஜரட்டைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட விரிவுரையாளர் கலாநிதி ஜயந்த ஜயசுமன இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:



மலையகத் தேயிலைத் தோட்டங்களில் வாழும் மக்கள் அடிக்கடி சிகிச்சை பெறும் நுவரெலியா, டிக்கோயா, நாவலப்பிட்டி, பதுளை மற்றும் கண்டி வைத்தியசாலைகளில் கடந்த 10 ஆண்டுகளுக்குரிய விவரங்களை ஆய்வு செய்தபோது இது தெரியவந்தது.
வயிற்றுப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் தேயிலைக் கொழுந்து பறிக்கும் பெண்களாவர்.
தேயிலைப் பயிருக்குக் 'க்ளைபெசேட்' இரசாயனம் பயன்படுத்தப்படுவது மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் தேயிலைக் கொழுந்து பறிக்கும் பெண்கள் என்பதுமே இதற்குக் காரணமாக இருக்கலாம் - என்றார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பதவியை துறக்கட்டும் ரவி

### விடாப்பிடியாக உள்ளார் பந்துல



கொழும்பு, ஓக. 3
அமைச்சர் ரவி கருணாநாயக்க உடனடியாக தனது அமைச்சுப் பதவியில் இருந்து விலகவேண்டும் என்று மகிந்த அணி வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பெற்றுக்கொண்ட கடனை அடைப்பதாகக் கூறி இவர்கள் செய்த வேலை என்ன? அது பெரும் கொள்ளையாகும். வரலாற்றில் அதிகமான கடன் பெற்றுக்கொண்ட காலப்பகுதி 2001 தொடக்கம் 2004 வரையிலான காலப்பகுதியே. அப்போதைய [illegible]லைமை அமைச்சராக இருந்த ரணில் [illegible]க்கிரமசிங்க அரச [illegible]தி முகாமைத்துவச் சட்ட[illegible]த்தின் கீழ் அதிகூடிய கட[illegible]த்தொகையாக 100 இறகு 80 வீதம் வரை பெற்றுக்கொள்ளும் வகையில் மறுசீரமைப்புகளை மேற்கொண்டு கடன்களைப் பெற்றுக்கொண்டார்.

அதேபோல் கடந்த இரண்டு வருட காலமாக நிதி அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க இதனை 83 சதவீதம் வரை கொண்டு சென்றுள்ளார். இதுதான் இவர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கை.

ரவி கருணாநாயக்கவுக்கு வெட்கம், பயம் ஏதும் இல்லாமையாலேயே அனைத்தையும் மேற்கொண்டு விட்டு ஒன்றும் செய்யாதவர் போன்று செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார். பெரும் ஊழலில் ஈடுபட்டுள்ள அவர் உடனடியாகத் தனது பதவியில் இருந்து விலக வேண்டும் - என்றார். (த)



# 2020 வரை எங்கள் ஆட்சியே

### யாருமே அசைக்க முடியாது என மைத்திரி இறுமாப்பு

கொழும்பு, ஓக. 3
2020ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த அரசை மாற்றுவதற்கு எவரையும் அனுமதிக்கப் போவதில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

துறைமுக அதிகார சபையின் 38 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்ட ஒப்பந்தம், மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்தபோது, 2014 செப்ரெம்பர் 4ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. அப்போது மகிந்த ராஜபக்சவும் அமைச்சரவையில் ஓர் அமைச்சராக இருந்தார்.

அதற்குப் பின்னர் பதவிக்கு வந்த இந்த அரசு, சீன நிறுவனத்துடன் பேச்சு நடத்தி, அவர்களுக்கு வழங்கத் திட்ட மிடப்பட்டிருந்த நிலத்தின் அளவையும், 50 வீதமாகக் குறைத்துக் குத்தகை ஒப்பந்தத்தைத் திருத்தியுள்ளோம்.

துறைமுக நகர ஒப்பந்தத்திலும், சீன நிறுவனத்துக்கு 240 ஏக்கர் நிலத்தை வழங்க மகிந்த அரசு இணங்கியிருந்தது. அதனையும் குறைத்திருக்கிறோம்.

சங்கிரிலா விடுதித் திட்டத்துக்காக வழங்கப்பட்ட 6 ஏக்கர் காணிகளை மாத்திரம் மீளப் பெற முடியாதது துரதிஷ்டம். அது உறுதி மூலம் விற்கப்பட்டிருக்கிறது.

நான் நாட்டின் தலைவராக இருக்கும் வரையில், ஓர் அங்குல நிலத்தையேனும் எந்தவொரு நாட்டுக்கோ, நிறுவனத்துக்கோ விற்பதற்கு அனுமதிக்கமாட்டேன்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் இன்னும் மூன்று ஆண்டுகளில் நடைபெறும்.

அதற்கு முன்னர் ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்களால் நாட்டையும், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையையும் குழப்புவதன் மூலம், இந்த அரசை மாற்றியமைப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

இதனை இத்தகைய குழப்பங்களில் ஈடுபடுவோர் விளங்கிக் கொள்ள வேண்டும் - என்றார். (த)

## பக்கச்சார்புடையவர் சபாநாயகர்

### மகிந்த அணி சாடல்

கொழும்பு, ஓக. 3
அரசுக்குத் தேவையான முறையில் நாடாளுமன்ற அலுவல்களைச் சபாநாயகர் கரு ஜயசூரிய நடத்தி வருகின்றார் என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எரிபொருள் விநியோகத்தை அத்தியாவசிய சேவையாக அறிவிப்பதற்கான வர்த்தமானிப் பிரசுரம் நாடாளுமன்றத்தில் சரியான முறையில் அங்கீகரிக்கப்படவில்லை. அந்த அறிவிப்பு நாடாளுமன்ற நிலையியல் சட்டத்தின்படியே அங்கீகரிக்கப்படவேண்டும். எனினும், கடந்த வெள்ளிக்கிழமை அது அவ்வாறு நடைபெறவில்லை. அத்துடன், நாடாளுமன்றத்தில் தீர்மான மொன்று நிறைவேற்றப்படு வதற்கான வாக்கெடுப்பு நடை பெறும் சமயத்தில் செங்கோல் அதற்குரிய இடத்தில் இருக்கவேண்டும் என்பது சம்பிரதாயம். எனினும், கடந்த வெள்ளிக்கிழமை அவ்வாறு நடைபெறவில்லை.

எனவே, நாடாளுமன்றத்தின் சட்டதிட்டங்களுக்கு முரணாக, அரசுக்கு அனுகூலமான வகையில் சபாநாயகர் நடந்து கொள்கின்றார் - என்றார். (த)

## நல்லிணக்கத்தில் தங்கியுள்ளது அபிவிருத்தி

### பௌசி கூறுகிறார்

கல்முனை, ஓக. 3
நாட்டின் அபிவிருத்தியானது நல்லிணக்கம், நட்பு, சமாதானம் போன்ற முக்கிய பண்புகளில் தங்கியுள்ளது என தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர் பௌசி தெரிவித்தார்.

இலங்கையின் அறநெறிக் கல்விக்காகத் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தைத் தாபனமயப்படுத்தும் வேலைத்திட்டத்தின் ஐந்தாவது நிகழ்வு திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் உள்ள மக்கள் நாட்டை முன்னிலைப்படுத்தி ஒற்றுமையாகச் செயற்பட்டு வருகின்றனர். இதனால் அந்த நாடுகள் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளன. நாம் அனைவரும் இலங்கையர் என்றடிப்படையில்செயற்படவேண்டும். அப்போதுதான் எமது நாடும் முன்னேற்றப் பாதையில் விரைவாகத் தடம் பதிக்கும் - என்றார். (த-ய-30)

## எஸ்.ரி.எவ்வின் முற்றுகைக்குள் யாழ். குடாநாடு

### கொழும்பு ஊடகம் தகவல்

கொழும்பு, ஓக. 3
யாழ்ப்பாணக் குடாநாட்டில் வன்முறைகளைக் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் பொறுப்பு சிறப்பு அதிரடிப்படையினரிடம்(எஸ்.ரி.எவ்.) வழங்கப்பட்டுள்ளதாகக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக, 1000 இற்கும் அதிகமான சிறப்பு அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். சிறப்பு அதிரடிப்படையினர் குழுக்களாக ரோந்து, உந்துருளி ரோந்து, சோதனை, போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் இரவில் மாத்திரம் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர் எனவும் அண்மையில் குடாநாட்டில் இடம்பெற்ற சில சம்பவங்களை அடுத்து, நாள் முழுவதும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் அதிகாரி ஒருவர் கூறினார். சிறப்பு அதிரடிப்படைக்கு மேலதிகமாகச் சிறப்புப் பொலிஸ் குழுக்களும் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

வன்முறைகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக, புலனாய்வுப் பிரிவுகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸ் தலைமையகம் மேற்கொண்டுள்ளது. இதற்கெனப் பொலிஸ் புலனாய்வுக் குழுக்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது. (த)



# வறட்சியால் வாடுவோர் 11 லட்சம் பேர்

### நீர் நிலையங்கள் வற்றிப்போயுள்ளன; விவசாயமும் பாதிப்பு

கொழும்பு, ஓக. 3
வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் 17 மாவட்டங்களில் நிலவும் கடும் வறட்சி காரணமாக 11 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குளங்களும், நீர் நிலையங்களும் வற்றியுள்ளதால் பல மைல் தூரம் நடந்து சென்றே நீரைப் பெற்றுக் கொள்ளவேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. மீன்களும், நீரியல் தாவரங்களும் செத்துமடிந்து வருகின்றன.

அத்துடன், சிறுதானியச் செய்[illegible] உட்பட விவசாயமும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று மதியம் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் வறட்சியால், கிழக்கு மாகாணத்தில் 63 ஆயிரத்து 631 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்து 28 ஆயிரத்து 436 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.


வடமத்திய மாகாணத்தில் 79 ஆயிரத்து 602 பேரும், வடக்கு மாகாணத்தில் 4 இலட்சத்து 62 ஆயிரத்து 991 பேரும், வடமேல் மாகாணத்தில் இரண்டு இலட்சத்து 82 ஆயிரத்து [illegible] மாகாணத்தில் 23 ஆயிரத்து 349 பேரும், ஊவா மாகாணத்தில் 29 ஆயிரத்து 868 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 812 பேரும், தென்மாகாணத்தில் 7 ஆயிரத்து 230 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்கள் கிடைப்பதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அதைத் துரிதப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதுடன், நிதியுதவியை வழங்கவும் முன்வந்துள்ளது.

இதன்படி, வறட்சியால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களை இனங்கண்டு, அந்தக் குடும்ப உறுப்பினர்களின் முயற்சியைப் பொது வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்வதை அடிப்படையாகக் கொண்டு, 5,000 ரூபா பெறுமதியான உலர் உணவு அட்டை வழங்கப்படவுள்ளது.

அத்துடன், பயிர்ச் செய்கை பாதிப்புக்களுக்காக உரிய காப்புறுதித் திட்டத்தின் கீழ் துரித கதியில் நட்டஈட்டைப் பெற்றுக்கொடுப்பதற்கும், குடிதண்ணீர் வழங்கும் வேலைத்திட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் அரச தலைவரால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெனிசுலா கலவரத்தின் எதிரொலியா
# எதிர்க்கட்சித் தலைவர் லொபாஸ் கை

கரஸ்கஸ், ஒக. 3
வெனிசுலா எதிர்கட்சித் தலைவரான லியோபோல்டோ லொபாஸ் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். இதை அவருடைய மனைவி உறுதி செய்தார்.

வெனிசுலா அதிபராக நிக்கோலஸ் மதுரோ உள்ளார். மதுரோவின் மூன்று வருட ஆட்சியில் வெனிசுலா வரலாறு காணாத பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இதனால் ஆட்சி மாற்றத்துக்கான போராட்டம் அங்கு கடந்த நான்கு மாதங்களாக நடைபெற்று வருகிறது. மதுரோ பதவி விலக வேண்டும் என்றும் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் எதிர்கட்சிகள் வலியுறுத்தின.

அந்த நாட்டின் பொதுத் தேர்தலைத் தீர்மானிக்கும் அரசியல் நிர்ணய சபையும் பொதுத் தேர்தலை நடத்த முன்வந்தது. இதனால் அந்த சபையையே தற்போது மாற்றியமைத்துள்ளார் மதுரோ. இதனால் தேர்தலைப் பிற்போட அவர் எத்தனிக்கிறார் என்று எதிர்கட்சிகள் குற்றம் சுமத்தின.

இதையடுத்து கடந்த நான்கு மாதங்களாக நடைபெற்று வந்த போராட்டம் மேலும் தீவிரமடைந்தது.

இந்தப் பின்னணியிலேயே லொபாஸ் கைது ...டார். "லொபாஸ் ... இருந்தால், அவருக்... ஆதரவு பெருகும். ...ரான போராட்டம் பே... பெறும். இதனாலே... கைது செய்யப்பட்... எதிர்கட்சிகள் குறிப்பி... மதுரோ கைது செய்... அவரது மனைவி, ...கப் பக்கத்தின் மூல... டுத்தினார்.



## ஆப்கானிஸ்தானில் தாக்குதல் 29 அப்பாவிகள் பரிதாபச் சாவு

காபூல், ஒக. 3
ஆப்கானிஸ்தானில் ஷியா பிரிவினரின் மசூதி மீது நேற்று நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 29 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 63 பேர் காயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் - ஈரான் எல்லையருகே உள்ள ஹெரத் நகரில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இங்கு ஷியா முஸ்லிம்கள் வழிபடும் ஜவாத்யா என்ற மசூதி உள்ளது. இந்த மசூதிக்குள் நுழைந்த இரு ஆயுததாரிகளில் ஒருவர் தற்கொலைத் தாக்குதலை நடத்தினார். மற்றொருவர் இயந்திரத் துப்பாக்கியால் கண்மூடித்தனமாகச் சுட்டார் என்று சொல்லப்படுகிறது. இரு தாக்குதலிலுமாகச் சேர்த்து 29 பேர் உயிரிழந்தனர். 63பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். துப்பாக்கிச் சூடு நடத்தியவர் பொலிஸார் நடத்திய பதில் தாக்குதலில் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

# வடகொரியாவுடன் பேச்சு! என்கிறார் டில்லர்சன்

## ட்ரம்பின் கருத்துக்கு முரணாக அமைந்தது



அமெரிக்க அயலுறவுத்துறை செயலாளர் ரெக்ஸ் டில்லர்சன்

வொஷிங்டன், ஒக. 3
"ஒரு சில விடயங்களில் வடகொரியாவுடன் அமெரிக்கா பேச்சு நடத்த விரும்புகிறது" இப்படித் தெரிவித்தார் அமெரிக்க அயலுறவுத்துறை செயலாளர் ரெக்ஸ் டில்லர்சன். முன்னதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப், "வடகொரியாவுடன் எந்தவிதப் பேச்சுக்கும் இடமில்லை" என்று தெரிவித்திருந்த நிலையில் டில்லர்சன் தற்போது முரணான தகவலை வெளியிட்டுள்ளார்.

வடகொரியா நடத்திய கண்டம் விட்டுக் கண்டம் பாயும்மேம்பட்ட ரக ஏவுகணைச் சோதனையை அடுத்து கொரியத் தீபகற்பம் மீண்டும் பேசு பொருளாக மாறியுள்ளது. இந்தச் சோதனையால் மிகவும் கொதிப்படைந்து பல கருத்துக்களை வெளியிட்டிருந்தார் ட்ரம்ப். "வடகொரியா அமெரிக்காவுக்கும், அதன் நட்பு நாடுகளுக்கும் எதிரான கொள்கைகளைக் கைவிடவில்லை. அந்த நாடு கொரியத் தீபகற்பத்துக்கும், ஒட்டுமொத்த உலகத்துக்கும் தொடர்ந்தும் சத்துருவாக உள்ளது. அந்த நாட்டுக்கான வாய்ப்புக்கள் ஏராளமாக வழங்கப்பட்டுவிட்டன. இனி மேலும் சந்தர்ப்பம் வழங்க முடியாது" என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார்.

அதிபர் ட்ரம்பின் கருத்து இவ்வாறு இருக்க, ஒருசில விடயங்களில் வடகொரியாவுடன் பேச்சு நடத்தத் தயார் என்று டில்லர்சன் குறிப்பிட்டுள்ளார். "நாங்கள் அரச மாற்றத்தை நாடவில்லை. அரசு கவிழ வேண்டும் என்றும் விரும்பவில்லை. வடகொரிய எல்லையை நோக்கி இராணுவத்தை அனுப்பவதற்காகத் திட்டமிடவும் இல்லை. நாங்கள் உங்களுடைய எதிரி அல்ல. ஆனால், நீங்கள் எங்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத அச்சுறுத்தலை வழங்குகிறீர்கள். அதற்கு நாங்கள் பதிலடி கொடுக்கிறோம். சில விஷயங்களை அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். நாங்கள் அவர்களுடன் உட்கார்ந்து பேச விரும்புகிறோம்" என டில்லர்சன் மேலும் தெரிவித்தார். (ம)



ஜேர்மனியின் பேர்லின் நகரில் பெண்களுக்கான... உரியது என்று கருதப்படும் வகையிலான மோட்... பெண்கள் இதில் கலந்துகொண்டனர்.



## கிரீஸில் காட்டுத்

கிரீஸின் ஏதென்ஸ் பகுதியில் தற்போது பெரிய...வில் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது என்று பன்ன... ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

மத்திய ஏதென்ஸில் ஏற்பட்ட இந்தத் தீயை க...படுத்த சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட தீயணை... வாகனங்களில் சுமார் ஆயிரம் வரையிலான...ணைப்புப் படையினர் பணியில் ஈடுபட்டுள்ள... முன்னேற்பாட்டு நடவடிக்கையாக மக்கள் அ...வரும் வெளியேற்றப்பட்டதால் உயிரிழப்புத் த...கப்பட்டு என்று சொல்லப்படுகிறது.




## ரக்காவில் சிரியா முன்னேற்றம்

டமஸ்கஸ், ஒக். 3
ரக்கா மீட்புப் போரில் சிரியப் படைகள் முன்னேற்றம் கண்டுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக்ஸ்ரேட்) அமைப்பின் பிடியில் சிரியாவின் ரக்கா நகர் தற்போது உள்ளது. அந்த அமைப்பின் பிடியில் உள்ள முக்கியமான நகரெனின் அது ரக்காவே.

நகரை மீட்கும் போர் கடந்த சில வாரங்களாக கடுமையாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் மத்திய ரக்கா வரை அரச படைகள் முன்னேறியுள்ளன என்ற தகவலை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. அது தொடர்பான ஒளிப்படங்களையும் அது வெளியிட்டுள்ளது.

ரக்காவில் உள்ள மக்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆயுததாரிகள் தமது கேடயங்களாகப் பயன்படுத்த எத்தனிப்பதால் அங்கு மனிதப் பேரவலம் இடம்பெற வாய்ப்புள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை கடந்த சில தினங்களுக்கு முன்னர் கவலை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



## ரஷ்யக் கடற்படையின் இமாலய அணிவகுப்

ரஷ்யக் கடற்படையின் தினமான கடந்த ஞாயிற்றுக்கிழமை செயின்ட் பீற்றர்ஸ் போக் கடலில் மிகப்பெரும் அணிவகுப்பு நிகழ்த்தப்பட்டுள்ளது.

அதிபர் புடின் இந்த அணிவகுப்பை நேரில் பார்வையிட்டார் என்று ரஷ்ய ஊடகங்கள் குறிப்பிட்டன.

ரஷ்யக் கடற்படையில் உள்ள சுமார் 50 போர்க்கப்பல்களும், சுமார் 75 நீர்மூழ்கிக் கப்பல்களும் இந்த அணிவகுப்பில் கலந்துகொண்டன. இந்த அணி வகுப்பு ரஷ்யாவின் கடற்படைப் பலத்தை பறைசாற்றும்படியாக அமைந்தது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.

"வழக்கமான பணிகளில் ஈடுபடுவது மட்டுமின்றி, தீவிரவாத ஒழிப்பு மற்றும் கடற்கொள்ளைக்கு எதிராகவும் எம... நாட்டு கடற்படை பல்வேறு சவால்கள... சமாளிக்க வேண்டியுள்ளது. நாட்... கடற்படையை மேம்படுத்தவும் நவீன...யமாக்கவும் அரசு நிறைய காரிய...களை செய்துள்ளது. ரஷ்யக் கடற்ப... மேலும் பலப்படுத்தப்படும்" என புடி... அங்கு உரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ாக
கது

செய்யப்பட
வெளியில்
க்கு மேலும்
அரசுக்கு எதி
மேலும் வலுப்
லேயே அவர்
ட்டார்" என்று
பிடுகின்றன.
ய்யப்பட்டதை
. தனது கீச்ச
லம் உறுதிப்ப
(ம)

## சீனப் பெருஞ்சுவருக்கு அருகில் ரயில் பாதை


சீனப் பெருஞ்சுவருக்கு அருகில் ரயில் பாதை அமைப்பதற்கு சீன அரசு திட்டமிட்டுள்ளது.

சீனாவில் பீஜிங் மற்றும் ஷாங்ஜியாகோ நகரங்கலை இணைக்கும் வகையில் 174 கிலோமீற்றர் நீளத்திற்கு அதிவேக ரயில் பாதை அமைக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியான்து, புகழ்பெற்ற சீனப் பெருஞ்சுவருக்கு அருகில் 12 கிலோமீற்றர் நீளத்துக்கு சுரங்க ரயில் பாதையாக அமைய உள்ளது. இதற்கான கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் 2019ஆம் ஆண்டில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஷாங்ஜியாகோ நகரில் எதிர்வரும்2022ஆம்ஆண்டுகுளிர்காலஒலிம்பிக்தொடர்நடைபெற உள்ளது. இதுவும் இந்த ரயில் பாதை அமைக்கப்படுவதற்கு முக்கிய காரணம் என்று சொல்லப்படுகிறது. (ம)



ன மோட்டார் சைக்கிள் பந்தயம் ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளது. ஆண்களுக்கு
ாட்டார் சைக்கிள்களை பெண்கள் செலுத்துவதே பந்தயத்தின் ஒரே சட்டம். ஏராளமான
(ம)

## வானூர்தி தாங்கிக் கப்பலில் அமெ. திடீர் போர்ப் பயிற்சி



வொஷிங்டன், ஓக. 3

வடகொரியாவின் அச்சுறுத்தலைச் சமாளிக்கும் வகையில் அமெரிக்கக் கடற்படை நேற்றுமுன்தினம் போர்ப் பயிற்சி நடத்தியது.

பன்னாட்டு சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறி வடகொரியா அவ்வப்போது தொடர்ந்து பல ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. சமீபத்தில் அந்த நாடு மேம்பட்ட ரகத்தை உடைய கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனையை நடத்தியது. அமெரிக்காவின் மூலைமுடுக்கெங்கும் சென்று தாக்குதல் நடத்தக் கூடிய தன்மையுடைய இந்த ஏவுகணைச் சோதனையால் உலக நாடுகள் அதிர்ச்சியில் உறைந்தன. குறிப்பாக கொரியத் தீபகற்பப் பிரச்சினையில் நேரடித் தொடர்புடைய அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென்கொரியாவுக்கு வடகொரியாவின் இந்தக் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ரகத்தை உடைய ஏவுகணை பேரிடியாக விழுந்தது. இதையடுத்து ஒவ்வொரு நாடும் தத்தமது பாதுகாப்பைப் பலப்படுத்த எத்தனித்தன.

ஏவுகணைத் தடுப்பு அமைப்பான 'தாட்' இனை அமெரிக்கா சோதித்தது. அத்துடன் நின்றுவிடாமல் அமெரிக்கக் கடற்படை தற்போது போர்ப் பயிற்சிகளையும் நடத்தியுள்ளது. அமெரிக்கக் கடற்படையில் உள்ள வானூர்தித் தாங்கிக் கப்பலான யு.எஸ்.எஸ். ஜெரால்டினிலிருந்து இந்தப் போர்ப் பயிற்சி நடத்தப்பட்டது. சுமார் 15 போர் விமானங்கள் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)

## ஒருபிடி மண்ணையேனும் சீனா இழக்காது

### என்கிறார் ஜின்பிங்

பீஜிங், ஓக. 3

"சீனா தனது நிலப்பரப்பின் ஒரு சிறு பகுதியையேனும் இழக்காது" இவ்வாறு தெரிவித்தார் சீன அதிபர் ஜி ஜின் பிங்.

சீன இராணுவத்தின் 90ஆவது ஆண்டு விழா பீஜிங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சீன அதிபர் ஜி ஜின்பிங் சுமார் ஒரு மணி நேரம் உரை நிகழ்த்தினார். அதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"சீன மக்கள் அமைதியை பொக்கிஷமாகக் கருதுபவர்கள். எங்களுக்கு போரில் ஈடுபட விருப்பமில்லை. எனினும் அதனை எதிர்கொள்ளும் நம்பிக்கையை நாங்கள் கொண்டுள்ளோம். எந்தவொரு அமைப்பும், எந்த ஒரு நாடும் சீனாவின் ஒரு சிறு பகுதியைக்கூட கைப்பற்ற நாங்கள் அனுமதிக்க மாட்டோம். ஒருபிடி மண்ணையேனும் இழக்க நாங்கள் தயாரில்லை" என ஜின்பிங் மேலும் தெரிவித்தார். (ம)



ந்தீ
ரிய அள
னாட்டு
கட்டுப்
ணைப்பு
ான தீய
்ளனர்.
அனை
தவிர்க்
(ம)

பு
எமது
களை
ட்டின்
னிமை
ரியங்
புடன்
(ம)


# HUGO BOSS உடன் இணைந்து அபான்ஸ் ஏற்பாடு செய்த ஒன்றுகூடல் நிகழ்வு

அண்மையில் Hugo Boss சீஸ், வைன் உள்ளிட்ட அறுசுவை உணவுகள் மற்றும் பானங்களுடன் மகிழ்ச்சி கரமான ஒன்றுகூடலொன்றை ஆர்கேட் சுதந்திர சதுக்கத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்விற்கு நேஷன் டிரஸ்ட் வங்கி, லேண்ட் ரோவர் மற்றும் ஜகுவார் ஆகியவை ஒத்துழைப்பு வழங்கியதோடு, தொடர்புடைய நிறுவனம் சார் வாடிக்கையாளர்களுக்கு இந்த ஒன்று கூடலில் சுதந்திரமான மற்றும் சிநேகபூர்வமான உபசரிப்பு வழங்கப்பட்டது.



ஆர்கேட் சுதந்திர சதுக்கத்தில் Boss Store விற்பனை நிலையம் அமைந்துள்ள இடத்திற்கு அருகாமையில் இந்த ஒன்றுகூடல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு, தற்கால மணமகன்களுக்கு ஏற்ற வசீகரமான Boss நவநாகரிக வடிவமைப்புக்கள் இங்கு அணிவகுக்கப்பட்டிருந்தன. அதேபோல் இந்த ஒன்றுகூடலில் கலந்து கொண்டவர்களுக்கு சாம்பிரதாயபூர்வமாக தயார் செய்யப்பட்ட சுவைமிகு சீஸ் மற்றும் பல்வேறு வகையான வைன் பானங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அதே போல் இங்கு அணிவகுக்கப்பட்டிருந்த ஜகுவர் கார்கள் இந்நிகழ்வின் சிறப்பை மேலும் மெருகூட்டின. சமூகத்தில் பன்முக அந்தஸ்த்தை கொண்ட 40 இற்கும் அதிகமான பிரபு மற்றும் அதிதிகள் இந்நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்தனர்.

1924ஆம் ஆண்டு ஜேர்மனியின் மட்சின்ஜன் நகரில் உயர் தரத்தில் மற்றும் ரகத்தில் Hugo Boss ஆடை உற்பத்தி கள் ஆரம்பிக்கப்பட்டன. அன்று தொட்டு இன்றுவரை இதுஇதன் ஆடைகளின் தரத்தை பராமரித்து வருகிறது. அதேபோல் Hugo Boss உலகளாவிய ரீதியில் தனது விஸ்தரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவ தோடு, கடந்த எப்ரல் 28ஆம் திகதி இலங்கையில் அபான்ஸ் PLC யுடன் இணைந்து இலங்கைக்கான தனது கிளையை மிகவும் பிரமாண்டமாகவும், கோலாகலமாகவும் திறந்து வைத்தது. Hugo Boss உற்பத்திகள் சிறியோர் முதல் பெரியோர் வரை அனைத்து வயதினருக்கும் ஏற்றவகையில் அதன் ஆடை தெரிவுகளை உருவாக்கி வருவதோடு, உயர்த் தரத்தை மற்றும் ரகத்தை விரும்பும் ஆடவர்கள் மத்தியில் இது மிகவும் புகழ் பெற்ற ஒரு நாமமாக திகழ்ந்துள்ளது. அதற்கமைய, Classic Clothing, Leisurewear, Eveningwear, Functional, Sportswear உள்ளிட்ட ஆடைகள் மற்றும் பன்முக உற்பத்திகளை இது உள்ளடக்கியுள்ளது.

உலகளாவிய உயர் தர மற்றும் ரக ஆடைத் தெரிவுகள் அனைத்தையும் முந்திக்கொண்டு Hugo Boss முன் னிலை வகிக்கின்றது. உலகப் புகழ்பெற்ற ஜாம்பவான் களான ஜெராட் பட்லர், ஜோர்ஜ் க்ளுன், ஏட்ரெட்மென், ஃபர்முலா-வன் ஓட்டப் பந்தைய வீரரான லுவிஸ் ஹெமல்டன், ஜேர்மனியின் கால்பந்து வீரர் மெடிஸ் ஹமல்ஸ் மற்றும் ஸ்வீடன் கோல்ப் விளையாட்டு வீரர் ஹென்ட்ரிக் ஸ்டென்சன் ஆகியோர் பலவருடங்களாக Hugo Boss ஆடைத் தெரிவுகளை தமது அனைத்து சிறப்பு நிகழ்வுகள் மற்றும் விழாக்களில் அணிந்திருப்பதோடு. இந்த ஆடைத் தெரிவுகளினால் இவர்களின் தோற்றம் ஒப்பற்று காணப்படுவதோடு வசீகரமான மற்றும் காம்பீர தோற்றத்தை யும் வழங்குகிறது.

உளகலாவிய அதிசொகுசு நவநாகரிக ஆடை உற்பத்தி துறையில் முன்னணியாளனாக திகழ்வதோடு. காலத்திற்கு ஏற்றபாணியிலான ஆடைத் தெரிவுகளை உயர் தொழில்நுட்ப தரத்திற்கமைய மேம்படுத்தி Hugo Boss விற்பனை நாமத்தின் தனித்துவத்தை மேன்மையாக பேணி பாதுகாத்து வருகின்றது.

காலத்திற்குகாலம் மாறுபடும் நவநாகரிக ஆடை அணிகலன்கள் அணிவகுப்புக்கு ஏற்றவாறு அதனுடன் பிணைந்து சந்தை கேள்விகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் பன்முக தெரிவுகளில் அதிகமாக விற்பனையாகும் BOSS மற்றும் BOSS Green தமது உற்பத்திகளை இலங்கையில் அறிமுகம் செய்துள்ளது.

வணிக அலுவல்கள், அலுவலகம் மற்றும் பொது நிகழ்வுகள் போன்ற வாழ்க்கையின் எல்லா சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற தரத்தில் மற்றும் ரகத்தில் உயர்ந்த HUGO BOSS ஆடை அணிகலன்கள் உலகளாவிய ரீதியில் அனைவர் மத்தியிலும் அதியுயர் வரவேற்பை பெற்றுள்ளது.

BOSS Green உற்பத்திகள் விளையாட்டு மற்றும் ஓய்வு நேரங்களில் மற்றும் உங்கள் அன்றாட தேவைகளின்போது பயன்படுத்தக் கூடிய ஆண்களுக்கான உற்பத்திகளாக உள்ளது. அதேபோல் இதில் இளைஞர்களுக்கான தனித்துவ உற்பத்திகளையும் இதில் காணமுடியும். அதேபோல் இவை சொகுசாகவும், எளிமையான வடிவமைப்புக்களாகவும் உள்ளன. பார்ப்பவரை சுண்டி இழுக்கும் டீ-சர்ட், ஷர்ட், டெனிம் உள்ளிட்ட ஆடைத் தெரிவுகளை இங்கு உங்களுக்குப் பெற்றுக்கொள்ள முடியும். ஒன்றுடன் ஒன்றுமிகவும் பொருந்தக் கூடிய வண்ணங்களில் BOSS உற்பத்திகள் பெற்றுக்கொள்ள முடிவதோடு, வெவ்வேறு வகையான வர்ணங்களில் BOSS Green உற்பத்திகளை உங்களுக்குப் பெற்றிட முடியும்.

கொழும்பு 07, ஆர்கேட் சுதந்திரசதுக்கத்தில் அமைந்துள்ள Boss விற்பனை நிலையங்கள் பிவிசீ BOSS மற்றும் BOSS Green உற்பத்தி அணிவகுப்பின் சிறப்பை அனுபவியுங்கள்.

மேலதிக விவரங்களுக்கு:
0115 776196/ 0767 509229
தொலைபேசி இலக்கத்திற்கு அழையுங்கள்.
அல்லது
hbcustomersupport@abansgroup.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு
ஈ-மெயில் செய்யுங்கள்.

Abans


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தேவை எது?

கூட்டமைப்பு என்ற அரசியல் பலம் சிதறடிக்கப்படக் கூடாது; மழுங்கடிக்கப்படக்கூடாது என்று தெரிவித்திருக்கிறார் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். சில வாரங்களுக்குமுன்னர்வரைக்கும்கூட்டமைப்பின்ஒற்றுமைக்குக் குந்தகம் ஏற்படுத்திவிடுவாரோ என அச்சப்பட வைத்துக் கொண்டிருந்தவர் அவரே! இப்போது ஒற்றுமை குலையக்கூடாது என்றும் மாற்றுத்தலைமைக்குத்தான் ஆள் இல்லை என்றும் அவர் கூறிவருவது மட்டற்ற மகிழ்ச்சிக்குரியது.

அரசியல் தலைவர்களான தங்களுக்குள் பிரிவினையும், கருத்து மோதல்களும் உருவாகி வருகின்றன என்று மிகைப்படுத்தியும் திரித்தும் ஊடகங்கள்தான் குழப்பத்தை உருவாக்கி வருகின்றன என்றும் சாடியிருந்தார் முதலமைச்சர். இருந்தாலும், அவை மிகைப்படுத்துவதற்கும் திரிக்கப்படுவதற்கும் அடிப்படையாக இருப்போர் தன்னைப் போன்ற அரசியல்வாதிகளே என்பதையும் அவர் மறைமுகமாக ஒப்புக்கொண்டிருக்கிறார். ஏனெனில், ஊடகங்கள் பொய் கூறுகின்றன என்று அவர் சொல்லவில்லை. உண்மையைத்தான் கொஞ்சம் மிகைப்படுத்தியும் திரித்தும் கூறுகின்றன என்கிறார்.

தலைவர்கள் தமக்கிடையிலான மோதலை, கருத்துரையாடல்களை உள்ளது உள்ளபடியே மக்களிடம் பகிர்ந்துகொள்ளாதபோது, உண்மைகளை உருவித்தான் வெளியே எடுக்க வேண்டியிருக்கிறது ஊடகங்களுக்கு. அப்படி எடுக்கும்போது அந்த உண்மையின் மீது ஆங்காங்கே கடுகும் மிளகும் உப்பும் தூவி அதைக் காரசாரமாக்கி விடுகிறார்கள் தகவல்களைத் தருபவர்கள். அவர்களும் வேறு யாருமல்லர் அரசியல்வாதிகள்தான். தலைவர்கள் உண்மையை 100 வீதம் மக்களுக்குப் பகிரங்கமாகச் சொல்ல முன்வராத வரையில், மருவுதல்களும் திரிதல்களும் மிகைப்பாடுகளும் ஊடகங்களில் தவிர்க்க முடியாதவை.

தமக்கே உண்மையைச் சொல்கிறார்கள் இல்லை என்று கூட்டமைப்பில் உள்ள ஒரு சில தலைவர்களே புலம்பித் திரிகையில் மக்களுக்கு உண்மையைச் சொல்லிவிடுவதற்கான சாத்தியங்கள் பற்றிச் சொல்லத் தேவையில்லை. அண்மையில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்தித்துதான் என்ன பேசினார் என்கிற முழு உண்மையையும் அந்தச் சந்திப்புத் தொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில் அவரே சொல்லி வைக்கவில்லை என்பதையும், கவனத்தில் கொள்க. மிகச்சுருக்கமான சாராம்சம் மட்டுமே அதில் இருந்தது. அந்தச் சந்திப்புக்குப் பின்னர்தான், கூட்டமைப்பின் ஒற்றுமை பற்றி முதலமைச்சர் ஆணித்தரமாகக் கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார் என்பதையும் மக்கள் அவதானிக்காமல் இல்லை.

எனவே ஊடகங்கள் பற்றிய அவரது கருத்துக்களை ஒரு புறம் வைத்துவிட்டாலும், ஒற்றுமை குறித்து அவர் கூறியிருக்கும் கருத்துக்கள் சிந்திக்கப்பட வேண்டியவை. தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து ஒற்றுமைப்பட்ட கட்சிகள் மீது தமிழ் மக்கள் காட்டிவரும் அன்பு இன்றுவரை தொடர்கிறது. கட்சிகள் ஒற்றுமையோடு இருப்பதையே மக்கள் எப்போதும் விரும்பி வந்திருக்கிறார்கள். ஆனால், கட்சிகளின் தலைவர்கள்தான் தமது சுயநலன்களுக்காக அந்த ஒற்றுமையைக் குலைத்திருக்கிறார்கள். இதுதான் தமிழர்களின் அரசியல் வரலாறு. தமக்குப் புதிது புதிதாகக் கட்சிகள் வேண்டும் என்று மக்கள் என்றுமே கேட்டதில்லை.

இப்போதும் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளைப் பிரிந்து செல்லுமாறு மக்கள் கோரிக்கை ஏதும் வைக்கவில்லை. கட்சிகள் தமது நலன்களுக்காகக் கருத்து மோதல்களில் ஈடுபடுகின்றன. தலைவர்கள் நான் பெரிதா, நீ பெரிதா என்ற போட்டியில் பிரிவினை, கருத்து மோதல்களுக்குக் காரணமாகி வருகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது இன்று வரையில் அரசியல் கொள்கை ரீதியில் ஒற்றுமைப்பட்ட ஓர் அமைப்பல்ல. அவற் றுக்கு மத்தியில் தமிழர் அரசியல் குறித்துப் பலவேறுபாடுகள் உண்டு. அது ஒரு தேர்தல் கூட்டு மட்டும் என்ற ரீதியில்தான் செயற்படுகிறது. தேர்தலில் ஒன்றாகப் போட்டியிடுவதைத் தவிர வேறு இணக்கங்கள் அவற்றுக்கு இடையே இல்லை. அரசியல் பொது இணக்கம் ஒன்றை எட்டாததன் காரணமாகவே கூட்டமைப்புக்குள்ளேயே ஒரு கட்சியின் மீது மற்றைய கட்சி அல்லது தலைவர்கள் ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டும் நிலை ஏற்படுகிறது. அதுவே ஏனைய பிரச்சினைகளுக்கான மூல காரணமாகவும் காட்டப்படுகிறது.

எனவே அரசியல் தலைமைகள், கட்சிகள் மத்தியில் தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் பொது இணக்கப்பாடு ஒன்று ஏற்படுவதுதான் முக்கியமே தவிர, அவை அனைத்தும் சேர்ந்து ஒற்றுமையாக ஒரே கட்சியாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எல்லோருடைய அரசியல் நோக்கமும் தமிழ் மக்களின் நலன் கருதிய தீர்வுதான் என்றால், அது எவர் மூலம் கிடைத்தால்தான் என்ன? எவர் குற்றி அரிசியானால்தான் என்ன? அரிசிதானே முக்கியம். ஆகவே, தேவையானது கட்சிகள், தலைவர்கள் இடையிலான அரசியல் பொது இணக்கமே.





# நம்ம பள்ளிகளும் படிப்பும்; நம்ம பயல்களும் பரீட்சைகளும்! பெண்பிள்ளைகளும் பெடியளும்

செ.அன்புராசா அடிகள்

பொதுப் பரீட்சை மண்டபங்களில் பெண்பிள்ளைகளும் பெடியளும் (ஆண்பிள்ளைகளும்) தமக்குரிய வினாத்தாள்களைப் பெற்றுக்கொண்டு விடைகளை எழுதத் தொடங்கும்போது பின்பற்றும் சில படிமுறைகளை ஒருவர் வரிசைப்படுத்துகிறார். பெண்பிள்ளைகள் (1) எழுதுவார்கள் (2) முடியை காதுக்குப் பின்னால் எடுத்து செருகுவார்கள் (3) மீண்டும் எழுதுவார்கள் (4)பேனாவில் மையிருக்கா என்று பார்ப்பார்கள் 5)மீண்டும் எழுதுவார்கள் (6)கூடுதலாக பேப்பர் கேட்டு வாங்குவார்கள் (7)மீண்டும் எழுதுவார்கள்.
பெண்பிள்ளைகளின் மேற்சொன்ன படிமுறையை பெடியளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் (1) எத்தனை பேர் பரீட்சை எழுதுகிறார்கள் என எண்ணுவார்கள் (2)மேற்பார்வையாளர்களை நோட்டம் விடுவார்கள் (3)மண்டபத்தில் உள்ள யன்னல்களை எண்ணுவார்கள். (4) எப்பவடா வெளியே போகலாம் என முதுகை நெளித்து மணியைப் பார்ப்பார்கள் (5)அடுத்த பரீட்சையில் நன்றாகப் படித்து எழுதவேண்டும் என எண்ணுவார்கள்.
கொஞ்சம் நகைச்சுவையாக இது கூறப்பட்டாலும். இந்த அவதானிப்பிலும் ஒரு வகைக் கணிப்பு இருப்பதாகவே தெரிகிறது. ஒரு முறை அம்மா, அன்னை ஆகிய சொற்களுக்கான ஒத்த கருத்துள்ள சொற்கள் இரண்டினைத் தருக? என ஒரு கேள்வி கேட்கப்பட்டது. ஒரு மாணவன் "தாயே, மாதாவே, இந்த நேரத்திலை அந்தச்சொற்கள் இரண்டும் வருகுதில்லையே!' என வாய்விட்டுப் புலம்பினானாம். விடையைத் தெரிந்துகொண்டே, அதுதான் விடையென்பதை அறியாது இருப்பவர்களைப்பற்றி என்ன சொல்வது? பரீட்சையில் சித்தியெய்தினால் போதும் எனப் படித்தால் இப்படித்தான் இருக்கும்! அவ்வாறில்லாமல், கற்பதைப் பொருள் உணர்ந்து கற்றால் சிந்தனை வீச்சையும் அறிவுப் பரப்பையும் அகலிக்க முடியும்.

**மாகாண ரீதியில் வடமாகாணம் 9ஆவது, முதலாவது இடங்களில்!**

2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சி.ஈ. சாதாரண பரீட்சைப் பெறுபேறுகளின் படி, கல்வி அடைவு மட்டத்தில் வடமாகாணம் ஒன்பதாவது இடத்தில் இருப்பதாகவும், (ஒன்பது மாகாணங்கள்தான் இலங்கையில் உள்ளன), சித்தி எய்யாதோர் நிலையில் வடமாகாணம் முதலிடத்தில் இருப்பதாகவும் கலந்துரையாடலொன்றில் கவலையோடு குறிப்பிட்டிருந்தார் வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர்.
கடந்த ஆண்டில்(2016) வடமாகாணத்தில் 459 பாடசாலைகளில் இருந்து 17ஆயிரத்து 418 மாணவர்கள் ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியபோதிலும் அவர்களில் 256பேர் மட்டுமே 09 பாடங்களிலும் 'ஏ'சித்தி பெற்றதோடு, 10ஆயிரத்து 562பேர் உயர்தரம் படிப்பதற்கு தகுதி பெற்றிருந்தனர்.
இதேவேளை 775பேர் எந்தவொரு பாடத்திலும் சித்தி பெறவில்லை என்பதோடு, 6 ஆயிரத்து 851பேர் உயர்தரம் படிப்பதற்கு தகுதி பெறவில்லை. அதாவது பரீட்சையில் தோற்றி சித்தி பெறத் தவறியவர்கள் 39 சதவீதமானவர்கள் ஆவர்.
நாட்டில் போர்ச் சூழல் நிலவிய காலப்பகுதியில் கல்வி அடைவு மட்டத்தில் வடமாகாணம் கோலோச்சி இருந்துள்ளது என்பது வரலாறு. அப்படி இருந்த வடமாகாணம், இப்போது ஏன் கடைசி இடத்தை அடைந்திருக்கிறது என்பதனை ஆராய்வது மிக முக்கியமான ஒன்றாகும்.

**'9ஏ'யில் கட்டுண்டு கிடத்தல்...**

'9ஏ'யை 'ஏ9' என வாசித்து விடாதீர்கள்! பிறகு, கண்டியில்தான் போய் நிற்பீர்கள்!
அனைத்துப் பாடங்களிலும்'ஏ'எடுத்தவர்களின் எண்ணிக்கை எந்தப் பாடசாலையில் அதிகம் எனப் பாடசாலைகளைத் தரம் பிரித்துப் பார்க்கிற நிலை தொடர்கிறதே தவிர, எத்தனை பேர் உயர்தரம் படிக்கக்கூடத் தகுதிபெறாமல் இருக்கிறார்கள் என்பது குறித்து ஆராய்வது மிகக் குறைவாக இருக்கிறது.
இவ்வாறு பெரும் எண்ணிக்கையான சதவீதத்தினர் சித்திபெறாமல் போவதற்குக் காரணம் என்ன என ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாகும்.
ஐந்தாம் ஆண்டு புலமைச் பரிசில் பரீட்சையில் மிகச் சிறப்பாகச் சிந்தியடைந்த பிள்ளைகளை தங்கள் பாடசாலையில் அனுமதிப்பது, அல்லது பரீட்சைகள் வைத்து அதில் மிகச் சிறப்பாகச் சித்தி பெறுகிறவர்களை மட்டும் தங்கள் பாடசாலையில் இடம் கொடுத்து, அவர்களைக்கொண்டு அனைத்தும் பாடங்களிலும் 'ஏ' எடுக்க வைப்பிப்பதில் என்ன சாதனை இருக்கிறது என்பதுதான் புரியாமல் இருக்கிறது! இவ்வாறு பெறுபேறுகளைப் பெறுகிற பாடசாலைகளின் சாதனைகள் தான் நாளேடுகளிலும் ஏனைய ஊடகங்களிலும் அதிக கவனத்தை பெறுகின்றன என்பது கவலைக்குரியதொன்று.
நகரத்துப் பாடசாலைகளைப் போன்று வசதி வாய்ப்புக்களைப் பெறாத பாடசாலைகளில் சாதாரண மாணவர்களை ஊக்கப்படுத்தி, பயிற்றுவித்து, பரீட்சைப் பெறுபேறுகளின் அடைவு மட்டத்தைத் தக்கவைப்பது பெரும் சாதனையாகக் கொள்ளப்பட வேண்டும்.
ஆனால், எமது சமுதாய ஒட்டுமொத்தச் சிந்தனையும் '9ஏ' யில் கட்டுண்டு கிடக்கும்வரை கல்வி அடைவு மட்டம்' 'அதோகதி' யாகத்தான் அமையுமென அடித்துக் கூறலாம்.

**நான்கு வகைப்பட்ட பிரிவினர்**

தற்போது வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் நான்கு வகைப்பட்ட பிரிவினரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களிடையே காணலாம்: (1) திறமையாகக் கற்கும் மாணவர்கள் (2)மெதுவாகக் கற்கும் மாணவர்கள் (3)விசேட கல்வித் தேவையுடைய மாணவர்கள் (4)இடைவிலகல் மாணவர்கள். பாடசாலை சமுகத்தினர் பொதுவாக முதல் வகையினரோடு திருப்திப்பட்டுக் கொள்கிறார்களே தவிர, ஏனைய மூன்று வகைப்பட்ட மாணவர்களைப்பற்றி அக்கறை காட்டுவது இல்லை . ஏனெனில் திறமையாகக் கற்கும் மாணவர்களை மட்டும் தேர்ந்தெடுத்துக் கற்பிக்கும் பாடசாலைகளாகத்தான் புகழ்பெற்ற - பிரசித்திபெற்ற பாடசாலைகள் திகழ்கின்றன. அவ்வாறாயின் மெதுவாகக் கற்கும் மாணவர்களும், விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களும் எவ்வாறு கல்வி உதவியைப் பெறமுடியும்? இவர்களுக்கே இந்த நிலை என்றால் பாடசாலையில் இருந்து இடைவிலகிச் செல்லும் மாணவர்கள் மீது எவர்தான் கரிசனை காட்டப் போகிறார்கள்?

### ஒரு கிராமத்திலேயே பாடசாலை செல்லாத 42 சிறுவர்கள்!

உதாரணமாக, மடுறோட்டில் இருந்து மடுப் பேராலயம் செல்லும் வழியில் 02ஆம் கட்டை என்ற இடத்தில் புதிதாககுடியமர்த்தப்பட்ட கிராமமொன்றில் பாடசாலை செல்லாத சிறுவர்களை வலைவிரித்து கடந்த பெப்ரவரி 13 ஆம் திகதியன்று மேற்கொண்ட தேடுதலில், கொஞ்ச நஞ்சமல்ல, 42 சிறுவர்கள் சிக்கியிருக்கிறார்கள். அந்தப் பகுதி கிராமசேவகர், பிரதேச செயலகத்தினர், பாடசாலை அதிபர்கள், மாவட்ட சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தினர், சமுக ஆர்வலர்கள் எனப் பல தரப்பினர் ஒன்று திரண்டு திட்டமிட்டு இந்தக் கிராமத்தில் ஒரு சுற்றிவளைப்பை அதாவது, அழிப்பதற்கான சுற்றிவளைப்பாக அல்லாமல், வருங்கால சிற்பிகளாய் ஆகவேண்டிய சிறுவர்களுக்கான சுற்றிவளைப்பை மேற்கொண்டதன் பயனாக இந்த நாற்பத்தியிரண்டு சிறுவர்களும் பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள்.

அத்துடன் இனிமேல் பாடசாலை செல்லாது இருக்கும் மாணவர்களுக்கு எதிராகவும், அவர்களைப் பாடசாலை அனுப்பாத பெற்றோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இந்த விடயத்தில் சிறுவர்களைக் குற்றம் சுமத்துவதைவிட, பெற்றோர் தம் பொறுப்பில் இருந்து தவறுகிறார்கள் என்றுதான் கொள்ளவேண்டும். ஏனெனில் சிறுவயதில் இருந்து கல்வியின் மீதும், பாடசாலையின் மீதும் ஆர்வத்தை அவர்களுக்கு ஊட்டி வளர்த்திருந்தால், அவர்கள் இந்தச் சின்ன வயதிலே பாடசாலை செல்லாது வீண்பொழுதைக் கழிக்க மாட்டார்கள்.

ஆகவே, பாடசாலையில் இருந்து இடைவிலகும் மாணவர்களைவிட, அவர்கள் இடைவிலகக் காரணமாயிருக்கும் பெற்றோர்களே குற்றவாளிகள்.

> 'படிப்பது எங்கள் வேலையல்ல. அது மாணவர்களின் வேலை!'என அதிபர்களும் ஆசிரியர்களும், 'படிப்பிப்பது எங்கள் வேலையல்ல, அது அதிபர் ஆசிரியர்களின் வேலை!'எனப் பெற்றோரும் பழைய மாணவர்களும் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்திக் கொண்டிருந்தால் கல்விச் செயற்பாடுகளில் முன்னேற்றம் காணமுடியாது.

### கட்டாயமானது கல்வி என்பதைப் புகட்டிய நீதிபதி

இதுபோன்று பாடசாலை செல்லாது வேலைக்குப் போகும், சாக்குப் போக்குகள் சொல்லிவிட்டு பாடசாலை செல்லாது 'கட்டடிக்கும்' சிறுவர்களைக் கண்டுபிடித்து அவர்களைப் பாடசாலையில் சேர்க்கின்ற பணியைக் கிளிநொச்சி நீதிவான் ஆனந்தராஜாவளன் ராஜா சில மாதங்களுக்கு முன்பே முன்னெடுத்திருக்கிறார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேசசெயலகங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள ஒவ்வொரு கிராமங்களுக்கும் கிளிநொச்சி மாவட்ட சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள அதிகாரிகள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உத்தியோத்தர்கள், கிராம அலுவலர்கள், கிராம அபிவிருத்தி சங்கத்தினர் என அனைவரும் இணைந்து பாடசாலை செல்லாத சிறுவர்களைத் தேடிச் சென்றுள்ளனர். இவ்வாறு தேடிச்சென்றதில் ஏறக்குறைய 160 சிறுவர்கள் பாடசாலை செல்லாதிருக்கும் சிறுவர்களாகக் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களை நீதிமன்றத்துக்கு அழைத்துவந்து அந்தச் சிறுவர்கள் பாடசாலை செல்வதற்கான அனுகூலங்களை ஆராய்ந்து அதற்கு ஆவனை செய்யும் ஏற்பாட்டினை நீதிபதி கடந்த சில மாதங்களாக மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. நீதிபதியின் இந்த உயரிய செயற்பாடு, வருங்கால சந்ததியினர் மீது அவர் வைத்திருக்கும் சமுக அக்கறையை வெளிப்படுத்துகிறது. இவ்வாறு இந்தச் சிறார்கள் கல்வியற்று - கல்வியறிவற்று கவனிப்பாரற்றுத் திரிவார்களே யானால் வருங்காலத்தில் பாடசாலைகளுக்குப் பதிலாக சிறைச்சாலை களைத்தான் கட்டவேண்டி வரும் எனக் கருத நேர்கிறது.

ஆக, சிறுவர்களுக் கான கல்வி கட்டாயமானது - என்பதை உணர்வதோடு எக்காரணத்தை முன்னிட்டும் அதற்குத் தடங்கல் இருக்கக் கூடாது என்பதையும் நாம் உணரவேண்டும்.

இத்தகைய மனநிலை எமது பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் ஊர்ப் பெரியவர்கள், சமுகத் தலைவர்கள் என அனைவருக்கும் இருக்கவேண்டும். இது போன்று அனைத்துக் கிராமங்களிலும் உள்ளவர்கள் குறிப்பாக கிராம அலுவலர், சிறுவர் நலம் பேணும் தரப்பினர் அக்கறை காட்டி, இன்றைய சிறுவர்கள் எவ்வித விதிவிலக்குகளும் இல்லாமல் கல்விபெற வைக்கவேண்டும்.

### அனைவரும் இணையவேண்டியது அவசியம்

கல்விப் பெறுபேற்றில் மட்டுமல்லாது மாணவர்களின் ஒழுக்கம், விளையாட்டு, ஏனைய அனைத்துக் செயற்பாடுகளிலும் அடைவு மட்டத்தை அதிகரிக்க வேண்டுமென்றால், கல்விப் புலம் சார் தரப்பினர் மற்றும் சமுகத்தின் கூட்டுப் பொறுப்பில் உள்ள அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுகிறபோதுதான், அறிவு படைத்த சமுதாயத்தை உருவாக்க முடியும்.

'படிப்பது எங்கள் வேலையல்ல. அது மாணவர்களின் வேலை!'என அதிபர்களும் ஆசிரியர்களும், 'படிப்பிப்பது எங்கள் வேலையல்ல, அது அதிபர் ஆசிரியர்களின் வேலை!'எனப் பெற்றோரும் பழைய மாணவர்களும் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்திக்கொண்டிருந்தால், கல்விச் செயற்பாடுகளில் முன்னேற்றம் காணமுடியாது. மேற்குறிப்பிட்ட கூற்றுக்களில் நியாயப்பாடுகள் வெவ்வேறு தரப்பினர் பக்கம் இருப்பினும், ஒரு பகுதியினர் செய்யும் பணிகளுக்கு மற்றைய பகுதியினர் உதவி ஒத்தாசையாக இருக்க வேண்டும்.


### கடவுளிடம் மட்டுமல்ல கடமையிலும் பக்தி வேண்டும்

அண்மையில் ஓர் ஆசிரியை தனது ஆசிரியப் பணியின் அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார். தன் பணிகளை நேர்த்தியாகச் செய்துகொண்டு வருகிற நேரத்தில் அவர் மிகவும் கடமையுணர்வுடன் எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்கு அப்பாலும் சென்று பணிகளை ஆற்றிவருவதை அவதானித்துவிட்டு, "நீர் எவ்வளவு செய்தாலும் உமக்கு எவரும் சிலை வைக்கமாட்டாங்கள்! ஆகவே, சாதாரணமா உம்முடைய பணிகளை மட்டுமே நீர் செய்யும்!" எனச் சொன்னாராம் ஆசிரியராகக் கடமைபுரியும் சக கடமைவீரர். அவரது மனப்பாங்கு எப்படியிருக்கிறது என எண்ணிப் பார்ப்பது நல்லது.

இவ்வாறான மனநிலை கொண்ட இரண்டு, மூன்று ஆசிரியர்கள் ஒரு பாடசாலையில் இருப்பார்களாயின் அப்பாடசாலை பின்னடைவைச் சந்திப்பது தவிர்க்க முடியாததாகிவிடும். எனவேதான், ஆசிரியத் தொழியில் அல்ல, பணியில் ஈடுபடுகிற ஒவ்வொருவரும் கடவுளிடம் மட்டுமல்ல, ஆசிரியக் கடமையிலும் பக்தி கொண்டிருக்க வேண்டும் என்பது அத்தியாவசியமானது.

### கல்வியை நேசிக்கக் கற்றுக்கொடுப்போம்

வகுப்பறைகளை நாடுவதற்கு பிள்ளைகளை நாம் இப்போது ஊக்கப்படுத்தவில்லை என்றால், வருங்காலத்தில் சிறைச்சாலைகளில்தான் எமது செல்வங்களைச் சந்திக்கவேண்டி வரும்! அதற்கு அவர்கள் பொறுப்பல்ல, அவர்தம் பெற்றோர்களும் சமுகமும்தான் அதற்குப் பொறுப்பு என்பதைக் கவனத்தில் கொண்டு கல்வியையும், பாடசாலையையும், ஆசிரியர்களையும் நேசிக்க குழந்தைச் செல்வங்களைத் தூண்டுவோம்.



## ஆசிரியருக்கான கடிதம்

### வாகனம் செலுத்துவதில் அதிவேகம் தவிர்ப்போம்

பாதசாரிக் கடவையில் வாகனத்தை நிறுத்தி வீதியைக் கடக்க பாதசாரிகளுக்கு உதவி புரியாத வாகனச் சாரதிக்கு நீதிமன்றில் தண்டம் விதிக்கப்பட்டது. பேருந்துத் தரிப்பிடம் இல்லாத இடத்தில் தாம் செலுத்திச்சென்ற பேருந்தை நிறுத்திப் பயணிகளை ஏற்றிய குற்றச்சாட்டில் பேருந்துச் சாரதிக்கு நீதிமன்றில் தண்டம் விதிப்பு போன்ற செய்திகளை இப்போது அடிக்கடி பத்திரிகைகளில் வாசிக்க நேர்கிறது. உண்மையில் வீதி விபத்துக்கள் ஏற்பட முக்கிய காரணங்களில் ஒன்று வாகன ஓட்டுநர்கள் வாகனம் செலுத்துதல் தொடர்பான ஒழுங்குமுறைகள் குறித்து தெளிவாக அறிந்திருக்காமை ஆகும். அத்தோடு அவர்கள் வீதியில் பயணிக்கும் பாதசாரிகள் மற்றும் வாகனங்கள் குறித்து அலட்சியப் போக்குடன் செயற்பட்டு தமது வாகனங்களை அளவுக்கு அதிகமான வேகத்தில் செலுத்த முனைவதும் வீதி விபத்துக்கள் ஏற்பட ஒரு காரணமாகிறது.

குறிப்பாக இன்றைய கால கட்டத்தில் யாழ். குடாநாட்டில் வயதிலும், வாகனம் செலுத்துவதில் அனுபவமும் குறைந்த இளைஞர்கள் பலர் தத்தமது மோட்டார்சைக்கிள்களை அதிவேகமாகச் செலுத்துவதன் காரணமாக கட்டுப்பாட்டை இழந்து தமது மோட்டார்சைக்கிள்களை பாதையில் செல்வோர் மீதோ பாதை ஓரத்து விளக்குக் கம்பத்தின் மீதோ கொண்டு சென்று மோதி பெறுமதிமிக்க தமது மோட்டார் சைக்கிள்களையும் நாசமாக்கி, பல சந்தர்ப்பங்களில் தமது உயிரையும் இழக்க நேர்கிறது.


அந்த வகையில், எம்மவர்கள் குறிப்பாக இளைய தலைமுறையினர் தத்தமது வாகனங்களை மிதமான வேகத்தில் செலுத்தி பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வதுடன் பாதசாரிகளுக்கு எதுவித பாதிப்புக்களையும் ஏற்படுத்தாது அவதானத்தோடு நடந்து கொள்வது இன்றைய காலத்தின் தேவையாக ஆகியுள்ளது.

...தன்
...வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர்வோருக்கான நிவாரணங்களை வழங்க அரசு தீர்மானம்

## 47 அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான வரி நீக்கம்



நுகர்வோருக்கான நிவாரணங்களை பெற்றுக்கொடுக்கும் விதமாக அரிசி, சீனி, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் உள்ளடங்கலான 47 அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான வரி விதிப்பனவுகள் நீக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றுக்கான விசேட வர்த்தக வரிகள் மட்டுமே விதிக்கப்பட்டுள்ள தெனவும் நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவது குறித்து ஆராயும் விதமாக வாழ்க்கைச் செலவு தொடர்பிலான அமைச்சரவை உப குழு நேற்றுமுன்தினம் கூடிய போதே இந்தத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அமைச்சர் மங்கள சமரவீர, "வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகளை எதிர்வரும் இரண்டு மாத காலத்துக்கு பகிர்ந்தளிக்கவுள்ளோம். இதற்கான பணிப்புரையை அரச தலைவர் வழங்கியுள்ளார்.

அதே வேளை இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் அரிசி மீதான 5 ரூபா விசேட வர்த்தக வரியை 25 சதம் வரை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இறக்குமதி செய்யப்பட்ட உலர்த்தப்படாத மீனுக்கான விசேட வர்த்தக வரி 50 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.


> இறக்குமதி வரி மற்றும் விசேட வர்த்தக வரி குறைக்கப்பட்ட அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருள்களினதும் விலைகள் விரைவில் குறைக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வரி குறைப்பு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் தலபத் மற்றும் கொப்பரா மீன்களுக்காக இதுவரை 75 ரூபா விசேட வர்த்தக வரி விதிக்கப்பட்டதுடன், தற்போது அந்த வரி விதிப்பனவு 25 ரூபா வரை குறைக்கப்பட்டுள்ளது. கோழித்தீனிக்காக பயன்படுத்தப்படுகின்ற சோளத்திற்கான இறக்குமதி வரி அனைத்தையும் நீக்கி ஒரு கிலோகிராம் சோளத்துக்கு புதிய வர்த்தக வரியாக 10 ரூபாவினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


மேலும், இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மாவுக்கான செஸ் வரி விதிப்பனவுகள் இதுவரைகாலமும் 25 ரூபாவாக இருந்தது. தற்போது 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. கோதுமை மீதான வரியை மூன்று ரூபாவால் குறைப்பதற்கும் வாழ்க்கை செலவு தொடர்பிலான அமைச்சரவை உப குழு தீர்மானித்துள்ளது." - என்றார். (ஓ)

## நடப்பாண்டின் ஜூலை மாத காலப்பகுதிக்கான நகரும் சராசரி பணவீக்க மாதிரி

நடப்பு வருடத்தின் ஜூலை மாத காலப்பகுதிக்கான நகரும் சராசரி பணவீக்கம் 5.4 வீதமாகக் காணப்படுகிறது. அத்துடன் ஜூன் மாதத்துக்கான நகரும் சராசரி பணவீக்க பெறுமானங்கள் 5.5 சதவீதமாகவே அமைந்துள்ளமை குறித்து நோக்கத்தக்கது. நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் ஆண்டு ரீதியான பணவீக்கம் என்பவற்றுக்கிடையேயான மாதிரியோடு அவை பின்வருமாறு அமைந்துள்ளது. (ஓ)




## இலங்கை வங்கியின் குருதிக் கொடை நிகழ்வு



இலங்கை வங்கியின் 78வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வவுனியா ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி மேற்தரக்கிளையில் குருதிக் கொடை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இலங்கை வங்கியின் முகாமையாளர் கே.சிவஞானசுந்தரம் தலைமையில் இடம் பெற்ற இந்தநிகழ்வில் ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்துகொண்டு குருதிக் கொடை வழங்கினர். (ஓ)

## வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய கடன்தொகை 88,913 கோடி

### நிதி அமைச்சின் காலாண்டு நிதி அறிக்கையில் சுட்டிக்காட்டு

මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE



அரசின் கீழ் இயங்கும் 42 வணிக நிறுவனங்கள் 88 ஆயிரத்து 913 கோடி ரூபா தொகை மதிப்பீடுடைய கடனை வங்கிகளுக்கு செலுத்த வேண்டியுள்ளது என்ற தகவல் நிதி மற்றும் தகவல் ஊடகத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள காலாண்டு நிதி அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் இலங்கை மின்சார சபை 3 ஆயிரத்து 174 கோடி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 38 ஆயிரத்து 255 கோடி, இலங்கைதுறைமுகஅதிகாரசபை 23 ஆயிரத்து 765 கோடி, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை 4 ஆயிரத்து 226 கோடி, வரையறுக்கப்பட்ட வானூர்தி நிலையம் மற்றும் வானூர்தி சேவை கம்பனி 3 ஆயிரத்து 852 கோடி மற்றும் சிறி லங்கன் எயார்லைன் கம்பனி 9 ஆயிரத்து 158 கோடி ரூபாதொகைமதிப்பீடுஉடையதானகடனை வங்கிகளுக்குசெலுத்தவேண்டியுள்ளதுஎன அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## முதலீட்டுக் கல்வியை விரிவுபடுத்தும் முயற்சியில் கொழும்பு பங்குச்சந்தை

### நாடு முழுமையுமாக 350 முதலீட்டுக் கல்வி பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டது

நடப்பாண்டின் முதல் காலாண்டுப் பகுதிக்குரித்தான பங்குச்சந்தையின் முதலீடு சார் செயற்பாடுகளை அதிகப்படுத்தும் விதமாக கொழும்பு பங்குச் சந்தை நிலையம் இதுவரை 350 முதலீட்டு கல்வி பரப்புரைகளை நாடு முழுமையுமாக முன்னெடுத்துள்ளது.

இதன்படி கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலைய முதலீட்டாளர்களின் கல்வி மற்றும் விழிப்புணர்வு முயற்சிகள் வலையமைப்பாக இடம்பெற்றுவருகிறது. அத்துடன் பிராந்திய முதலீட்டாளர் மன்றங்கள், கல்வி பட்டறைகள், சந்தை நிலமைகள் மீதான கருத்தரங்குகள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான திட்டங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பங்குச் சந்தை மற்றும் நிதியியல் கல்வியறிவு ஆகிய செயற்பாடுகள் மூலம் முதலீட்டுக்கல்வியை விரிவுபடுத்தும் முயற்சிகளையும் கொழும்ப பங்குச்சந்தை நிலையம் மேற்கொண்டுவருகிறது.

மேலும் மாத்தறை, கண்டி, குருநாகல், நீர்கொழும்பு, யாழ்ப்பாணம், அநுராதபுரம், இரத்தினபுரி, அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களில் அமையப்பெற்றுள்ள கிளை அலுவலகங்களிலும் முதலீட்டுக் கல்வி மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ)


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

2/8/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| | | | |
|---|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| ASPI ↓ | -19.18 | 6,585.53 | 6,604.71 |
| S&P SL20 ↑ | 0.74 | 3,789.83 | 3,789.09 |
| வியாபாரப்புரள்வு | | 978,259,070 | 1,221,211,260 |
| உள்நாடு- கொள்வனவு | | 186,649,520 | 529,705,024 |
| விற்பனை | | 940,577,220 | 337,339,552 |
| வெளிநாடு- கொள்வனவு | | 791,609,600 | 691,506,180 |
| விற்பனை | | 37,681,864 | 883,871,680 |



| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 172.50 | 3,350,327 | 577,635,484 |
| எக்ஸ்போ லங்கா | EXPO.N | 6.60 | 20,014,810 | 130,096,255 |
| செலான் வங்கி | SEYB.X | 58.60 | 531,206 | 31,084,418 |
| அக்சஸ் எஞ்யினியறிங் | AEL.N | 26.50 | 1,162,922 | 30,817,991 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 233.90 | 124,839 | 29,087,592 |
| சிலோன் கிரேன் எலிவேட்டர்ஸ் | GRAN.N | 72.20 | 224,678 | 16,417,638 |
| யுனியன் வங்கி | UBC.N | 15.00 | 1,083,036 | 16,245,309 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.X | 190.00 | 83,351 | 15,835,766 |
| சம்பத் வங்கி | SAMP.N | 268.00 | 33,449 | 8,933,300 |
| சொ.்.ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் | SHL.N | 12.70 | 693,695 | 889,617 |

சம்பத் வங்கி Right issue 1 for 6 @ Rs.245

பங்குலாபம்

[illegible] - [illegible]

சேவ்ரோன் லூப்ரிக்கன் - ரூபா 2.00

| சந்தைக் குறிகாட்டிகள். | | |
|---|---|---|
| கம்பனிகள் | ↑ | 295 |
| [illegible] | ↑ | 238 |
| [illegible] | ↓ | 10.7 |
| புத்தகப்பெறுமதி | ↓ | 1.4 |
| பங்குலாப விலை | ↓ | 2.9 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை எண்ணங்களில் பணிவுகொள்ளுதல்

## பணிநிலைகளின் உன்னதமான சுட்டி

இரா.தனம்



தொழில் முறை விருத்தி என்பது வாழ்வாதாரத்தில் அதிக பங்கினைச் செலுத்துகின்றது. வாழ்வாதாரம் சார்ந்து அவை சிறந்த முறையிலே கட்டமைவு பெறவேண்டும். இலங்கையைப் பொறுத்தமட்டிலே அரசதுறை சார்ந்தும், தனியார் துறை சார்ந்தும் தீர்மானங்களின் அடிப்படையிலான குறித்தொதுக்கப்பட்ட பணிநிலை வேண்டுகைகள் வர்த்தமானி அறிவித்தல் மூலமும் பொது விளம்பர அறிவித்தல் மூலமும் வெளிப்படுத்தப்படுகின்றன.

அவற்றுக்கு விண்ணப்பம் செய்வோருள் தகைமை உடையவர்கள் போட்டிப் பரீட்சை முறைமையின் ஊடு தெரிவுசெய்யப்படுகின்றனர். பல சந்தர்ப்பங்களில் நேர்முகத்தேர்வினூடும் தேர்வுகள் இடம்பெற்று தெரிவு செய்யப்படுவோர் பணிகளில் அமர்த்தப்படுகின்றனர். குறித்த பதிவிக்கான தகுதிகாண் காலத்தில் திருப்திகரமான சேவையை அவர்கள் செய்யும் இடத்து அதே பதவியில் நிரந்தர நியமனங்களைப் பெற்றுத் தொடர்ந்தும் பணியாற்ற அனுமதிக்கப்படுகின்றனர். இதனிடையே சேவை மூப்பினையும், சம்பள அளவுத் திட்ட மேலதிக உள்ளீடுகளை வழங்கும் பொருட்டும் பணியாளர்களின் வினைத்திறனை பரீட்சார்த்திக்கும் விதமான தடை தாண்டல் பரீட்சைகளும் இடம்பெறுகின்றன. அதில் வெற்றி பெறுவோருக்கு குறித்த சம்பளப் படிநிலைகள் வழங்கப்படுகின்றன.

**பட்டம் பெறுவோரும் ஆசிரிய வளமும்**

இந்தநிலையிலே வருடம் தோறும் பல்கலைக்கழகங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் தங்களது பட்டக் கற்கை நெறிகளை பூர்த்தி செய்து வெளியேறுகின்றனர். தங்களுடைய படிப்புரிமைக்காக வருடக் கணக்கில் காத்திருக்கின்றனர். அரச துறை சார்ந்து பணிநிலை வெற்றிடங்கள் குறைவாக இருப்பதான காரணங்களும், நிதிப் பற்றாக்குறையின் தன்மைகளும் வெளிக்காட்டப்பட்டு மாணவர்கள் வேலை தேடும் போராட்டங்களுள் உந்தப்படுகின்றனர். தொடர் போராட்டங்களை நாடு முழுமையு மாக மேற்கொண்டும் வருகின்றனர். இவை யாவும் நாம் அறிந்த விடயங்களே. இருந்த போதும் வடமாகாணத்திலும் சரி கிழக்கு மாகாணத்திலும் சரி ஆசிரிய மற்றும் மருத்துவர்களுக்கான வெற்றிடங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ள பாடசாலைகளில் அனைத்து வசதிகள் இருந்தும் வரலாறு, விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. மாணவர்கள் அந்தத் தேவை வேண்டப்படுகின்ற பாடசாலைகளில் இருந்து இடைவிலகி வேறுபாடசாலைகளை நாடிச் செல்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

**பணிநிலை வேண்டுகை**

பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களுக்கான ஆசிரியர்கள் மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றனர். பாடசாலை ரீதியாக குறைவான ஆசிரியர்களே பங்கிடப்பட்டுள்ளனர். இதனிடையே ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப இந்தியாவிலிருந்து ஆசிரியர்களை வரவழைக்கப்போவதான செய்திகளும் வெளிவந்துள்ளன. உண்மையில் மாவட்ட ரீதியில் படித்துப் பட்டம் பெற்ற மாணவர்களே அந்தப் பணிநிலைகளுக்கு உள்வாங்கப்பட வேண்டும். படித்தவர்களுள் அண்ணளவாக 60 வீதமானோர் வெளிநாடு சென்றுள்ளனர். ஒவ்வொருவரும் இது எங்களுடைய தேசம், இது எங்களுடைய மாவட்டம் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். வருங்கால சிறார்கள் எமது உறவுகள், அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நாம் உதவ வேண்டும் என்ற உணர்வோடு தமது பணிகளை ஆற்ற முன்வரவேண்டும். வேலைவாய்ப்புகளை பெறுவதற்கு உணவு ஒறுப்பு ஆய்ப்பாட்டில் எல்லாவிதமான கோணங்களில் முயற்சிகளை மேற்கொள்கின்றனர். ஆனால் பதவி கிடைத்ததும் அதனை விடுத்து வெளிநாடு செல்கின்றனர். இந்தச் செயல்நிலைகள் இன்னொருவருக்குக் கிடைக்க வேண்டிய பணிநிலைச் சந்தர்ப்பங்களை இல்லாமல் செய்துவிடுகிறது.

**கல்வி தரும் சிறப்பு**

ஆக, கல்விச் செல்வம் என்பது ஒரு பிள்ளையின் உயர்வுக்கு வழிகாட்டி அவனைமேன்மையடையச் செய்யும் எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்பதற்கிணங்க ஆசிரியர்களின் பணியும் சிறப்புறுகிறது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நிலைகளிடையே தெய்வத்திற்கு முன்பே குருவினுடைய பணியானது முன்னிலை பெறுகிறது. ஆசிரியர்களின் வழிகாட்டலில் பல ஆயிரம் ஆசிரியர்கள் உருவாகின்றனர். எப்பணியிலும் சிறந்த பணி ஆசிரியப்பணி என்பதனை யாரும் மறுத்துவிட முடியாது. எனவே ஆசிரியப் பணி செய்யும் ஒவ்வொருவரும் மாணவர்களுக்கு அறிவூட்டும் கைங்கரியத்தை உளமார விருப்போடு செய்திருக்க திடசங் கற்பம் பூண வேண்டும்.





**மருத்துவ சேவை**

இதேபோன்று மாவட்ட ரீதியாக ஒரு மருத்துவமனையில் பணியாற்ற வேண்டிய மருத்துவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. அதற்கு இணையாக தாதியரும் குறைவாகவே உள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு பணியாற்றும் மருத்துவர்களும் மனமுவந்து தங்களுடைய பணியை செய்ய வேண்டும்.

இந்த விடயத்தில் மக்களின் அனுசரணையும் ஆதரவும் மருத்துவர்களுக்கு இருக்க வேண்டும். அவர்களோடு இணைந்து மக்கள் நடக்க வேண்டும். மக்களின் அன்பும் ஆதரவும் மருத்துவர்களுக்கு பக்கபலமாக இருக்க வேண்டும். அத்துடன் அந்தந்த மாவட்டத்திலிருந்து படித்து பட்டம் பெற்றவர்கள் அந்த மாவட்டத்திலே தமது நற்பணியை மேற்கொள்ள முயற்சிகளை செய்ய வேண்டும். இதுவே மக்களின் வேண்டுதலாக அமையப்பெற்றுள்ளது.

இதற்கு சான்றாகப் பல மருத்துவர்கள் தங்களுடைய உன்னதமான பணிகளை நேரகாலம் பாராது செய்துவருவதையும் கருத்தில் கொள்ள வேண்டும். முல்லைதீவு மாவட்டத்திலே பிறந்து வளர்ந்து கல்வி கற்று மருத்துவப் பட்டம் பெற்று மருத்துவராகக் கடமையாற்றும் பெண் மருத்துவர் ஒருவர் எமது மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்திருப்பது பாராட்டத்தக்கது. மருத்துவப் பட்டம் பெற்று வெளியேறும் போது தனது மாவட்டத்திலேயே பணியாற்ற வேண்டும் என்ற கொள்கையோடு ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனையில் பணியாற்றும் அந்த வைத்தியரின் பணி மேலும் சிறக்க வேண்டும். இப்படியாக ஒவ்வொருவரும் தமது பணி மூலம் மக்கள் நலன் பெறவேண்டும் என்ற எண்ண மேலீட்டோடு பலம் பெற்றிருக்க வேண்டும். பணி செய்ய முன்வர வேண்டும். தற்போது பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்து வெளியேறுகின்ற மாணவர்கள் கல்வி மற்றும் வைத்திய துறை சார்ந்து பணி நிலைகளில் உள் வாங்கப்படுகின்ற போது அந்தந்த மாவட்டங்களிலே தமது பணியினை மேற்கொள்ள முன்வர வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும்.

ஆக, வெளிநாட்டு மோகத்தினை விடுத்து நம் நாட்டிலே பணியாற்றி நற்பெயரை ஈட்ட வேண்டும் என்ற நோக்கத்தை அரச சேவையாளர்கள் அனைவரும் நிறைவாகக் கொண்டிருக்க வேண்டும். பணிப்புறக்கணிப்புகளையும், சேவைப்புறக்கணிப்புகளையும் தேவையற்றவிதமாக மேற்கொண்டு பணி நிலைகளில் இருந்து இடைவிலகி இருந்துவிடக்கூடாது. சேவை மனப்பாங்கோடு தமது கடமைகளை மக்கள் நலன் சாரந்து செய்திருக்க வேண்டும்.

"வெளிநாட்டு மோகத்தினை விடுத்து நம் நாட்டிலே பணியாற்றி நற்பெயரை ஈட்ட வேண்டும்; என்ற நோக்கத்தை அரச சேவையாளர்கள் அனைவரும் நிறைவாகக் கொண்டிருக்க வேண்டும். பணிப்புறக்கணிப்புக்களையும், சேவைப்புறக்கணிப்புக்களையும் தேவையற்றவிதமாக மேற்கொண்டு பணி நிலைகளில் இருந்து இடைவிலகி இருந்துவிடக்கூடாது. சேவை மனப்பாங்கோடு தமது கடமைகளை மக்கள் நலன் சாரந்து செய்திருக்க வேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பிறந்தகிழமை கொண்டு குணநலன்களை அறியலாம்




பிறந்த கிழமைகளுக்கு ஏற்ப ஒவ்வொருவரின் குணமும் மாறுபடும். எந்தக் கிழமையில் பிறந்தவர்கள், எப்படிப்பட்ட குணநலன்களைப் பெற்றிருப்பார்கள் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

## ஞாயிற்றுக்கிழமை

ஞாயிற்றுக்கிழமையில்பிறந்தவர்கள், எதிர்காலவரலாற்றில்இடம்பெறவேண்டும் என்று நினைப்பவர்கள். மற்றவர்களை சீர்தூக்கி எடைபோட்டுப் பார்ப்பதில்ஆற்றல்பெற்றவர்கள். ஒருசிலர் அவசரக்காரர்களாகவும், காரியங்களை அரைகுறையாகச் செய்பவர்களாகவும் விளங்குவர்.
உல்லாசப் பயணத்தில் பிரியம் கொண்டவர்கள். பத்திரிகை, திரைப்படம்,
அரசியல் போன்றவற்றில் ஈடுபாடு கொண்டிருப்பார்கள்.
இந்தக் கிழமையில் பிறந்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை தோறும் விரதமிருந்து, சூரியனை வழிபட்டால் நல்ல வாழ்க்கை அமையும்.

## திங்கட்கிழமை

திங்கட்கிழமையில் பிறந்தவர்கள், அறிவுப்பூர்வமாகச்சிந்தித்து செயல்படுபவர். பிறர் செய்ய முடியாத காரியங்களை, அலட்டிக்கொள்ளாமல் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டிருப்பார்கள். தீர யோசித்த பின்னரே செயல்களில் ஈடுபடுவர். நீதி, நேர்மையைக்கடைப்பிடிப்பவர்களாக இருப்பர். அதிகமாக செலவு செய்ய அஞ்சுவார்கள். கலைத்துறையில் ஈடுபாடு அதிகமாகவே இருக்கும். நேர்வழியில் சம்பாதிக்கும் எண்ணம் கொண்டவர். இந்தக் கிழமையில் பிறந்தவர்கள் திங்கள் தோறும் அம்பிகையைவழிபடுவதோடு, பவுர்ணமி விரதமிருந்தால் அதிக பலன்களைப் பெறலாம்.



## செவ்வாய்க்கிழமை

செவ்வாய்க்கிழமையில் பிறந்தவர்கள் வீரமும், விவேகமும் மிக்கவர்களாக இருப்பர். எந்த வேலையையும் அரைகுறையுடன் விட்டுவிட, இவர்கள் மனம் சம்மதிக்காது. சேமிக்கும் இயல்பு இல்லாதவர்கள். கோபம் காரணமாக அல்லல்படுவார்கள். நமக்கும் ஒரு காலம் வரும் என்ற நம்பிக்கையும், உறுதியும் இவர்களுக்கு உண்டு. எதையும் எதிர்த்துப் போராடும் வலிமைபெற்றவர்கள். யாரிடம் யோசனைகளைக் கேட்டாலும் தான் எடுத்த முடிவையே கடைசியில் செயல்படுத்துவர். இந்தக் கிழமையில் பிறந்தவர்கள் சஷ்டி விரதமிருந்து சண்முகனை வழிபட்டால் சகலபாக்கியங்களையும் பெற முடியும்.

(தொடரும்)

## வரலாற்றில் இன்றைய தினம் 04.08.2017

1492 - கிறிஸ்தோபர் கொலம்பஸ் தனது நாடுகாண் பயணமாக ஸ்பெய்னிலிருந்து கப்பலில் புறப்பட்டார்.
1914 - முதலாம்உலகப்போரில்பிரான்ஸுக்குஎதிராக ஜேர்மனி போரை அறிவித்தது.
1960 - பிரான்சிடமிருந்து நைஜர் சுதந்திரம் பெற்றது.
1975 - போயிங் 707 வானூர்தி மொரோக்கோப் பகுதியில் மலைச் சிகரத்தில் மோதி 188 பேர் உயிரிழந்தனர்.
1995 - வடமராட்சி கிழக்கில் கடற்படை தாக்குதல். 6 மீனவரைக் காணவில்லை என அறிவிப்பு.
1997 - அல்ஜீரியாவில் 116 கிராமவாசிகள் படுகொலை செய்யப்பட்டனர்.
2002 - புலிகளின் அரசியற் பொறுப்பாளர்களடன் கூட்டமைப்பினர் இணைந்து செயற்படுவர் எனச் சந்திப்பில் தீர்மானம்.
2006 - மூதூர் இறங்கு துறையில் துருப்புக்களைத் தரையிறக்கி புலிகளுடன் கடும் சமர். நகரை மீளக் கைப்பற்ற முப்படையும் தீவிர முயற்சி.
2006 - தோப்பூரில் பாடசாலைகள் மீது ஷெல்கள் விழ்ந்து 22 பேர் உயிரிழப்பு.
2006 - மூதூரில் 7 ஆயிரம் பொது மக்கள் பொது இடங்களில் தஞ்சம்.
2014 - சீனாவின் யுனானில் நிலநடுக்கத்தில் 617 பேர் உயிரிழந்ததுடன் 24 ஆயிரம் பேர் காயமடைந்தனர்.
2016 - மாணவர்களின் கற்றலுக்கு இடையூறாக ஒலி பெருக்கி இயங்கினால் சட்டம் பாயும் என நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு.


சீனாவின் யுனானில் ஏற்பட்ட நிலநடுக்கம்

## நாளை

**04.08.2017**

வெள்ளிக்கிழமை

**ஆடி - 19**

திதி: துவாதசி மு.இ. 08.04 வரை
நட்சத்திரம்: மூலம் மு.இ. 10.50 வரை
சுபநேரம்: 06.04–07.34 வரை
ராகுகாலம்: 10.34–12.04 வரை

வரலக்ஷ்மி விரதம்

## பத்தி எழுத்து

### இலங்கை, இந்தியாவின் இரண்டாவது தாய்மண்

இந்திய கிரிக்கெட் அணியின் கடந்த சில வெற்றிகளைப் பார்க்கின்றபோது இலங்கையின் ஆடுகளங்களைப் பற்றிய புரிதல்கள் அந்த அணிக்கு மிகையாக ஏற்பட்டுள்ளதோ என்றும், இந்திய அணியின் இரண்டாவது. தாயகமாக இலங்கை மாறிவிட்டதோ என்றும் எண்ணத்தோன்றுகிறது.

இந்திய அணி 2015ஆம் ஆண்டு இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடி யது. மூன்று ஆட்டங்களைக்கொண்டதாக இந்தத் தொடர் அமைந்தது. இலங்கை அணியின் ஜாம்பவான் சங்காவின் இறுதி டெஸ்ட் தொடராகவும் அது அமைந்தது. காலியில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இலங்கை வெற்றி பெற்றது. ஆனால் அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிபெற்று இலங்கையில் வைத்து இலங்கையை வீழ்த்தி கிண்ணம் வென்றது இந்தியா. சங்காவை வெற்றியுடன் வழியனுப்பதிராணியற்றவர்களாக ஏனைய வீரர்கள் இருந்தனர். சுமார் 20 வருடங்களுக்குப் பின்னர் இலங்கையில் வைத்து இந்தத் தொடரை இந்தியா கைப்பற்றியது.

இதன்பின்னர் இந்திய அணி தற்போது இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. முதலாவது ஆட்டம் காலியில் நடைபெற்றது. காலி இலங்கை அணியின் கோட்டை என்று வர்ணிக்கப்படும் அளவுக்கு அங்கு அந்த அணி ஆதிக்கம் செலுத்திய வரலாறுகள் உள்ளன. ஆனால் அண்மையில் முடிவடைந்த டெஸ்ட் ஆட்டத்தை இலங்கை அணியால் வெற்றிபெற முடியவில்லை. சுமார் 300இற்கும் அதிகமான ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றிபெற்றது. காலியில் ஓர் அணி 300 ஓட்டங்களைப் பெற்றுவிட்டதென்றால் அந்த அணிக்கு ஆபத்தில்லை என்றும் கருதலாம். நிலைமை இப்படியிருக்க சுமார் 300 ஓட்டங்களால் வென்ற இந்தியாவின் வெற்றியை என்னவென்று சொல்வது! இந்தியாவின் வெற்றி ஒருபுறம் இருக்க 300 ஓட்டங்களால் தோல்வியடைந்த இலங்கையின் தோல்வியை என்னவென்று சொல்வது!

இலங்கை அணி சங்கா, மகேல போன்ற ஜாம்பவான்களை இழந்துள்ள ஓர் அணி என்ற காரணத்தை தற்போது சொல்ல முடியாது. ஏனெனில் இந்திய அணியின் நிலையும் தற்போது அவ்வாறே உள்ளது. அங்குள்ள அத்தனை பேரும் இளம் வீரர்கள். மட்டுமல்லாமல் கடந்த வருடம் ஆஸ்திரேலிய அணி இலங்கைக்குச்சுற்றுப் பயணம் செய்தபோது ஆஸ்திரேலியாவை சுருட்டித் தள்ளியிருந்தது இலங்கை. அதுவும் தற்போதுள்ள அதே வீரர்களை வைத்துத்தான் இதைச் செய்திருந்தது. எனில் இந்தியாவுடன் மட்டும் சாதிக்கத் தடுமாறுவது ஏன்?

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் கொழும்பில் இன்று ஆரம்பமாகிறது. இன்றைய ஆட்டத்தில் இலங்கை கட்டாயம் வெற்றிபெறவேண்டும். அப்படி வெற்றிபெற்றால் மட்டுமே அடுத்த ஆட்டம்வரை இலங்கை அணியால் தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | | | | 7 | | |
| 5 | | | 4 | 6 | | 1 | | |
| | | | | 2 | | | 4 | |
| | 4 | | 3 | | | | 9 | 1 |
| 6 | | | | | | | | 8 |
| 2 | 9 | | | | 8 | | 7 | |
| | 1 | | | 9 | | | | |
| | | 4 | | 8 | 3 | | | 5 |
| | | 6 | | | | | 2 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 5 | 7 | 4 | 8 | 9 | 3 | 2 |
| 7 | 8 | 9 | 6 | 3 | 2 | 5 | 1 | 4 |
| 4 | 2 | 3 | 5 | 1 | 9 | 7 | 8 | 6 |
| 3 | 4 | 1 | 2 | 7 | 5 | 8 | 6 | 9 |
| 2 | 5 | 6 | 9 | 8 | 3 | 1 | 4 | 7 |
| 9 | 7 | 8 | 1 | 6 | 4 | 2 | 5 | 3 |
| 8 | 9 | 4 | 3 | 5 | 7 | 6 | 2 | 1 |
| 1 | 3 | 2 | 8 | 9 | 6 | 4 | 7 | 5 |
| 5 | 6 | 7 | 4 | 2 | 1 | 3 | 9 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



## பிற்போடப்படுகிறது வி.ஐ.பி. பாகம் –2

சவுந்தர்யா ரஜினிகாந்த் இயக்கத்தில் தனுஷ், அமலா பால், கஜோல் இணைந்து நடித்திருக்கும் 'வேலையில்லாப் பட்டதாரி2' படம் திரைக்கு வருவதற்கு மேலும் கால தாமதமாகலாம் என்று தெரியவருகிறது.

'வேலையில்லாப் பட்டதாரி' படத்தின் வெற்றியை தொடர்ந்து அதன் இரண்டாவது பாகம் தற்போது தயாராகி இருக்கிறது. இந்தப் படத்தை ரஜினியின் இரண்டாவது மகள் சவுந்தர்யா ரஜினிகாந்த் இயக்கி யிருக்கிறார். தனுஷ், அமலாபால், கஜோல் முன்னணி கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். படத்தின் பாடல்கள், முன்னோட்டக் காணொலிகள் என அனைத்துமே ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன. இந்தப்படம் கடந்த மாதம் 28ஆம் திகதி அதாவது தனுஷின் பிறந்தநாளன்று திரைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது. எனினும் சில காரணங்களால் இந்த மாதம் 11ஆம் திகதியே திரைக்குவரும் என்று பின்னர் அறிவிக்கப்பட்டது. தற்போது படம் திரைக்கு வரும் திகதி மேலும்பிற்போடப்படலாம்என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மருந்துகளை விட நோய்களை அதிகம் கண்டுபிடித்துக்கொண்டு இருக்கிறோம்

## டெக்னாலஜி....

சமையலறையில் வேலை
செய்துகொண்டிருந்த மனைவி,
உதவிக்குக் கணவனை அழைத்தார்....
பலமுறை அழைத்தும் பதில் இல்லை.
உள்ளே சென்று பார்த்தால்...,
படுக்கையில், அலுவலகக் கோப்புகள்,
மடிக்கணினி இரண்டும் மடியில் கிடக்க
அசந்து தூங்கிக் கொண்டிருந்தார்.
இடுப்பில் செருகியிருந்த தன்னுடைய அலைபேசியை
எடுத்துப் பார்த்தவாறே கணவனின் அருகில் சென்று..,
அவர் தலைமுடியில் விரல் விட்டு மென்மையாகப்
பற்றினார்.
அடுத்த நொடி,
பளார்
என்ற சத்தம்.
அறை விழுந்த கன்னத்தைப் பிடித்தபடி திருதிரு வென
விழித்த கணவனிடம் தன் அலைபேசியின்
வாட்ஸ் அப் மனைவி காட்டினார்.
கணவன் பெயருக்குக் கீழே,
"இறுதியாக ஒரு நிமிடத்துக்கு
முன்னர் பார்க்கப்பட்டது"
என்றிருந்தது.








**மேடம்:** மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்ய மூலதனம் அதிகம் தேவைப்படும். உடல்நலனில் அக்கறை தேவை.

**இடபம்:** பேச்சு, செயலில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

**மிதுனம்:** தாமதமான செயல் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்.

**கடகம்:** வெளி வட்டார தொடர்பால் பிரச்சினை ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர்.

**சிங்கம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். குடும்பத்தினருடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். தொழில், வியா பாரத்தில் தடை குறுக்கிடும். இலாபம் சுமார்.

**கன்னி:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் இலாபம் வரும்.

**துலாம்:** சிலரது அதிருப்திக்கு ஆளாக நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி குறுக்கிட்டாலும் இலாபம் குறையாது. உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**விருச்சிகம்:** மனதில் நல்லெண்ணம் அதிகரிக்கும். அலைக்கழிப்பு உருவாக்கிய வேலை ஆதாயம் தருவதாக மாறும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும்.

**தனுசு:** தகுதிக்கு மீறிய வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இடையூறை தாமதமின்றி சரி செய்வது நல்லது. அளவான பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** பேச்சில் வசீகரம் நிறைந்திருக்கும். உறவினர் மத்தியில் செல்வாக்கு அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழிக்க முழு முயற்சியுடன் பணியாற்றுவீர்கள்.

**கும்பம்:** திட்டமிட்ட பணிகள் எளிதில் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை படைப்பீர்கள். நண்பருக்குக் கடனாகக் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும்.

**மீனம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் முயற்சி தேவைப்படும். இலாபம் மிதமாக இருக்கும்.

உங்களை இந்த வேலைக்கு
செலக்ட் பண்ணிட்டோம்...
முதல் வருச சம்பளம் 6 லட்சம்.
அடுத்த வருசம் சம்பளம் 10 லட்சம்



அப்போ நான் ஒரேடியா அடுத்த வருசமே
வேலைக்கு சேர்ந்துக்கவா....

கண்டிப்பாக எல்லோரும் லவ்
பண்ணுங்க.. ஏன்னா...?



சந்தோசம் மட்டுமே
வாழ்க்கை இல்லை...

எத்தனை வருசம் எக்ஸ்பீரியன்ஸ்..?
15 வருசம் சார்....
எப்படி...?



பத்து வருசம் வேலை செஞ்சிருக்கேன்
தினமும் 4 மணி நேரம் ஓவர் டைம்
சேர்த்து 15 வருசம் சார்

செல்போன் இல்லை...
பொம்மைகள் இல்லை...




ஆனாலும் மகிழ்ச்சி
பொங்கிவழியும் முகங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எண்ணங்களே சாதனைகள் ஆகின்றன

தஞ்சைப் பெரிய கோயிலை இராஜ இராஜன் கட்டினான். தாஜ்மகாலை ஷாஜகான் கட்டினான் என்கிறார்கள். இது சரிதானா? திறமை வாய்ந்த சிற்பிகள் அல்லவா அந்த வேலைகளைச் செய்து கட்டி முடித்தார்கள். ஆனால் அவர்களின் பெயரோ எவருக்கும் தெரியாது. எண்ணங்கள் தான் சாதனைகள் ஆகின்றன. ஒரு பெரிய கோயிலை உருவாக்க வேண்டும் என்கிற எண்ணம் இராஜராஜனுடையது. அதற்கான திட்டம் இராஜ இராஜராஜனுடையது. அதைச் செயற்படுத்தும் முயற்சியும் அவனுடையதுதான். ஆனால் அதை நிறைவேற்றுவதற்குரிய வேலைகள் அனைத்தையும் அவனே செய்ய முடியாது. இப்போதும் கூட பெரிய பாலங்களைப் பொறியியல் நிபுணர்கள் கட்டியதாகவே சொல்கின்றனர். ஏன் அப்படிச் சொல்கிறார்கள். திட்டம் போட்டவர் அவர். வடிவம் கொடுத்தவர் அவர். ஆனால் பாலத்தைக் கட்டுகிற வேலையைச் செய்தவர்கள் கொத்தனார்களும் இதர வேலையாள்களும்தான். அதனால்தான் அந்தப் பாலத்தைக் குறிப்பிட்ட பொறியியல் நிபுணர் கட்டினார் என்று சொல்கிறோம். எல்லா விடயங்களும் அப்படியே. அசோக மன்னன் நிழல் தரும் மரங்களை சாலைகளில் வைத்துப் பயிராக்கினார். தர்ம மருத்துவமனைகளைக் கட்டினார் என்று சொல்லும் போது அவரே ஒவ்வொரு ஊரிலும் சென்று மரங்களை நட்டிருக்க வேண்டுமென்றோ, மருத்துவமனைகளைக் கட்டியிருக்க வேண்டுமென்றோ நாம் எதிர்பார்க்க முடியாது. ஆணை மன்னனுடையது. நிர்வாக எந்திரங்கள்தான் அந்த வேலைகளைச் செய்து முடிக்கின்றன. ஆகவே சாதனை என்பது எண்ணங்களை ஆதாரமாகக் கொண்டு தான் அமைய முடியும். எண்ணுகின்றவர் செயற்படுத்த முனையும் போது சாதனைகள் வடிவம் பெறுகின்றன.

## எல்லாம் நன்மைக்கே

தெரு ஓரத்தில் ஓர் ஆலமரம் நின்றது. அது தன் கிளைகளைப் பரப்பி நல்ல நிழலைத் தந்து கொண்டிருந்தது. அந்த மரத்தில் பல பறவைகள் கூடு கட்டி வாழ்ந்தன. வழிப் போக்கர்கள் அதன் நிழலில் இளைப்பாறிச் செல்வர்.

ஒரு நாள் வழிப்போக்கன் ஒருவன் அவ்வழியே வந்தான். ஆல மர நிழலில் இளைப்பாறினான். ஆலய மரத்தின் பழங்களைப் பார்த்தான். அவை மிகவும் சிறியனவாக இருந்தன. "ஆலமரமோ இவ்வளவு பெரிதாக இருக்கிறதே! ஆனால் அதன் பழம் மட்டும் ஏன் இவ்வளவு சிறியதாக உள்ளது. பெரிய மரத்தைப் படைத்த இறைவனுக்கு அதன் பழத்தையும் பெரிதாய் படைக்கத் தெரியாமல் போயிற்றே" என்று யோசித்தான்.

சிறிது வேளையில் அவன்தான் கொண்டு வந்த உணவுப் பொட்டலத்தை பிரித்து உண்ண ஆரம்பித்தான். அந்த வேளையில் பறவைகளும் ஆலமரத்தில் இருந்து கலகலப்பாக குரல் எழுப்புவதும் ஆலம் பழங்களை உண்ணுவதுமாக ஆரவாரம் செய்து கொண்டிருந்தன. அப்போது ஒரு சில ஆலம்பழங்கள் பறவைகள் அலகுகளில் இருந்து தவறி அவன் பக்கத்தில் விழுந்தன. அவற்றில் ஒன்றைத் தன் இடது கையால் எடுத்தவன். என்ன இது, இந்தப் பழங்கள் சற்றுப் பெரிதாகவும் நான் உண்ணக் கூடியதாகவும் இருந்திருந்தால் உணவை உண்டு முடித்து இவற்றையும் ஒரு பிடி பிடித்திருப்பேன் என எண்ணிக் கவலையடைந்தான்.



உணவு உண்டு பசி போக்கியவன் சற்று அயர்ந்து அங்கேயே தூங்கிப் போனான். அப்போது ஆலம் பழம் ஒன்று தனது நெற்றியில் விழுந்ததை உணர்ந்தான். அந்தப் பழத்தைக் கையில் எடுத்தவன் சிந்திகலானன். "சற்று முன் தான் இந்தப் பழங்கள் பெரிதாகப் படைக்கப்பட்டிருக்கக் கூடாதா என இறைவனை மனம் நொந்தேன். இந்தப் பழம் பூசணிக்காய் போலிருந்து அது இப்போது என் தலையில் விழுந்திருக்குமானால் என் கதி என்னவாகியிருக்கும். கடவுள் தான் என்னைக் காப்பாற்றினார். இயற்கையின் படைப்புகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அர்த்தம் உண்டு. எல்லாம் நன்மைக்கே" என்றபடி எழுந்து நடந்தான். அந்த வழிப் போக்கன்

## கிரிக்கெட்



கனவான்களின் விளையாட்டு எனச் சிறப்பிக்கப்படும் கிரிக்கெட் போட்டியின் முதலாவது உலகக் கிண்ணத் தொடர் அதன் தாயகமான இங்கிலாந்தில் 1975ஆம் ஆண்டில் நடைபெற்றது. 1975ஆம் ஆண்டு முதன் முதலாக நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி கிண்ணம் வென்றது.


4ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் உலகக் கிண்ணத் தொடரை ஐ.சி.சி. எனப்படும் பன்னாட்டு கிரிகெட் சபை நடத்தி வருகின்றது.

1996ஆம் ஆண்டு பெப்ரவரி/ மார்ச் மாத காலப் பகுதியில் 6ஆவது உலகக் கிண்ணத் தொடர் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளால் கூட்டாக நடத்தப்பட்டன. பாக்கிஸ்தான் லாகூர் நகரில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் இலங்கை மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் மோதின. இதில் இலங்கை அணி வெற்றியீட்டி உலகக் கிண்ணத்தை முதன் முறையாக கைப்பற்றியது.

இவ் உலகக் கிண்ணத் தொடரில் இங்கை அணி தான் பங்கு பற்றிய அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்றதும் சாதனையாகக் கணிக்கப்படுகின்றது. 6ஆவது உலகக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தின் சிறந்த வீரராக இலங்கை அணியைச் சேர்ந்த அரவிந்த டி.சில்வா தெரிவு செய்யப்பட்டார்.

தொடரின் சிறந்த நாயகனாக இலங்கை வீரரான சனத் ஜயசூரியா தெரிவு செய்யப் பட்டார்.

## வழிகாட்டுவோம்



## எனது நகரம்

திருகோணமலை



- நான் திருகோணமலையில் வாழ்கிறேன்.
- திருகோணமலை ஒரு நகரமாகும்.
- இது இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் தலை நகரமாகும்.
- இங்கு தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஆகிய மூவின மக்களும் வாழ்கிறார்கள்.
- இங்கு மக்கள் மிக நெருக்கமான குடியிருப்புகளில் வாழ்கிறார்கள்.
- இங்கு இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ளது.
- இந்தத் துறைமுகத்துக்கு பல நாட்டுக் கப்பல்களும் வந்து போகும்.
- இங்கு கடற்படைத்தளமும், வானூர்தித் தளமும் அமைந்துள்ளது.
- திருகோணமலையில் பாடல் பெற்ற திருத்தலம் அமைந்துள்ளது.
- திருக்கோணேஸ்வரம் இங்குதான் உள்ளது.
- திருஞான சம்மந்தரும், சுந்தர மூர்த்தி நாயனாரும் இத்தலம் பற்றி தேவாரப் பாடல்களைப் பாடியுள்ளனர்.
- திருக்கோணேஸ்வரம் கோவிலையண்டி இராவணன் வெட்டு உள்ளது.
- பாவ நாச தீர்த்தமும் அருகேயுள்ளது.
- போர்த்துக்கீசரால் கட்டப்பட்ட கோட்டை இங்குள்ளது.
- அதனை ஆங்கிலேயர் திருத்தியமைத்தார்கள்.
- கன்னியா வெந்நீர் ஊற்று நகரத்தை அண்டி அமைவு பெற்றுள்ளது.

## நினைவில் கொள்வோம்

- முட்டைகளை நீரில் போட்டு சோதித்துப் பார்த்தால் நல்ல முட்டைகள் நீரில் அமிழும். பழுதடைந்த முட்டைகள் நீரின் மேல் மிதக்கும்.
- வெண்டிக்காயின் நுனியை விரலால் உடைக்கும் போது இலகுவாக உடைந்தால் அது சமையலுக்கு உகந்தது.
- தரமான தேயிலையை வெந்நீரில் இட்டால் நீர் இளமஞ்சள் நிறமாக மாறும். நீரின் மேற்பரப்பில் துரிதமாக கபிலநிறம் வந்தால் அது செயற்கையாக நிறமூட்டப்பட்ட தேயிலையாகும்.
- கண்கள் பிரகாசமாகவும் பூக்கள் நல்ல சிவப்பாகவும் இருந்தால் நல்ல மீனின் பண்பாகும்.
- பழுதடைந்த மீனின் வால் சோர்ந்து வளையும். அதிகளவில் ஈக்கள் மொய்க்கும். பூ நிறம் மாறும். தகாத மணம் வீசும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் விதிமீறினால் நடவடிக்கை எடுக்கப்படும்

## வியாபாரிகளுக்கு ஆணையாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 3

நல்லூர் ஆலய சுற்றாடலில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனைக்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்டாலும் சிலர் தடையை மீறியும் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் யாழ்ப்பாணமாநகர ஆணையாளர் பொ.வாகீசன்.

தடைஉத்தரவைமீறி வியாபாரநடவடிக்கையில்ஈடுபடும்வியாபாரநிலையங்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். குறிப்பாக சில வியாபார நிலையங்களில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக்பொருள்கள்விற்கப்பட்டுவருகின்றன. கச்சான் கடைகளில் கச்சான்கள் யாவும் கடதாசிப் பைகளிலேபோட்டு வழங்க வேண்டும். பொலித்தீன் பைகளில் போட்டு வழங்குவதைக் கச்சான் வியாபாரிகள் நிறுத்த வேண்டும்.

ஆலய சூழலில் உள்ள வியாபார நிலையங்களில் அர்ச்சனை பொருள்கள் யாவும் பனம் ஓலையால் தயாரிக்கப்பட்டதட்டுக்களிலேயேவைத்துவழங்கப்பட்டும் வருகின்றன.

இதை பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் தடை உத்தரவை முழுமையாகக் கடைப்பிடிக்கும் முகமாக ஆலயச் சூழலில் உள்ள வியாபார நிலையங்களைக் கண்காணிக்கும் நடவடிக்கைகள் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

(4-17)

### வேலையாள் தேவை

தச்சுவேலை, வெல்டிங்வேலை, வானிஸ் வேலைகளில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
(வேலை நிரந்தரமானது)
076 821 9415, 076 821 9414 – யாழ்ப்பாணம்

### தவறிவிட்டது

கோணேஸ்வரன் மோகனா, தேசிய அட்டை இல.806712094V கந்தையா நாகேஸ்வரி, 487872687V இத்துடன் சாரதி அனுமதிப்பத்திரம் மோட்டார் வாகன வரி அனுமதிப்பத்திரம் ஆகியன யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் ராஜவீதி சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. தொடர்பு.0777906035

### யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை

01. மேசன் சம்பளம் - ரூ 1500/=
02. உதவியாளர் - ரூ 1200/=

தேவைப்படின் உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்பு.0763101597

### தேவை

01. கணக்கியல் அனுபவம் உள்ளவர்கள்.
02. கட்டட பொருள்களை சந்தைப்படுத்தல் அனுபவம் உள்ளவர்கள்

வெளி மாவட்டத்தவர்களும் விரும்பத்தக்கது.
தங்குமிட வசதி உண்டு.
தொடர்பு - சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்
இல.55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### உடனடி வேலைவாய்ப்பு

* பக்கோ இயக்குனர்
* வான் சாரதி
* ரக்ரர் சாரதி

குறித்த தொழிலில் ஐந்து வருட அனுபவமுள்ளவர்கள் தகுதி சான்றிதழ்களுடன் உடனடியாக நேரில் வரவும்.

மனிதவள முகாமையாளர்
45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். 021 222 6239

Galaxy Star

வெற்றி வாரம் 182 திகதி 2017.08.02

07 04 23 30 58
14 19 40 41

அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2, 637, 340/-

2017.08.06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுகளுக்கு. வெற்றிபெற்ற சீட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

#### வரலட்சுமி காப்பு

நாளை 04.08.2017 மாலை 2.30 மணிக்கு இடம்பெறும் விசேட அபிஷேகம் பூசைகளைத் தொடர்ந்து வரலட்சுமிகாப்பு வழங்கப்படும். வரலட்சுமி காப்புபெற விரும்பும் அடியவர்கள் ஆலயத்தில் முற்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்யவும்.

ஆலய பரிபாலன சபை, கொக்குவில்.

### மரண அறிவித்தல்கள்

#### திருமதி பார்வதி கந்தசாமி




யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி கந்தசாமி நேற்று (02.08.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்சுப்பையா செட்டியார் கந்தசாமியின் (ஓய்வு பெற்ற ஆசிரியர், யாழ். பரியோவான் கல்லூரி) அன்பு மனைவியும் சன்னாசி செட்டியார் - மீனம்மாள் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பையா செட்டியார் சின்னத் தாய் தம்பதியரின் அன்பு மருமகளும் இந்துமதி, யமுனா, காலஞ்சென்ற நிஷாந்தினி ஆகியோரின் அன்புத்தாயாரும் சந்திகுரமாரின் அன்பு மாமியும் மதுஷ்ரிகாவின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2017) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

72/19லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

தகவல்: பிள்ளைகள், மருமகன்.
077 071 2105, 077 600 6506



#### நாகராஜா பொன்ராசா

தாவடியைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய நாகராஜா பொன்ராசா 30.07.2017 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராஜா சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் தனுஜா, கம்ஜா, விதுர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவஞானபூபதி, விமலாதேவி, செல்வராணி, ஆனந்தராசா, சிவராசா ஆகியோரின் சகோதரனும் லோகதாசன், கமலாதேவி, விமலா தேவி, குகதாசன், ஜீவதாசன், சுபத்திராதேவி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் மருமகனும் அமுதனின் மாமனும் வாகினின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2017) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கனடா
T.P. No.0016 473 381 241
செ.மகாதேவன், (சின்னவர் சங்கானை)
076 832 8607

DLB சேலக்ஷபதி CAR PLUS

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 17
சீட்டிழுப்பு திகதி 2017.08.02

வெற்றி இலக்கங்கள்
36 37 53 V
20 25 35
1 17
5,562,380/=

தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2911 திகதி 02.08.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
15 41 43 47 Z
போனஸ் இல.
69
சனிக்கிழமை ஜக்பொட்
34, 783, 340/-

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
16 54 60 71

பச்சை நிற டிக்கட்டுக்கள் 2017.08.05 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk




### புங்குடுதீவில்.... இயேசுவின் மனதுருக்கப் பெருவிழா

வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத். 11:28)

இடம் : அம்பலவாணர் அரங்கு புங்குடுதீவு
நாள் : 4,5,6 . ஆகஸ்ட் . 2017 (வெள்ளி,சனி,ஞாயிறு)
நேரம் : மாலை 5.00 தொடக்கம் இரவு 9.00 மணிவரை

செய்தியாளர்
சகோ.த.துரைராஜா-மனதுருக்கம்-இலங்கை
சகோ.யோசப் ரகு - வவுனியா

உங்கள் வாழ்க்கையில் சந்தோஷம் சுகம் சமாதானம் தரவே
இயேசுக்கிறிஸ்து இந்த பூலோகத்திற்கு வந்தார். அவர் மீண்டும் வரப்போகிறார்.
நாங்கள் அவரோடு போக வேண்டுமானால் அவர் கூறிய நல்வழியிலே நடப்போம்.
இந்த வாழ்வைப் பெற்றுக் கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

உங்களுக்காக விசேட பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.
இன்னிசை பாடல் ஆராதனையும் நடைபெறும்.

தொடர்புகளுக்கு :
077 870 3596,
077 217 1601

### 6 ஆம் மாத நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 25 . 12 . 1979 | 06 . 02 . 2017 |



#### குமாரசுவாமி விசாகன்

(கணினி பொறியியலாளர் – ரிசிஸ்ரம் கொம்பனி, மலேசியா)

தேடி நாம் தெளிய நின்றுன்
திருமுகம் முன் வராதோ?
மன இரணம் ஆறும் தானோ?
விசாகா...! உந்தன்
வரவுக்காய்க் காத்தோம்... இன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 1000 | 800 |
| நண்டு | 400 | 300 | 600 | 300 |
| கணவாய் | 500 | 800 | 800 | 800 |
| பாரை | 600 | 700 | 600 | 600 |
| சுறா | 500 | 700 | 1000 | 900 |
| சீலா | 400 | 200 | 500 | 500 |
| விளை. | 600 | 500 | 500 | 500 |
| முரல் | 400 | 500 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 600 | 500 |
| ஓரா | 400 | 400 | 500 | 400 |
| திரளி | 300 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | 300 |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 300 | 250 | 300 |
| திருக்கை | 350 | 250 | 400 | 300 |
| மதனம் | 250 | 200 | 300 | 350 |
| கொய் | 200 | 60 | 80 | 50 |
| பாலை | 250 | 250 | 500 | 300 |
| வாளை | 200 | – | 400 | 250 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 160 | 60 | 70 | 60 |
| கத்தரி | 120 | 100 | 120 | 100 | 120 |
| மரவள்ளி | 60 | 80 | 80 | 60 | 70 |
| பயிற்றை | 100 | 80 | 120 | 100 | 120 |
| பாகல் | 200 | 220 | 160 | 160 | 160 |
| க.கிழங்கு | 140 | 120 | 120 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 90 |
| சி.வெங்காயம் | 140 | 120 | 170 | 140 | 120 |
| பூசணி | 100 | 80 | 100 | 100 | 100 |
| தக்காளி | 150 | 120 | 160 | 150 | 120 |
| வாழைக்காய் | 80 | 90 | 80 | 70 | 60 |
| கீரை | 30 | 30 | 40 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 20 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 280 | 200 | 200 | 400 | 200 |
| புடோல் | 100 | 70 | 80 | 100 | 80 |
| கோவா | 120 | 130 | 150 | 140 | 120 |
| வெண்டி | 100 | 60 | 100 | 100 | 100 |
| போஞ்சி | 140 | 200 | 170 | 160 | 160 |
| லீக்ஸ் | 100 | 130 | 120 | 100 | 120 |
| தேங்காய் | 60 | 65 | 58 | 60 | 60 |
| உ.கிழங்கு | 100 | 120 | 100 | 110 | 100 |
| தேசிக்காய் | 60 | 80 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 220 | 220 | 180 | 220 |
| கரட் | 200 | 200 | 200 | 160 | 220 |
| முருங்கைக்காய் | 180 | 120 | 200 | 100 | 200 |

தில் ஈடுபட்ட எல்லோரையும் கேவலப்படுத்தும் விதத்தில் அமைந்திருக்கிறது என்று முன்னாள் போராளிகள் கண்டனம் தெரிவித்தனர்.

யாரோ சிலர் செய்யும் குற்றங்களுக்காக மக்களின் விடுதலைக்காகத் தமது சுகதுக்கங்களை மறந்து போராடியவர்களைக் கேவலப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று அவர்கள் கவலை தெரிவித்தனர்.

“மக்களுக்காகத்தான் நாங்கள் போராடினோம். அதற்காகத்தான் தடுப்பு முகாம்களில் மறுவாழ்வு என்ற பெயரில் சிறை வைக்கப்பட்டோம். அங்கிருந்து திரும்பி வந்தபோதும் இந்தச் சமூகம் எம்மில் பலரை வேண்டாதவர்களாகத்தான் நடத்தியது. அப்போதே நாம் உடைந்து போனோம். இப்போது நாங்கள் ஏதோ குற்றங்களைச் செய்வதற்குத் தயார் நிலையில் இருப்பவர்கள் போன்று எமது தலைவர்களே சொல்லும்போது மேலும் உடைந்து போகின்றோம். ஏன் உயிருடன் திரும்பி வந்தோம் என்றிருக்கிறது. தமிழ்த் தலைவர்களே இப்படிச் சொல்லும்போது படையினரும் பொலிஸாரும் எங்களை இப்போதும் குற்றவாளிகள் போன்றே நடத்துவதை எப்படிக் குறை கூற முடியும்” என்று ஆதங்கப்பட்டார் முன்னாள் போராளி ஒருவர்.

இதேவேளை, குடாநாட்டில் ஏற்பட்டுள்ள நிலமையை அடுத்து முப்படையினரையும் களமிறக்கும் பொலிஸ் மா அதிபரின் நடவடிக்கைக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா எதிர்ப்புத் தெரிவித்தி ருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-5)

## மனைவியும்...

தினமும் தமது விசாரணைகளை முன்னெடுத்தது. மு.ப. 10.20 மணியளவில் ஆணைக்குழு அலுவல வளாகத்துக்கு அமைச்சர் ரவி வந்தபோது அவரது ஆதரவாளர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களும் அணிதிரண்டிருந்தனர். வெற்றிக்கோசத்துடன் அவரை உள்ளே அனுப்பிவைத்தனர்.

130 மில்லியன் ரூபா பெறுமதியான வீட்டை வாடகைக்கு வழங்க முற்பட்டபோது அதை தாமாகவே முன்வந்து பேப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் தலைவர், ரவி கருணாநாயக்கவுக்கு வாங்கிக்கொடுத்தார் என்று ஈஸ்ட் வெஸ்ட் தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் அரச தலைவர் ஆணைக்குழு முன்னிலை யில் சாட்சியமளித்திருந்தார். இது தொடர்பில் முன்னாள் நிதி அமைச்சரும், அயலுறவுத்துறை அமைச்சருமான ரவியிடம் ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்தது.

'நான் இப்போது 9 மாதங்களாக வசிக்கும் வீட்டை அரசியல்வாதியொருவருக்கு வாடகைக்கு வழங்குவதற்கு வீட்டு உரிமையாளர் விரும்பவில்லை. எமது குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பைப் பேணிவரும் அர்ஜீன் அலோசியஸ் அவரது நிறுவனத்தின் ஊடாகப் பணத்தைச் செலுத்தியுள்ளார். இந்தக் கொடுக்கல் வாங்கலுடன் நான் எந்த விதத் திலும் தொடர்புபடவில்லை. எனது மனைவியும், மகளுமே வீட்டை வாடகைக்கு எடுத்தனர். இது பற்றி எனக்கு எதுவுமே தெரியாது' என்று அமைச்சர் ஆணைக்குழு முன்னிலையில் குறிப்பிட்டார். ரவி விசாரணை முடித்து மாலை 3.30 மணிக்கு வெளியே வந்தார்.

'அச்சம் காரணமாகவே ஆணைக்குழு முன்பாகத் தோன்றவில்லை என்று எனக்கு எதிராகப் பரப்புரை முன்னெடுக் கப்பட்டது. அமைச்சரவைக் கூட்டம் உள்ளிட்ட முக்கிய விடயங்களாலேயே என்னால் அழைக்கப்பட்டிருந்த தினத்தில் பிரசன்னமாக முடியாமல் இருந்தது. சட்டமா அதிபர் திணைக்களத்திலுள்ள சில அதிகாரிகள், உயர் பதவியைப் பாதுகாத்துக் கொள்வதற்காக என்னைக் குறிவைத்துச் செயற்படுகின்றனர். தனிப்பட்ட வாழ்க்கைக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் அவர்கள் செயற்படுகின்றனர்' என்று ரவி கருணாநாயக்கா பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

பிணைமுறியுடன் தொடர்புடைய சர்சைக்குரிய பேப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின், அர்ஜீன் அலோசியசினது அலைபேசி தகவல்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் ஆராயப்பட்டு வருகின்றது. அவரது அலைபேசியில் இருந்து 8 ஆயிரத்து 600 பக்க ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ளது. முன்னாள் நிதி அமைச்சர் ரவி மற்றும் தலைமை அமைச்சர் ரணில் ஆகியோருக்கு அனுப்பிய ஆவணங்களும் அதில் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைக்கு, பிணைமுறி தொடர்பான தகவல்களுக்காக பணம் வழங்கியமை தொடர்பான ஆவணங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (5)

## மகிந்தவினது...

வன்முறைகளுக்குக் காரணமாகவுள்ள ஆவா குழு முன்னாள் அரசின் காலத்திலேயே உருவாக்கப்பட்டது. அதன் பின்புலமாக இருந்து யார் இயக்கியது என்று நாட்டில் அனைவருக்கும் தெரியும். நாங்களும் கடந்த அரசில் அமைச்சர்களாக இருந்தவர்கள்தான். அன்று ஆவா குழுவுக்கு பணம் கொடுத்து இயக்கியவர்களே இன்றும் அதனை இயக்கி வருகின்றனர் - என்றார்.

“வடக்கில் அண்மைய காலமாக இடம்பெற்று வரும் சம்பவங்களின் பின்புலமாக இருந்த வரும் பல்வேறு சந்தேகநபர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் மூன்று பேரும், கோப்பாயில் 2 பேரும் நேற்று (நேற்றுமுன்தினம்) அடங்கலாக இதுவரை ஏழு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் நாள்களில் மேலும் 5 பேரை கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆவா குழுவில் தமிழர்களே அங்கம் வகிக்கின்றனர். இந்தக் குழுவின் முதன்மைச் சந்தேகநபராக விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவரே உள்ளார். தற்போது விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. விரைவில் அவர் உட்பட அனைவரும் கைதுசெய்யப்படுவர்”- என்றார் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவான் குணசேகர. (உ-சி)

## 45 பவுண்...

வீட்டிலேயே நேற்றைய தினம் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.“வீட்டு உரிமையாளர் யாழ்ப்பாண நகரில் கடை வைத்திருக்கின்றார். உரிமையாளரின் மனைவி ஆசிரியர். பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்றுள்ளனர். வீட்டில் யாரும் இருக்கவில்லை. பாடசாலை முடிந்து பிள்ளைகளும் ஆசிரியரான மனைவியும் வீடு திரும்பியுள்ளனர். வீட்டுக் கதவு உடைக்கப்பட்டுள்ளதை அவதானித்துள்ளனர். வீட்டுக்குள் சென்று பார்த்துள்ளனர். வீட்டிலுள்ள பொருள்கள் அலங்கோலமாக சிந்தப்பட்டிருந்ததைக் கண்டுள்ளனர். வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் 45 பவுண் தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளனர்' என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளது. (5-101)

## படைவிட்டோடிகள்...

நிலமைகளைக் கட்டுக்குள் கொண்டு வர முப்படைகளும் களமிறக்கப்படுவார்கள் என்று பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர இந்த வார ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருந்தார். அது தொடர்பில் மின் அஞ்சல் ஊடாகச் செய்தியாளர் ஒருவர் முதலமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த முதலமைச்சர் தெரிவித்ததாவது: முப்படையினரையும் களமிறக்கப் போவதாக பொலிஸ் மா அதிபர் கூறவில்லை. பொலிஸாருக்கு உதவியாக சிறப்பு அதிரடிப் படையினரையும், இராணுவத்தையும் வேண்டுமெனில் மக்கள் விருப்பப்பட்டால் களமிறக்கவிருப்பதாகக் கூறினார். அவர்கள் தொடர்புகொள்ள தொ லைபேசி இலக்கங்களையும் வழங்கினார். யார் வேண்டுமானாலும் குற்றச்செயல்கள் பற்றி முறைப்பாடு செய்யலாம் என்றார். வடக்கிலிருந்து இராணுவ வெளியேற்றத்தை நான் இப்பொழுதும் கோருகின்றேன். ஆனால் குற்றங்கள் நடைபெறும்பொழுது அவற்றைத்தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டியது சட்டம், ஒழுங்குக்கு பொறுப்பான அமைச்சரின் கடமையாகும்.

பொலிஸ் மா அதிபர் கலந்துகொண்ட கூட்டத்தில் நான் பேசும்போது, இராணுவத்தில் இருந்து ஓடிப்போனவர்கள் தெற்கிலே எவ்வாறு [illegible] குற்றங்களைப் புரிந்தார்களோ அதேபோ[illegible] பயிற்சி பெற்றவர்கள் வடக்கில [illegible] குற்றச்செயல்களில் [illegible] குற்றச்செயல்கள் எங்கு நடைபெற்றாலும் எமது எல்லா வளங்களையும் உள்ளேற்று அவற்றைத் தடுக்கவோ உரிய விதத்தில் நடவடிக்கை எடுக்கவோ வேண்டும் என்று சொன்னேன்.

இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தாலும், எது நடந்தாலும் அவர்களுடைய ஒத்துழைப்பைக் கோரக்கூடாது என்று அதற்கு அர்த்தமில்லை. இராணுவத்தை அவசரத்திற்கும் அழைக்கக் கூடாது, அவர்கள் களமிறக்கப்படுவதை எதிர்க்க வேண்டும் என்று கேட்பவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்குச் சாதகமானவர்களாகவே இருப்பர் என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தச் செய்தி இணைய ஊடகங்களில் பரவியதைத் தொடர்ந்து முதலமைச்சரின் கருத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. முதலமைச்சரின் கூற்று ஆயுதப் போராட்டத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களின் வன்முறைக்கு வித்திட்டது வடமாகாண சபை

## வெளுத்து வாங்குகிறார் தவராசா

யாழ்ப்பாணம், ஒக. 3

"45 மாதங்கள் ஆட்சி செய்துள்ள வடக்கு மாகாண சபை, முதலீடுகளை இங்கே வரவழைக்கும் செயற்பாட்டைச் செய்யவில்லை. வந்த முதலீடுகளை அது கைநழுவவிட்டது. இது முன்னாள் போராளிகள் மற்றும் இளைஞர்களின் விரக்திக்கும் அதனூடான வன்முறைக்கும் காரணம்"

இவ்வாறு வடக்கு மாகாணசபையின் எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா, கடும் குற்றச்சாட்டை ஆளும் கட்சி மீது சுமத்தியிருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள வன்முறைச் செயற்பாடுகள் தொடர்பில், எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

7 லட்சம் மக்கள் வாழும் யாழ்ப்பாணத்தில் ஒரு சில நபர்களின் வன்முறைச் செயற்பாட்டை வைத்துக் கொண்டு யாழ்ப்பாண மக்கள் வன்முறையை நோக்கிச் செல்கிறார்களெனத் தெற்கில் பரப்புரை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களில் 12 ஆயிரம் பேர் மறுவாழ்வு பெற்றிருந்தனர். அவர்களில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரின் செயற்பாட்டை வைத்துக் கொண்டு முன்னாள் போராளிகளுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் அரச தரப்பிலிருந்து கருத்துக்கள் வெளிவந்துள்ளமை கண்டிக்கத்தக்க விடயமாகும்.

வன்முறைச் செயற்பாடுகள் இளைஞர்களின் விரக்தி நிலையின் விளைவேயொழிய, அவர்களில் ஒரு சிலர் முன்னாள் போராளிகள் என்பதற்காக எல்லா முன்னாள் போராளிகளையும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதோ, அவர்களைப் புண்படுத்தும் முகமாகக் கருத்துகளை வெளியிடுவதையோ அரசு தவிர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல், இது சும்மா இருப்பவர்களையும் தூண்டும் செயலாகவும் அமைந்து விடும்.

மூத்த பொலிஸ்மா அதிபர்கள் மூவர் மீது பெரியளவிலான குற்றங்கள் சுமத்தப்பட்டு, ஒருவர் சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார், இன்னொருவர் விளக்கமறியலிலிருந்து பிணையில் நிற்கின்றார், மற்றையவர் விளக்கமறியலில் உள்ளார். இவர்களின் செயற்பாட்டுக்காக முழு பொலிஸ் திணைக்களத்துக்கே அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்துகளை வெளியிட முடியுமா?

வடக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு இன்று மூன்று வருடங்கள் ஒன்பது மாதங்கள் ஆகின்றது. இந்த நாற்பத்தைந்து மாத காலத்துக்குள் வடக்கில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தக் கூடிய முதலீடுகளை வரவழைக்கக் கூடிய எதையும் வடக்கு மாகாண சபை செய்யவில்லை. மாறாக வரவிருந்த முதலீட்டு வாய்புகளைக் கூடத் தடுத்த அல்லது அசமந்தப் போக்கால் கைநழுவவிட்ட செயற்பாடுகளே நடந்தேறியுள்ளன. முன்னாள் போராளிகள் உள்ளடங்கலாக வடக்கு மாகாண இளைஞர்களின் விரக்திக்கு வட மாகாண சபையும் பொறுப்புக் கூறியே ஆக வேண்டும் -என்றுள்ளது. (வ-5)

---

### இணக்க...

துள்ள பொலிஸார் மீதான தாக்குதல்கள் தொடர்பில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து இயங்கக்கூடியவர்கள் மிதவாத அரசியலை வடக்கில் முன்னெடுத்துவருகின் றனர். அதே போல் அவர்களுக்கு நேர் எதிராகத் தமிழ் அடிப்படைவாதத்தைப் பின்பற்றக் கூடியவர்களும் வடக்கில் உள்ளனர். இரு தரப்பினருக்கும் இடையே பிரச்சினைகளைத் தூண்டிவிடவே வடக்கில் பல்வேறு அசம்பாவிதங்களும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. நல்லிணக்கத்தை ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகளையும், முயற்சிகளையும் அரசு எடுத்துவருகின்றது. அவற்றைத்தோற்கடிப்பதற்காகவும் வடக்கில் ஆவா குழு மூலம் முயற்சிக்கப் படுகிறது" என்றார் அமைச்சர். (உ-சி)

### இக்கட்டான...

டான சூழ்நிலையில் பதவியேற்கிறேன். நாம் சரியான பாதையில் சென்றிருந்தால் போர் முடிவடைந்து மூன்று வருடங்களில் மீண்டெழுந்திருக்கலாம். நாம் அதில் கவனம் செலுத்தத் தவறிவிட்டோம். ஆகவே நாம் இருக்கும் காலத்தில் அதில் கவனம் செலுத்தவேண்டும் என மாகாண சபை உறுப்பினர் ஆர்.ஜெயசேகரன் தெரிவித்தார்.

மாகாண சபையின் புதிய உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட அவர் நேற்றையதினம் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம் முன்னிலையில் பதவியேற்றார். அதன் பின்னர் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

தமிழரசுக் கட்சி சார்பில் என்னை மாகாண சபை உறுப்பினராக அமர்த்தியமைக்கு எமது கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவுக்கு எனது நன்றி. வடக்கு மாகாண சபையின் எஞ்சியிருக்கும் காலம் சொற்பமே. இந்தக் காலத்தில் எவ்வாறு செயற்படலாம் என்பது ஒரு ஆய்வுக்குரிய விடயம்.

மாகாண சபையின் கடந்தகால செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் பலதரப்பட்ட விமர்சனங்கள் இருக்கின்றன. இந்த இக்கட்டான நிலையில் நான் இந்தப் பதவியைப் பெற்றுள்ளேன். நான் வணிகர் கழகத்தில் எவ்வாறான திட்டங்களை நடைமுறைப் படுத்தி முன்னெடுத்து செயற்படுத்தினேன். அதே போன்ற திட்டங்களுடன் மாகாண சபையிலும் புதுவிதமான திட்டங்களை நடைமுறைப்படுத்துவேன். எனது கன்னி உரையில் அது தொடர்பில் தெரிவிக்கவுள்ளேன். அங்கு எனது ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படுமா என்று தெரியவில்லை. நாம் போரால் பாதிக்கப்பட்டுள்ளோம். எமது இனம் இன்னும் அதிலிருந்து மீண்டு எழமுடியாதுள்ளது. எமது மக்கள் இன்றும் முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். எமது நாட்டில் பல வளங்கள் இருக்கின்றன. வளங்களே இல்லாத பல நாடுகள் எம்மைவிட வளர்ந்து செல்கின்றன. ஆனால் நாம் வளங்களை வைத்துக்கொண்டு முன்னேற முடியாமல் இருக்கின்றோம்.

எமது ஆயுதப் போராட்டம் மௌனிக்கப் பட்ட பின்னர் எம்மிடம் இரண்டு விடயங்கள் இருக்கின்றன. ஒன்று பொருளாதார வளர்ச்சி, மற்றையது கல்வியறிவை வைத்து முன்னேறுதல். போர்க்காலத்தில் எமது பகுதிகளில் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. அப்போது நாம் இறக்கவில்லை. அதற்கு எதிராக எதிர்நீச்சல் போட்டு அதில் வெற்றி கண்டு நாம் மாற்றீடுகளை கண்டுபிடித்து வாழ்ந்தோம். தற்போதைய அரசிலும் பொருளாதார ரீதியில் முன்னேறுவதற்கான செயற்பாடுகளை செய்யத் தவறி விட்டோம். எம்மிடம் வரும் பன்னாட்டு பிரதிநிதிகள் என்ன அபிவிருத்தித் திட்டங்கள் இருக்கின்றன என்றே கேட்கின்றனர். நாம் எல்லோரும் புதிய அரசியல் திருத்தத்தை எதிர்பார்த்துள்ளோம். அது கிடைக்காவிட்டால் உலகம் எம்மை பொறுப்பேற்க வேண்டும்- என்றார். (உ-8)

### பொறுமை...

கோபம் கொண் டவர்களாகச் செயற்படாது சாணக்கியத்துடன் நடந்துகொண்டு அரசியல் திருத்தத்தை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா. வடக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட ஆர்.ஜெயசேகரனின் பதவியேற்பு நிகழ்வில் நேற்று அவர் உரையாற்றினார். அவர் தெரிவித்ததாவது:

தென்னிலங்கையில் இப்போது சில பௌத்த குருமார்களும் அரசியலில் இருக்கும் சிலரும் தமிழர்களுக்கு ஓர் அரசியல் தீர்வு கிடைப்பதை பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் இனவாதம் பேசி வருகின்றனர். தங்களின் ஊழல்களை மறைப்பதற்கும் இந்த அரசினைக் கவிழ்க்க வேண்டும் என்ற துடிதுடிப்புடனும் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் உலக நாடுகளுடன் இணைந்தும் ஐ.நாவுடன் இணைந்தும் நாம் செயற்பட்டு வருகின்றோம். இந்த அரசுக்குப் பல அழுத்தங்களையும் நெருக்கடிகளையும் அவர்கள் கொடுக்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பம் முன்பு ஒரு காலத்திலும் கிடைத்திருக்கவில்லை.

நாங்களாக எமக்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை முறித்துக்கொள்ளக்கூடாது. உலகின் தலையீடு எப்போதும் எமது பக்கமே இருக்கும் என நம்பியிருக்க முடியாது. இதைவிடப் பெரிய பிரச்சினைகளின் பக்கம் உலகின் கவனம் எப்போது வேண்டுமானாலும் திரும்பலாம். எனவே நாம் எமது பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வரை சாணக்கியமாகச் செயற்படவேண்டும். அவ்வாறு எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயத்தில் வெல்லாவிட்டால் நாம் உலகுடன் இணைந்து எவ்வாறு செயற்படுவோம் என்று எமக்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் தெரியும்- என்றார். (உ-8)

### வாள் வெட்டு...

உத்தரவிட்டார்.

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கோப்பாய் பொலிஸார் இருவர் மீது, மோட்டார் சைக்களில் வந்த கும்பல் வாள்களால் வெட்டியது சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் நேற்றுமுன்தினம் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸார் விசாரணைகளை அவர்களிடம் மேற்கொண்டிருந்தனர். பொலிஸாரைத் தாம் தாக்கவில்லை என்று வாக்குமூலம் வழங்கியிருந்தனர்.

மானிப்பாயில் கைது செய்யப்பட்ட ஜீவராஜைச் சந்திப்பதற்காக அவரது சட்டத்தரணி கே.சுகாஸ் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் இரவு சென்றார். ஆனால் அவருக்குப் பொறுப்பான பதில் அளிக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது. "கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் சட்டத்தரணி நான். அரை மணி நேரமாகப் பொலிஸ்நிலையத்தில் காத்திருந்தேன். பொறுப்பதிகாரி என்னைச் சந்திக்கவில்லை. சந்தேகநபரைச் சந்திக்க அவரது சட்டத்தரணிக்கே அனுமதி இல்லை என்றால் சாதாரண மக்களின் நிலையை எண்ணிப் பாருங்கள்" என்று சட்டத்தரணி கே.சுகாஸ் தெரிவித்தார்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளால் மன்றில் முன்வைக்கப்பட்ட பிணை விண்ணப்பத்தையும் நீதிவான் நிராகரித்தார். (உ-வ-5)

### வல்லை...

வல்லை மண்ணில் நடந்த மிகக் கொடூரமான படுகொலை நேற்றைய தினம் எந்தவொரு தரப்புக்களாலும் நினைவுகூரப்படவில்லை. இலங்கை இராணுவத்துக்கு இணையாக இந்திய இராணுவத்தினரால் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலையை, தமிழ்த் தேசியம் பேசுகின்ற எந்தவொரு தரப்பினரும், குறிப்பாக இவ்வாறான படுகொலைகள் தொடர்பில் நினைவேந்தல்களை நிகழ்த்துகின்ற மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கூட நினைவுகூராதமை தொடர்பாக மக்கள் விசனம் வெளியிட்டனர்.

வல்லை மண்ணின் மாகாண சபை உறுப்பினராக இருந்து கொண்டு அவர்கூட இந்தப் படுகொலை தொடர்பான நினைவேந்தலை நடத்தாமை கவலையளிப்பதாக வல்வெட்டித்துறை மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இந்திய இராணுவம் அமைதிப்படையாக, தமிழர் தாயகத்தில் காலடி எடுத்து வைத்த பின்னர் பல்வேறு படுகொலைகளை செய்தது. வல்வெட்டித்துறை சந்தைப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான தாக்குதலில் அடிவாங்கிய இந்திய இராணுவம், தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தியது.

1989ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி இந்தத் துர்பாக்கிய நிகழ்வு நடந்தது. இந்திய இராணுவம் ஆண், பெண், சிறுவர், முதியவர் வேறுபாடின்றி கொலைவெறியாட்டம் நடத்தியது. 63 பேர் சுட்டும், எரித்தும் அகோரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். 123 வீடுகள் சேதமாக்கப்பட்டன. 45 கடைகள் சூறையாடப்பட்டன. 176 வள்ளங்கள் எரித்துச் சாம்பராக்கப்பட்டன.

தமிழர் வரலாற்றில் துயர்பொதிந்த இந்த நினைவுநாளை எந்தவொரு தரப்பினரும் நேற்றைய தினம் கடைப்பிடிக்கவில்லை. வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழர் தாயகத்தில் நடந்த பல்வேறு இனப்படுகொலைகளை நினைவுகூரும் நினைவேந்தல்களை நேரடியாகச் செய்து வருபவர். அவர்கூட இந்த நினைவேந்தலை நடத்தாமை தொடர்பில் மக்கள் பலரும் விசனம் வெளியிட்டனர்.

இது தொடர்பில் எம்.கே.சிவாஜிலிங்கத்திடம் கேட்டபோது, "365 நாளுமே இனப்படுகொலை நடந்திருக்கின்றது" என்று பதிலளித்தார். (வ-5-26)

### புளொட்...

யாழ்ப்பாணம், ஒக. 3

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தம்மை ஓரங்கட்டினால் என்ன செய்வது என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ் என்பனக் கூடிப் பேசின. மூன்று கட்சிகளும் இணைந்து செயற்படுவது என்ற முடிவையும் அவை எடுத்துள்ளன.

வவுனியாவில் நேற்று மாலை 4.30 மணியிலிருந்து இரவு 7 மணி வரையில், மூன்று கட்சிகளும் கூடிக் கலந்துரையாடல் நடத்தின. மூன்று கட்சிகளினதும் வவுனியா மாவட்டப் பொறுப்பாளர்களே இந்தக் கூட்டத்தை ஒழுங்குபடுத்தியிருந்தனர். இதில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனும் கலந்து கொண்டிருந்தனர்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எங்களை ஒதுக்கினால் என்ன செய்வது என்பது தொடர்பில் 3 கட்சியினரும் ஆராய்ந்துள்ளனர். முக்கிய வட்டாரங்களை தமிழ் அரசுக் கட்சிதான் வைத்துக் கொண்டால் என்ன செய்வது ? பங்காளிக் கட்சிகளுக்கு குறைந்த வட்டாரங்களை ஒதுக்கினால் என்ன செய்வது ? மூன்று கட்சிகளையும் ஓரம் கட்டினால் என்ன செய்வது என்பது பற்றியெல்லாம் பேசப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட ஒருவர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தன்னிச்சையான செயற்பாடுகள் தொடர்பில் தமது கட்சி அதிகம் பேசியபோதும் ஏனைய இரண்டு கட்சிகளும் அமைதிகாத்தமை தொடர்பில் காட்டமான கருத்தை வெளியிட்டுள்ளார்.

மாவட்டரீதியில் மூன்று கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளும் இணைந்து செயற்படுவது எனவும், இவ்வாறான கூட்டங்களை வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் நடத்தி மூன்று கட்சிகளும் இணைந்து செயற்படுவதற்கு நேற்றுத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (வ-5-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோகனதாஸ், சீமா அணிகள் முன்னேற்றம் கண்டுள்ளன

யாழ்ப்பாணம், ஓக. 3
கைதடியின் கரப்பந்தாட்டத் தொடரில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம், மீசாலை சீமா விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகமும் மோதின. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:24, 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேறியது மோகனதாஸ் அணி.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மீசாலை சீமா விளையாட்டுக் கழகமும் கச்சாய் வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:23, 25:17 புள்ளிகளைப் பெற்று 2:0 நேர் செற்றில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னைறியது மீசாலை சீமா விளையாட்டுக் கழகம். (ம-108)


ஆவரங்கால் மத்தி வி.க.


புத்தூர் கலைமதி வி.க.

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 3

**திக்கம் மத்திய ச.ச.நி. கால்பந்தாட்டத் தொடர்**

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நக்கீரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய்சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலட்டி அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கைதடி தெற்கு ச.ச.நி. கரப்பந்தாட்டத் தொடர்**

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்படும் 'ஏ' பிரிவு அணியினருக்கான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கெருடாவில் விவேகானந்தா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் சென்றல் ஸ்ரார் அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# துடுப்பாட்டம்

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமராட்சிப் பகுதிக்குட்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தத்திட்டமிட்ட மென்பந்துத் துடுப்பாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறுதினங்களில் நடைபெறவுள்ளது. (ம-108)

# நெபோலியை வென்றது அத்லெட்ரிகோ மட்ரிட்



ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அத்லெட்ரிகோ மட்ரிட் வெற்றிபெற்றது.

ஆட்டத்தின் 9ஆவது நிமிடத்தில் அத்லெட்ரிகோ மட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் கிரீஸ்மன் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். அடுத்த மூன்றாவது நிமிடத்தில் பெர்னான்டோ அத்லெட்ரிகோ மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற ஆதிக்கம் செலுத்தியது அத்லெட்ரிகோ மட்ரிட். இரண்டாவது பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது அத்லெட்ரிகோ மட்ரிட். (ம)

# ஆவரங்கால் மத்தி. கலைமதி அணிகள் இறுதி ஆட்டத்தில் மோதத் தகுதியாயின

யாழ்ப்பாணம், ஓக. 3
அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் அமரர் திருக்குமரன், லஜிதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளது.

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், மல்லாகம் நீதிமன்ற பதில் நீதிபதி ந.தம்பிமுத்து, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் ம.மணிசேகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். மதிப்புறு விருந்தினர்களாக வலிவடக்கின் முன்னாள் உப தவிசாளர் ச.சஜீவன், பூநகரி மத்திய கல்லூரி ஆசிரியர் த.வாகீஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். யாழ். மாவட்ட கப்பந்தாட்டச் சங்கத்தின் உபசெயலாளர் சி.தயாளபாலன், அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர் சு.சுதன், முல்லைத்தீவு வித்தியானத்தக் கல்லூரி ஆசிரியர் ம.கோகிலதாஸ் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-23)

# விண்மீன் வி.கழகம் இறுதிக்குத் தகுதி

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் பலாலி விண்மீன் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துப் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது. விண்மீன் அணியின் வீரர் காண்டீபன் முதல் கோலைப் பதிவுசெய்தார். அந்த அணியின் நிசாந்தன் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் விண்மீன் அணி 3:0 என்று முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் விண்மீன் அணி வெற்றிபெற்றது. (ம-108)



இலங்கை எல்லே சம்மேளனத்தால் நடத்தப்பட்ட 'சி[illegible]மாகாணத்தைச் சேர்ந்த ஏழுபேர் சித்தியடைந்துள்ளனர். சபரகமுவா பல்கலைக் கழகத்தின் விளையாட்டு விஞ்ஞான மற்று[illegible]பியல் மாணவர்களான எஸ்.டுபின்சன் (சாவல்கட்டு, ஆனைக்கோட்டை), ரி.தயாபரன் (கொம்மந்தறை, வல்வெட்டித்துறை), எம்.எல்விஸ் (யாழ்ப்பாணம்), எஸ்.அனோயன் (பாசையூர்), எம்.கோபிகா (சுழிபுரம்), ரி.தர்ஷிகா (வவுனியா), ஏ.கிரிஷ்கா (வவுனியா) ஆகியோரே அவ்வாறு சித்தியடைந்தவர்களாவர். (ம-108-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அணியின் ஆட்டங்களைப் பார்ப்பதில்லை சலிப்புத் தட்டுகிறார் முன்னாள் தலைவர் ரணதுங்க



"இலங்கை கிரிக்கெட் அணியின் சமீபகால மோசமான செயலையடுத்து அந்த அணி விளையாடும் ஆட்டங்களைப் பார்ப்பதை நான் நிறுத்தி விட்டேன்" இவ்வாறு தெரிவித்தார் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க.

கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இலங்கை அணி தற்போது விளையாடும் ஆட்டங்களைப் பார்ப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. இதனால் இந்தியா - இலங்கைத் தொடரைப் பார்ப்பதற்கு பெரியளவில் ஆர்வம் ஏற்படவில்லை. இலங்கை இந்தியா தொடருக்குப் பதிலாக இங்கிலாந்து - தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரை விரும்பிப் பார்க்கிறேன். மேலும், இலங்கை அணி வீரர்களும், நிர்வாகிகளும் நாட்டுக்காக வெற்றியைத் தேடிக் கொடுப்போம் என நினைப்பதை விட வருவாய், வெளிநாட்டு பயணங்கள் என அதை நினைத்துத் தான் அதிகம் கவலைப்படுகிறார்கள்" என ரணதுங்க மேலும் தெரிவித்தார். (ம)

## ஒப்பந்தம் தராவிடில் களமிறங்கமாட்டோம்

### சிமித் உடும்புப்பிடி

ஊதிய ஒப்பந்தம் தொடர்பில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கும், வீரர்களுக்கும் இடையில் கருத்து மோதல்கள் நீடித்துவரும் நிலையில், "புதிய ஒப்பந்தம் தந்தால் மட்டுமே தொடர்களில் பங்கெடுப்போம்" என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீவ் சிமித்.




ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கும் அந்த நாட்டு கிரிக்கெட் சபைக்கும் இடையிலான ஒப்பந்தம், கடந்த மாதம் முதலாம் திகதியுடன் நிறைவடைந்துள்ள நிலையில், புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடும் வரையில், கிரிக்கெட் தொடர்களில் பங்குபற்றப் போவதில்லை என வீரர்கள் அறிவித்திருந்தனர். இந்த முடிவை மீண்டும் ஒருதடவை திட்டவட்டமாகத் தெரிவித்தார் சிமித். ஆஸ்திரேலிய ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்தக் கருத்தை முன்வைத்தார்.

"எமக்குரிய ஒப்பந்தங்கள் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் முடிவடைந்துவிட்ட போதிலும் அவை இன்னும் புதுப்பிக்கப்படாதமை ஏமாற்றமே. ஆஸ்திரேலியாவில் உள்ளூர் கிரிக்கெட்டை வளர்ப்பதற்காக் குறிப்பிட்ட தொகைப் பணத்தை எமது ஒப்பந்தங்களில் இருந்து எடுத்துக்கொள்வது என்று திட்டமிடப்பட்டது. நாம் குறிப்பிட்ட தொகையை விட்டுக்கொடுக்க முன்வந்த போதிலும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை எமது கருத்துக்களை ஏற்கத்தயாராக வில்லை. பெருந்தொகைப் பணத்தை எம்மிடம் இருந்து எடுத்துக் கொள்ள எத்தனிக்கிறது. எமது ஒப்பந்தத்தை வலியுறுத்தி ஆஸ்திரேலிய 'ஏ' அணியினர் தென்னாபிரிக்கத் தொடரைப் புறக்கணித்துள்ள நிலையில், தேசிய அணி, தொடரில் பங்குபற்றினால் சிறப்பாக இருக்காது. எனவே ஒப்பந்தம் தந்தால் மட்டுமே அடுத்த கட்டத்தைப் பற்றிச் சிந்திக்கலாம்" என சிமித் மேலும் தெரிவித்தார். (ம)

## உடற்தகுதியுடன் சந்திமல், கேரத்




இலங்கை அணியின் தலைவர் டினேஸ் சந்திமல், காலியில் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கையின் பொறுப்புத் தலைவராகச் செயற்பட்ட கேரத் இருவரும் இன்றைய டெஸ்ட் ஆட்டத்துக்காக பூரண உடல்தகுதியுடன் உள்ளனர்.

காலியில் கடந்த 26ஆம் திகதி முதலாவது டெஸ்ட் ஆட்டம் நடைபெற்றது. காய்ச்சல் காரணமாக சந்திமல் அணியில் இருந்து விலகியிருந்தார். இதனால் பொறுப்புத் தலைவராக கேரத் செயற்பட்டார். இந்த ஆட்டத்தின் மூன்றாம் நாளின் மூன்றாவது செசனில் களத்தடுப்பில் ஈடுபட்டபோது கேரத்தின் கையில் காயம் ஏற்பட்டது. இதனால் அவர் அந்த ஆட்டத்தின் பாதியில் இருந்து விலகினார். [illegible] துடுப்பெடுத்தாட கேரத் வரவில்லை. நான்கே நாள்களில் ஆட்டத்தில் வெற்றிபெற்றது இந்தியா.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஆட்டம் கொழும்பில் இன்று நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்துக்கான இலங்கை அணி வீரர்களின் உடல்தகுதிகாண் பரிசோதனை நேற்று நடைபெற்றது. எனவே சந்திமல், கேரத் தொடர்பில் உறுதியான முடிவுகள் நேற்றே தெரியவரும் என்றிருந்த நிலையில், இருவரும் உடற்தகுதிச் சோதனையில் சித்தியடைந்துள்ளனர்.

இதனையடுத்து இன்று நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இருவரும் களமிறங்குகின்றனர்.

அசல குணரட்ன காயம் காரணமாக விலகியுள்ளதால் சிரிமன்ன அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)



பெண்கள் உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணியை இறுதியாட்டம் வரை அழைத்துச் சென்ற இந்திய [illegible] யின் தலைவர் மிதாலிக்கு, தெலுங்கனா பூப்பந்தா[illegible] சங்கத்தின் சார்பாக பி.எம்.டப்ளியு. கார் ஒன்று பரிசாக வழங்கப்பட்டுள்ளது. (ம)



## களமிறங்குவார் லோகேஸ் ராகுல்

இலங்கை அணிக்கு எதிராக இன்று நடைபெறவுள்ள மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்தில் இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் லோகேஸ் ராகுல் களமிறங்குவார் என்று அந்த அணியின் தலைவர் கோக்லி தெரிவித்தார்.

முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக சுமார் 4 மாதங்களுக்கும் மேலான காலப்பகுதிவரை ராகுல் ஓய்வில் இருந்துள்ளார். தற்போது நடைபெற்றுவரும் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவர் இடம்பிடித்தாலும் காலியில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்துக்கான விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் ராகுலுக்கு இடம்கிடைக்கவில்லை. அந்த ஆட்டத்தில் அவருக்குக் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது. இந்த நிலையில் கொழும்பில் இன்று நடைபெறவுள்ள இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் ராகுல் விளையாடுவார் என்று இந்திய அணியின் தலைவர் கோக்லி தெரிவித்தார்.

"கே.எல்.ராகுல் தன்னை நிறுவிக் கொண்ட ஒரு தொடக்க வீரர். எவராவது ஒரு தொடக்க வீரர் ராகுலுக்கு வழிவிடத்தான் வேண்டும். காரணம் கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர் எமக்காகச் செய்த துடுப்பாட்டம்தான். மீண்டும் அவர் விளையாடத் தகுதியுடையவரே. எந்த ஒரு வீரரால் ஆட்டத்தில் கூடுதல் தாக்கம் செலுத்த முடியும் என்பதை ஒருவர் உட்கார்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது. அந்த நிலையில்தான் நான் இருக்கிறேன். ஆட்டத்தில் வித்தியாசத்தை நேரடியாக தாக்கம் பெறச் செய்யும் திறமை யாருக்கு உள்ளது? யார் இதுவரை சிறப்பாக ஆடினாரோ அவர்தான்" என கோக்லி மேலும் தெரிவித்தார்.

கோக்லியின் இந்தக் கருத்தின் மூலம் தமிழக வீரர் முகுந்த், விளையாடும் குழாமில் இருந்து வெளியேற்றப்படுவது உறுதியாகியுள்ளது. (ம)

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் வர்ண விருது

யாழ்ப்பாணம், ஓக. 3

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களைக் கௌரவிக்கும் வர்ண விருதுகள் நிகழ்ச்சி கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் என்.துஷ்யந்தன் கலந்து கொள்கிறார். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 3 மாதங்களில் 23 ஆட்டங்கள்; இந்திய அணியின் அட்டவணை

இந்திய அணி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் 23 ஆட்டங்களில் விளையாடவுள்ளது என்ற தகவல் தற்போது வந்துள்ளது.

வழக்கமாகவே இந்திய அணிக்கு அட்டவணைகள் தலைக்கு மேல் இருக்கும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அந்த அணி இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இருந்து தற்போது வரை தொடர்ச்சியாக தொடர்களில் பங்கெடுத்து வருகிறது. அவர்களுக்கு விடப்படும் சுமார் 60 நாள் விடுமுறையையும் ஐ.பி.எல். பற்றிப் பிடித்து விடுகிறது. இந்த நிலையில் இந்திய அணி அடுத்த செப்ரெம்பர் மாதத்தில் இருந்து டிசெம்பர் மாதம் வரையான மூன்று மாத காலப்பகுதியில் 23 ஆட்டங்களில் விளையாடவுள்ளது என்று தகவல் வந்துள்ளது. அதுவும் இந்த மூன்று மாத காலப்பகுதியிலும் சொந்த மண்ணிலேயே இந்தியா விளையாடவுள்ளது.

ஆஸ்திரேலியா, இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகள் இந்தியாவுக்குச் சென்று விளையாடவுள்ளன. 3 டெஸ்ட் ஆட்டம், 11 ஒருநாள் ஆட்டம், 9 ரி-20 ஆட்டம் என்றவாறாகவே தனது சொந்த மண் ஆட்டங்களை இந்தியா எதிர்கொள்கிறது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர் செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதியும், நியூசிலாந்துக்கு எதிரான தொடர் ஒக்ரோபர் 22ஆம் திகதியும், இலங்கைக்கு எதிரான தொடர் நவம்பர் 15ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இலங்கை இந்தியத் தொடரில் மூன்று டெஸ்ட், மூன்று ஒருநாள், மூன்று ரி-20 ஆட்டங்கள் இடம்பெற்றுள்ளன. (ம)

# மன்செஸ்டர் யுனைற்றெட்டில் ஒப்பந்தமாகினார் நெமன்ஜா

செல்சி அணியின் மத்தியகள வீரரான நெமன்ஜா மட்டிக், மன்செஸ்டர் யுனைற்றெட் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு முன் ... ரியின் முகாமையாளராக இருந்த மொரின்கோ ... செஸ்டர் யுனைற்றெட் அணியின் முகாமையாளர ... மொரின்கோவின் நம்பிக்கையை வென்ற வீரர்கள் ... மட்டிக்கும் ஒருவர். இந்தப் பின்னணியிலேயே அ... றெட்டுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

சுமார் 40 மில்லி... ங் பவுண்டுகள் பெறுமதியில் இந்த ஒப்பந்தம் கைச்ச... கடந்த பருவகாலத்தில் மன்செஸ்டர் யுனைற்றெட் பெ... கவில்லை. இதனால் மன்செஸ்டர் அணியின் நிர்வ... பருவகாலத்தில் (2017 - 2018) முக்கிய வீரர்களை ஒ... து அணியைப் பலப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்... (ம)



Softlogic Finance
தங்க கடன்
அவசர பணத்தேவைக்கு உங்கள் தங்கப் பவுணுக்கு அதிகூடிய முற்பணம்

முன்கூட்டிய அறிவித்தலின்றி தங்கநகைகளை துரிதமாக மீட்கும் வசதி
தங்க நகைகளுக்கு பூரண பாதுகாப்பு
செயற்றிறன் மிக்க சினேகபூர்வமான ஊழியர்கள்
பகுதிக் கொடுப்பனவுகள் செய்யும் வசதி
தெரிவுசெய்வதற்கு முற்பண கொடுப்பனவு முறைமைகள் பல



24 கரட் ரூ. 45,500/-
22 கரட் ரூ. 38,000/-

சுன்னாகம் - 0722 527664, 0212 242775
யாழ்ப்பாணம் - 0722 334596, 0212 219444
*நிபந்தனைகளுக்குட்பட்டது

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 . 09 . 1948

உதிர்வு 14 . 08 . 2016



திருமதி
பாக்கியம் (கிளி) செல்லத்துரை

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த எமது அம்மாவே
உங்கள் பசுமையான பேச்சும் பதுமை நடையும்
நொடியினில் காணாது தவிக்கின்றோம்
என்றும் எங்கள் பேச்சில் நிறைந்திருப்பீர்கள் அம்மா
வாழ்க்கையில் மீண்டும் குழந்தையாய்
எங்களிடமே வருவீர்கள் தானே அம்மா
இன்றுடன் ஓராண்டு முடிந்ததும் மட்டும் அல்ல மீண்டும்
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு மறையாது அம்மா

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

இல. 31, 6ஆம் ஒழுங்கை, ..., வவுனியா

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.